மௌனத்தின் மௌனம்

மறைந்த நிலத்தின் கதைகள்



நிஜத்தடன் நிலவன்

தயாரிப்பு:
உயிர்ப்பூ

வெளியீடு:
வெளியீட்டுப் பிரிவு
தமிழீழ விடுதலைப் புலிகள்

பதிப்புரிமைப் பக்கம்

நூல்	:	சிறுகதை
நூலின் பெயர்	:	மௌனத்தின் மௌனம்
நூலின் வகை	:	போர்க்கால இலக்கியம்
தயாரிப்பு	:	உயிர்ப்பு
பதிப்புரிமை	:	ஆசிரியருக்கு
வெளியீடு	:	வெளியீட்டுப் பிரிவு
பக்கம்	:	156
பிரதிகள்	:	2000
முதற்பதிப்பு	:	2026, மே. 18
அட்டை மற்றும் பக்க வடிவமைப்பு	:	பல்லவி
அச்சுப்பதிப்பு	:	எல்லாளன் ஓஃப்செட் பிரிண்டர்ஸ்
ISBN	:	9 - 780645 - 038330
மின்னஞ்சல்	:	uyirpumedia@gmail.com
பங்களிப்பு	:	அமெரிக்கா $20.00, ₹ ஐரோப்பா 20.00, கனடா $20.00, அவுஸ்திரேலியா $20.00, இலங்கை ரூ. 650.00, இந்தியா €250.

நீதிக்கான எழுச்சி

இன அழிப்பின்
இரத்த மண்ணில்
எழுந்து நிற்கும் சாட்சிகள் நாம்.

எரிந்த வீடுகளின் சாம்பலில்
எழுந்த குரல் நாம்
அழிந்த கிராமங்களின்
நினைவாய் வாழும் மக்கள் நாம்.

கண்ணீரை கிழித்தாலும்
நம்பிக்கையை இழக்கமாட்டோம்
சிதைந்த சூழலும்
நம் விழி வெளிச்சம் அணையாது.

தாயகத்தின் காயங்களில்
இன்னும் புகை எழுகிறது
அந்த நிழலில்
நீதியை தேடும் நடை தொடர்கிறது.

தாயகம் தொடர்
தமிழகம் முதல்
உலகப் புலம்பெயர் வரை
ஒரே குரல் ஒலிக்கிறது.

எங்கள் இனம் ஒன்று
எங்கள் மொழி ஒன்று,
எங்கள் நிலம் ஒன்று,
எங்கள் தேசியம் ஒன்று.
எங்கள் இலக்கு ஒன்று.

மௌன சுவர்களை உடைத்து
நீதியை நோக்கி
ஒன்றிணைந்து எழுகிறோம்.
நாளை எமக்கான விடியல் உண்டு
என்ற நம்பிக்கையுடன்...

படையல்

ஈழ தேசத்தில்
பௌத்த சிங்கள
பேரினவாத அரசும்
உலக நாடுகளும் இணைந்து
நடாத்திய தமிழின அழிப்பில்
படுகொலை செய்யப்பட்ட
உறவுகளுக்கு.....









மௌனத்தின் மௌனம்
சொற்கள் மறந்த இடம்.

உள்ளம் பேசாமல்
உணர்வுகள் நின்று போகும்
அமைதியின் ஆழ்கடல்.

அங்கே குரல்கள் இல்லை,
ஆனால் உண்மை இருக்கிறது.
அங்கே சத்தம் இல்லை,
ஆனால் ஆன்மா பேசுகிறது.

உயிர்கள் போன பின்
மண் மட்டும் சாட்சியாக
நின்றுகொண்டிருக்கும்
அமைதியின் பெயர்
மௌத்தின் மௌனம்.

பொருளடக்கம்

01.	முகவுரை	7
02.	தயாரிப்புரை	11
03.	வாழ்த்துரை	14
04.	அணிந்துரை	16
05.	உங்களுடன்	23
01.	மண்ணை விடப் பெரிய காதல்	27
02.	விடியற் காலத்தின் முன்	32
03.	அமைதியின் உடைந்த வட்டம்	37
04.	மணலில் மறைந்த உயிர்	42
05.	கஞ்சிக்காக ஓடிய கால்கள்	47
06.	பசியின் நிழல்	53
07.	கடைசிக் கட்டு	57
08.	நினைவுகளின் சாட்சி	62
09.	அருட்சகோதரி மரியாளின் ஒரு குண்டு	66

10. மௌனத்தின் ஓலம் 70

11. மௌனத்தின் சாட்சி 74

12. கடல் இன்னும் வரவில்லை 78

13. கப்பலும் கரையொதுங்கிய மக்களும் 82

14. நந்திக் கடலில் மறைந்த குரல் 86

15. சரணடைந்த கைகள் 93

16. வட்டுவாகல் பாலத்தில் விடப்பட்ட கை 98

17. அப்பா எப்ப வருவார்? 102

18. மௌனத்தின் வரிசை... 106

19. மௌனத்தின் அறைகள் 112

20. மறைந்த ஒளி 116

21. அவள் பெயர் இன்னும் ஒலிக்கிறது 120

22. மெதுவான மரணம் 126

23. தலை இழந்த பனை மரங்களின் கீழ் 130

24. மௌனத்தின் குப்பி 135

25. ஆலமர நிழலில் 141

26. இரண்டு நிழல்களின் காத்திருப்பு 146

27. மங்களப் பாட்டியின் நிலாச்சோறு 151

முகவுரை



விசாலகன்

“மௌனத்தின் மௌனம்: மனித மனத்தின் அமைதியான குரல்”

நான் நன்கு அறிவேன் நிலவனை தமிழினத்தின் அழிவுக்கு எதிரான நீதி தேடும் பயணத்தில் அவன் செய்துவரும் பணி அளவு கடந்தது. வரும் எல்லா சவால்களையும் துணிச்சலுடன் எதிர் கொண்டு, தலைவன் காட்டிய பாதையை எப்போதும் மனதில் வைத்தே, இன்று வரை அயராது கலை மற்றும் இலக்கியத்தில் அற்புதமான தேசியப் படைப்புகளை வழங்கி வருகின்றான்.

தலைவரால் வளர்க்கப்பட்ட சிறந்த கலைஞன், கலைப் பண்பாட்டுக் கழகத்தின் வளர்ச்சியில் வீரியமாகப் பயணித்து வருகிறான் . மனித மனத்தின் மறைந்த உண்மைகளைத் தொடும் அவனின் முதல் சிறுகதை:

“மௌனத்தின் மௌனம்”

மனித வாழ்வின் ஆழமான உண்மைகள் பெரும்பாலும் வார்த்தைகளில் அல்ல, மௌனங்களில்தான் பிறக்கின்றது. சில உணர்வுகள் சொல்லப்படாமல் நெஞ்சின் ஆழத்தில் தங்குகின்றது; சில வேதனைகள் வெளிப்படாமல் நினைவுகளின் இருளில் உறை கின்றது. அவை வெளியில் ஒலிக்காதபோதும், மனித மனத்தின்

உள் உலகில் மிகப் பெரிய அதிர்வுகளை உருவாக்குகின்றது. அந்த அமைதியான அதிர்வுகளின் தொகுப்பாகவே "மௌனத்தின் மௌனம்" என்ற இந்தச் சிறுகதைத் தொகுப்பு உருவாகியுள்ளது.

ஒரு சமுதாயத்தின் உண்மையான வரலாறு அரசியல் நிகழ்வு களிலும் அதிகாரப் பதிவுகளிலும் மட்டுமே எழுதப்படுவதில்லை. அது சாதாரண மனிதர்களின் வாழ்க்கையில், அவர்களின் அன்றாட அனுபவங் களிலும், சிறிய மகிழ்ச்சிகளிலும் அமைதி – போராட்டங்களிலும் மறைந்து கிடக்கிறது. அந்த மறைந்த குரல்களைக் கவனமாகக் கேட்டு, அவற்றை இலக்கியத்தின் மொழியில் வெளிப்படுத்துவது ஒரு எழுத்தாளரின் முக்கிய பொறுப்பு. அந்தப் பொறுப்பை உணர்ந்த நிலவனின் வெளிப்பாடாக இந்நூல் அமைந்துள்ளது.

இந்தத் தொகுப்பில் இடம்பெறும் கதைகள் வெறும் நிகழ்வுகளின் பதிவு அல்ல; அவை மனித வாழ்க்கையின் பல அடுக்குகளைத் தொடும் அனுபவங்களின் காட்சிகளாக அமைந்துள்ளது.

மக்கள் பட்ட வலிகளை அவர்களோடு ஒருவனாய் அனுபவித்து, வீரியமாக அந்த அனுபவங்களுக்கு வரியமைத்துள்ளான். இங்கு குறிப் பிடப்படும் சம்பவங்கள் மட்டுமல்ல; அவை பலரது மனங்களுக்குள் உணர்வுகளாகவும் நிலைத்திருக்கிறது.

ஒவ்வொரு கதையும் ஒரு மனிதனின் மனநிலையையும், ஒரு குடும்பத்தின் உணர்வுகளையும், ஒரு காலத்து இடறையும், சமூகச் சிந்தனைகளையும் பிரதிபலிக்கும் சிறு உலகமாக உருவாகிறது. வெளிப்படையாக எளிமையாகத் தோன்றும் வாழ்க்கையின் உள்ளே எவ்வளவு ஆழமான உணர்வுகள் மறைந்துள்ளது என்பதை இக்கதைகள் மெதுவாக வாசகருக்கு உணர்த்தும். வாசகரின் உணர்வுகளை ஆழமாக உலுக்கும் உயர்ந்த படைப்பு.

இக்கதைகளில் மண், நினைவு, இழப்பு, எதிர்பார்ப்பு, காதல், தனிமை, நம்பிக்கை போன்ற மனித வாழ்வின் பல உணர்ச்சிகள் ஒன்றோடொன்று கலந்துள்ளது. ஒரு சாதாரண நிகழ்வுகூட மனித மனத்தில் எவ்வளவு ஆழமான தடத்தை ஏற்படுத்த முடியும் என்பதை

இந்நூலின் கதைகள் நமக்குக் காட்டுகின்றது. அந்த அனுபவங்கள் சில சமயம் வேதனையாகவும் சில சமயம் நம்பிக்கையாகவும் மாறுகின்றது. ஆனால், அவை அனைத்தும் மனித வாழ்க்கையின் உண்மையான படிமங்களே.

இந்தத் தொகுப்பின் கதைகளில் குறிப்பிடத்தக்க அம்சம் அதன் மௌன உணர்வு. பல கதைகளில் பாத்திரங்கள் அதிகம் பேசுவதில்லை; ஆனால், அவர்களின் மௌனம் பல அர்த்தங்களை வெளிப்படுத்துகிறது. அந்த மௌனம் வாசகரின் மனதில் எண்ணற்ற கேள்விகளை எழுப்பு கிறது. சில கதைகள் வாசித்தபின் நீண்ட நேரம் மனதில் அமைதியான சிந்தனையை உருவாக்குகின்றது. அந்த சிந்தனைதான் ஒரு நல்ல இலக்கியத்தின் உண்மையான வெற்றி.

நிலவனின் எழுத்து நடை எளிமையானதாய் இருந்தாலும் அதன் உள்ளடக்கம் ஆழமானது. தேவையற்ற அலங்காரங்கள் இல்லாமல், வாழ்க்கையின் உண்மையை நேரடியாகத் தொடும் மொழிநடை இந் நூலில் காணப்படுகிறது.

அவன் பேனா முனையில் வரைந்த வரிகள் காலங்களைக் கடந்தும், நினைவுகளை மக்களிடமிருந்து அகற்றாமல் பாதுகாத்துக் கொண்டு செல்கிறது. ஒவ்வொரு கதையும் இனம்பட்ட அவலங்களின் பதிவுகள் இரத்தத்தாலும் கண்ணீராலும் வரையப்பட்ட மறக்க முடியாத தடங்கள். அந்த எளிமையும் ஆழமும் சேர்ந்து இந்தக் கதைகளை வாசகரின் மனதில் நீண்டகாலம் நிலைத்திருக்கச் செய்யும்.

இலக்கியத்தின் உயர்ந்த நோக்கம் வாசகரின் மனதில் புதிய சிந்தனையை உருவாக்குவதாகும். இந்தத் தொகுப்பில் உள்ள கதைகள் அந்த நோக்கை நிறைவேற்றுகின்றது. அவை வாசகரை வெறும் கதை களை வாசிக்கச் செய்வதில்லை; அவரைத் தனது சொந்த நினைவு களையும் அனுபவங்களையும் பற்றி சிந்திக்கத் தூண்டுகின்றது. சில கதைகள் மனதை நெகிழச் செய்யலாம். சில கதைகள் வாழ்க்கையின் உண்மைகளை நேருக்கு நேர் காட்டுகிறது. சில கதைகள் ஒரு விளக்க மளிக்க முடியாத அமைதியை மனத்தில் உருவாக்குகிறது.

அதனால் “மௌனத்தின் மௌனம்” என்பது ஒரு சாதாரண சிறுகதைத் தொகுப்பு அல்ல. இது மனித மனத்தின் உள் உலகத்தை ஆராயும் ஒரு போர்க்கால இலக்கியப் படைப்பு. அந்தப் பயணத்தில் வாசகர் பல உணர்ச்சிகளைச் சந்திப்பார். துயரம், நம்பிக்கை, நினைவு, எதிர்பார்ப்பு, அமைதி.

அந்த அமைதியின் ஆழத்தில்தான் இந்நூலில் உண்மையான குரல் ஒலிக்கிறது. அது கூச்சலிடும் குரல் அல்ல; மெதுவாக மனித மனத்தில் எதிரொலிக்கும் ஒரு நுண்ணிய குரல். அந்த குரல்தான் வாசகரின் நினைவில் நீண்டகாலம் நிலைத்திருக்கும்.

தமிழ் சிறுகதை மரபில் மனித வாழ்க்கையில் மறைந்த உண்மை களை வெளிப்படுத்திய பல படைப்புகள் உள்ளன. அந்த மரபின் தொடர்ச்சியாக, மனித வாழ்வின் மௌனங்களையும் நினைவு களையும் பதிவு செய்யும் முயற்சியாக இந் நூல் உருவாகியுள்ளது.

வாசகராய் இந்த நூலைத் திறக்கும்போது, அவர் கதைகளை மட்டும் வாசிக்கப் போவதில்லை. மனித வாழ்க்கையின் ஆழமான உண்மைகளைச் சந்திக்கப் போகின்றீர்கள். அந்த உண்மைகள் சில நேரங்களில் வலியாக இருக்கலாம் சில நேரங்களில் நம்பிக்கையாக இருக்கலாம் ஆனால் அவை அனைத்தும் வாழ்க்கையின் போர்க்கால உண்மைப் பிரதிபலிப்புகளே.

விடுதலை வீச்சு குறைந்தபோது, அதன் தீயில் வெந்து வந்தவன் குரல் இங்கு ஓங்கி ஒலிக்க வேண்டும்.

அந்த பிரதிபலிப்புகளின் அமைதியான குரலே –

“மௌனத்தின் மௌனம்.”

தயாரிப்புரை



ஒரு மண் எரிந்தால் அதன் புகை வானத்தில் மறைந்து போகலாம்.

ஆனால், அந்த மண்ணில் வாழ்ந்த மனிதர்களின் கதைகள் எளிதாக மறைந்து போவதில்லை.

ஒரு காலத்தில் இந்த நிலங்களில் காலையின் முதல் ஒலி கோழியின் கூவலாக இருந்தது.

வயல்களில் நெல் அசைந்தது.

கடற்கரையில் வலை வீசிய மீனவர்கள் திரும்பி வந்தார்கள்.

பள்ளி வழியில் ஓடிய குழந்தைகளின் சிரிப்பு அந்த கிராமங்களின் மொழியாக இருந்தது.

பிறகு ஒரு நாள் –

அந்த ஒலிகள் மாறின.

வானத்தில் பறந்தது பறவைகள் அல்ல.

வெடிப்புகளின் சத்தம்.

மண்ணைத் தொட்டது மழை அல்ல.

புகையும் தூசியும்.

அந்த நாள்களிலிருந்து மனிதர்களின் வாழ்க்கை இரண்டு பகுதிகளாக உடைந்தது –

போருக்கு முன் இருந்த வாழ்க்கை,

போருக்குப் பிறகு தொடங்கிய வாழ்க்கை.

இந்நூலில் உள்ள கதைகள் அந்த உடைந்த நேரத்தின் நினைவுகள். இவை வெறும் கதைகள் அல்ல; மனிதர்களின் சுவாசங்களிலிருந்து பிறந்த சாட்சிகள்.

ஒரு போரின் நடுவே கூட மனிதர்கள் மனிதர்களாகவே இருக்க முயன்ற தருணங்கள் – அந்த தருணங்களே இக்கதைகளின் இதயம்.

இந் நூலில் இடம் பெற்றுள்ள இருபத்தேழு கதைகளும் ஒரு காலத்தின் மௌனமான சாட்சிகள். ஒவ்வொரு கதையும் ஒரு உண்மை சம்பவத்தின் நிழலில் உருவானது. சில கதைகளில் மனிதர்களின் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன. சில இடங்கள் மறைக்கப்பட்டுள்ளன.

சில சம்பவங்கள் காலத்தின் இடைவெளியில் மறைந்து போகாமல் மீண்டும் சொல்லப்பட்டுள்ளன. ஆனால் இந்த கதைகளின் மைய உண்மை அது மாற்றப்படவில்லை.

இலக்கியம் சில நேரங்களில் ஒரு சமூகத்தின் மௌனத்தை மொழியாக மாற்றுகிறது. சொல்ல முடியாத துயரங்கள் கதைகளாக மாறும்போது,

அவை தனிப்பட்ட நினைவுகளாக இல்லாமல் ஒரு காலத்தின் சாட்சிகளாக மாறுகின்றன. இந்தக் கதைகள் வெறும் போரின் கதைகள் அல்ல.

இவை மனிதர்களின் கதைகள். அழிவுகளுக்கிடையிலும் ஒருவர் எப்படி வாழ முயன்றார், ஒருவரை ஒருவர் காத்தார், நம்பிக்கையை விடாமல் பிடித்துக்கொண்டார் என்பதற்கான சாட்சிகள்.

ஒரு காலத்தில் நடந்த சம்பவங்கள் சில நேரங்களில் மௌனமாகி விடுகின்றன. ஆனால், அந்த மௌனத்துக்குள் இன்னும் சொல்லப்படாத பல கதைகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

இந்நூல் அந்த மௌனத்தை உடைக்கும் ஒரு முயற்சி. இந்தப் பக்கங்களைத் திறக்கும்போது வாசகர்கள் வெறும் கதைகளை வாசிக்கப் போவதில்லை.

அவர்கள் ஒரு மண்ணின் நினைவுகளுக்குள் நடந்து செல்லப் போகிறார்கள். அந்த நினைவுகள் அவர்களிடம் ஒரே கேள்வியை எழுப்பும்:

“ஒரு மனிதனின் நினைவு எவ்வளவு தூரம் உயிர்ப்புடன் இருக்க முடியும்?” அந்தக் கேள்விக்கான பதிலாகவே இந்தக் கதைகள் எழுதப் பட்டுள்ளன. இந்நூலை வாசிக்கும் ஒவ்வொருவரும் அந்த நினைவு களின் சாட்சிகளாக மாறுவார்கள்.

வாழ்த்துரை

எழுத்தாளர்:
மறத்தி ஆழியா



மறைந்த நிலத்தின் மறக்க முடியாத க(வி)தைகள்.

மண்ணோடு மண்ணாக மக்காத கதைகள். உரமாகி, உறங்காத இதயங்களில் அவை எப்போதும் விதைகளாக இருக்கின்றன.

அவற்றோடு பயணித்தவர்கள் அதீதமாக நீரூற்றி அவற்றை உயிர்ப்பிக்கும் விந்தைகளை பலரது எழுத்தாற்றலின் ஊடாக காணும்போதுதான் எழுத்தாளர் “நிஜத்தடன் நிலவன்” தன் எழுத்துக்களின் ஊடாக எம் இனத்தின் அவலங்களை, காயங்களை, தழும்புகளை அடுத்த தலைமுறைக்கு மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் வாழும் தமிழர்களும், சகல இனத்தவர்களும் அறிந்து கொள்ளும் வகையில்... பெரும் கதைகளை உட்கருப்பொருளாக்கி, சிறுகதை வடிவில் தொகுத்து வழங்கியுள்ளார்.

அவரது ஒவ்வொரு முயற்சியிலும் தேசம், மக்கள், மறவர்கள் என இனம் சார்ந்த உணர்வுகளை கலவையாகக் கொண்டு எழுத்து வடிவில் தொடர்ந்து வழங்கி வருகிறார்.

அவரது எழுத்துக்கள் பலரது ஆழ்மனதில் புதைந்து காண முற்படும் உண்மைகளைத் தழுவியதாகவே இருக்கும். ஒரு

நேர்முக நோக்கில் யதார்த்தமான உண்மைகளைச் சொல்வனவாக இருக்கும்.

அழகான தமிழ் வார்த்தைகளைத் தூவி நிறைத்து இருப்பார். அவரது படைப்புகளில் மௌனத்தின் மௌனம் என்ற சிறுகதை வடிவமே முதன்மையான வெளிப்பாடாகத் தோன்றுகிறது.

ஒரு மனிதனின் எழுத்திற்கு அப்பால் அவனது செயற்பாடே உயிர் பெறுகிறது. இந்த உணர்வாளனின் நல்ல எண்ணத்தின் சாயல் தான் "மௌனத்தின் மௌனம்" எனும் சிறுகதைத் தொகுப்பாக உருவம் பெற்றுள்ளது.

அந்த வகையில் இந்நூலுக்கு வாழ்த்துரை எழுதுவதில் பெரும் அகநிறைவு கொள்கிறேன்.

மேன்மேலும் எம் வரலாற்றைத் தழுவிய பல படைப்புகள் உருவாகட்டும், உருவாக வேண்டும் என்ற அபிலாசை நிறைந்த மனதோடு.... அவை அனைவராலும் நேசிக்கப்படும் விதமாக நூலாகப் பேசப் படட்டும் என வாஞ்சை கொள்கிறேன்.

"மௌனத்தின் மௌனம்" பலரது மௌனங்களை மொழி பெயர்க்கும் என்பதில் சந்தேகமில்லை.

வாழ்த்துகள் நிலவன்!

அணிந்துரை



தமிழ் சிலம்பரசன்
(இயக்குநர், ஊடகவியலாளர் – மருத்துவர்)

ஒரு காலத்தின் சாட்சியமும் மௌனத்தின் மொழியும்

ஒரு சமூகத்தின் வரலாறு என்பது அதிகார மையங்களால் எழுதப்படும் தரவுகள் அல்ல; அது அந்த நிலத்தில் வாழ்ந்த, வீழ்ந்த, இடம்பெயர்ந்த சாமானிய மனிதர்களின் குருதியாலும் கண்ணீராலும் எழுதப்படுபவை. அந்த வகையில், முள்ளிவாய்க்கால் என்னும் மாபெரும் மானுடப் பேரிடரை அதன் ஆன்மா சிதையாமல் பதிவு செய்திருக்கும் ஒரு மிக முக்கியமான ஆவணமாகவே "மௌனத்தின் மௌனம்" சிறுகதைத் தொகுப்பு நமக்குப் முன்னால் விரிகிறது.

இந்நூலின் தலைப்பு உணர்த்துவதுபோல, இது பேசப்பட்ட கதை களைவிட, பேச முடியாமல் நெஞ்சுக்குள் புதைக்கப்பட்ட பெருவலிகளைப் பேசுகிறது.

காலத்தின் சாட்சியம்: முள்ளிவாய்க்கால் நினைவுகளின் தொகுப்பு

இந்தத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள 27 கதைகளும் வெறும் கற்பனைச் சித்திரங்கள் அல்ல; அவை ஒவ்வொன்றும் முள்ளிவாய்க்கால் மண்ணின் ஈரம் காயாத உண்மைச் சம்பவங்களின் சாட்சியங்கள். ஒரு அமைதியான கிராமிய வாழ்வு எவ்வாறு போரின் கோரத்தாண்டவத்தால் சிதைக்கப்பட்டது, உறவுகளும் கனவுகளும் எவ்வாறு கண் முன்னே கருகின என்பதை இந்நூல் மிக நேர்மையாகப் பதிவு செய்கிறது.

இங்கு கதைகள் கூச்சலிடுவதில்லை. மாறாக, அவை வாசகனை ஒரு அடர்ந்த மௌனத்திற்குள் தள்ளுகின்றன. அந்த மௌனம்தான் போரின் மிகக் கொடுமையான மொழியாக உருவெடுக்கிறது.

அரசியல் பரிமாணம்: அதிகாரமற்றவர்களின் குரல்

அரசியல் ரீதியாகப் பார்த்தால், "மௌனத்தின் மௌனம்" ஒரு வலிமையான அரசியல் ஆவணம். போர் என்பது வெறும் வரைபடங் களில் நடக்கும் மாற்றமல்ல; அது மனிதர்களின் வாழ்வில் ஏற்படுத்தும் நிரந்தரமான வடுக்கள் என்பதை இந்நூல் உரக்கச் சொல்கிறது.

மௌனம்: ஒரு கதையாடல் மொழி

இந்நூலின் தலைப்பே ஒரு முரண் (Paradox). மௌனத்திற்கே ஒரு மௌனம் இருக்கிறது என்றால், அது சொல்ல முடியாத துயரத்தின் உச்சம் என்று பொருள்.

"மௌனத்தின் ஒலி" (10), "மௌனத்தின் சாட்சி" (11), "மௌனத்தின் வரிசை" (18), "மௌனத்தின் அறைகள்" (19), "மௌனத்தின் குப்பி" (24) என மௌனம் இத்தொகுப்பில் ஒரு கதாபாத்திரமாகவே வாழ்ந்திருக்கிறது.

பேச வேண்டிய இடங்களில் உலகம் ஊமையாக இருந்ததையும், அழ வேண்டிய இடங்களில் கண்கள் வறண்டு போயிருந்ததையும் இந்தத் தலைப்புகள் மிக நுணுக்கமாகப் பேசுகின்றன.

சிதைக்கப்பட்ட வாழ்வியலும் நிலமும்

- முள்ளிவாய்க்கால் என்பது நிலத்தின் இழப்பு மட்டுமல்ல; அது ஒரு வாழ்வியலின் முடிவு.
- "தலை இழந்த பனை மரங்களின் கீழ்" (23) என்ற தலைப்பு ஒரு இனத்தின் அடையாளச் சிதைவை ஒற்றை வரியில் காட்சிப் படுத்துகிறது.
- "வட்டுவாகல் பாலத்தில் விடப்பட்ட கை" (16) – இது ஒரு கதை யல்ல; ஒரு இனத்தின் துண்டிக்கப்பட்ட உறவின் சாட்சியம். அந்தப் பாலத்தில் எத்தனையோ உறவுகள் பிரிக்கப்பட்டதை, ஒரு கேமராவின் கோணத்தில் (Cinematic perspective) பார்ப்பதுபோல நம் கண்முன்னே நிறுத்துகிறது இத்தலைப்பு.

- “மணலில் மறைந்த உயிர்“ (04) மற்றும் “நிழலில் மறைந்த குரல்“ (14) போன்றவை ஒரு மாபெரும் நிலப்பரப்பு எப்படி சுடுகாடாக மாறியது என்பதைக் குறிப்பால் உணர்த்துகின்றன.

போர் தந்த வலிகளும் பிஞ்சு மனங்களும்

யுத்தத்தின் மிகக் கொடுமையான முகம், அது குழந்தைகளின் உலகைச் சிதைப்பதுதான்.

- “அப்பா எப்ப வருவார்?“ (17) என்ற தலைப்பு வாசகனின் நெஞ்சைப் பிசையும் ஒரு கேள்வி.

- “மங்களப் பாட்டியின் நிலாச்சோறு“ (27) – போரின் நடுவே ஒரு பாட்டி தன் பேரப்பிள்ளைகளுக்கு நிலாச்சோறு ஊட்டும் அந்த ஒரு கணம், எத்தகைய கொடூரமான சூழலிலும் மனித நேயம் எஞ்சி நிற்பதைக் காட்டுகிறது. அதேசமயம், அந்த நிலாச்சோறு ஒருவேளை அவர்களின் இறுதி உணவாகக்கூட இருந்திருக்கலாம் என்ற அச்சத்தையும் ஏற்படுத்துகிறது.

அரசியல் மற்றும் இலக்கியப் பார்வை

அரசியல் ரீதியாக, இத்தொகுப்பு அதிகார மையங்களுக்கு எதிராக வைக்கப்பட்ட ஒரு குற்றப் பத்திரிகை. “ஆருயிர் சகோதரி மரியாவின் ஒரு துண்டு” (09) போன்ற தலைப்புகள் போரின் வன்முறை உடல்கள் மீது நிகழ்த்திய அரசியலைத் தோலுரித்துக் காட்டுகின்றன.

இலக்கிய ரீதியாக, இந்த 27 கதைகளும் “மௌனம்” மற்றும் “நிழல்” என்ற இரண்டு குறியீடுகளை (Symbols) மையமாகக்கொண்டு சுழல் கின்றன. “இரண்டு நிழல்களின் காத்திருப்பு” (26) மற்றும் “நிழலின் நிழல்” (06) போன்றவை பிரிவையும் காத்திருப்பையும் மிக நேர்த்தி யாகப் பேசுகின்றன.

ஒரு வாசகனின் அனுபவம்

இந்நூலை வாசிக்கும் ஒரு வாசகன், கதைகளை வாசிக்கமாட்டான். மாறாக அந்த 2009 இன் மே மாத நாட்களை மீண்டும் ஒருமுறை வாழ்வான். “விடியும் காலத்தின் முன்” (02) தொடங்கி “மங்களப்

பாட்டியின் நிலாச்சோறு" (27) வரை ஒரு நீண்ட நெடிய துயரப் பயணம் இது.

ஒரு படைப்பாளியாக நான் சொல்வேன்:

- இடம்பெயர்வு: நிலத்தை இழப்பது என்பது வெறும் இடத்தை இழப்பது அல்ல; அது ஒரு இனத்தின் அடையாளத்தையும் வரலாற்றையும் இழப்பதாகும்.
- அதிகாரத்திற்கு எதிரான நினைவு: அதிகாரம் வரலாற்றை மறைக்க முயலும்போது, இலக்கியம் அந்த வரலாற்றைத் தன் நினைவுகள் வழியாக மீட்டெடுக்கிறது. இக்கதைகள் அத்தகைய ஒரு மீட்புப் பணியைச் செய்கின்றன.
- மனித விலை: போர் குறித்த வீர வசனங்களுக்குப் பின்னால் மறைந்திருக்கும் பெண்களின் தியாகம், குழந்தைகளின் பயம், தந்தையரின் கையறு நிலை எனப் போரின் "மனித விலையை" அரசியல் அறத்தோடு இக்கதைகள் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன.

இலக்கிய நுட்பம்: மௌனமே ஒரு உரைநடையாக...

இலக்கியத் தரப்பில், இந்நூல் நவீன சிறுகதை மரபின் மிகச் சிறந்த கூறுகளைக் கொண்டுள்ளது. தேவையற்ற அலங்காரங்களோ, மிகையான உணர்ச்சி வெளிப்பாடுகளோ இன்றி, "மினிமலிச" (Minimalist) பாணியில் கதைகள் சொல்லப்பட்டுள்ளன.

- குறைவான சொற்கள், நிறைவான உணர்வு: பல இடங்களில் கதாபாத்திரங்கள் பேசுவதைவிட, அவர்கள் பேசாமல் நிற்கும் தருணங்களே அதிக அர்த்தத்தைத் தருகின்றன. சொல்லப்படாத இடைவெளிகள் (Unsaid Spaces) வாசகனை ஒரு இணை எழுத்தாளனாக மாற்றி, கதையை அவனது சொந்த அனுபவமாக உணர வைக்கின்றன.
- சின்னவியல் (Symbolism): மண், சிதைந்த பாதை, கருகிய நிலம் போன்றவை வெறும் காட்சிகளாக இல்லாமல், ஒரு இனத்தின் சிதைந்த வாழ்வின் குறியீடுகளாகக் கையாளப்பட்டுள்ளன.

- காலத்தின் சிதைவு: கதைகள் நேர்க்கோட்டில் நகரவில்லை; அவை நினைவுகளின் அலைகளாக முன்னும் பின்னும் நகர்கின்றன. இது முள்ளிவாய்க்கால் போன்ற ஒரு பேரதிர்ச்சியைச் சந்தித்த மனதின் இயல்பான பிரதிபலிப்பாகும்.

நினைவு... இழப்பு... நம்பிக்கை

இந்தத் தொகுப்பை மூன்று தூண்கள் தாங்கி நிற்கின்றன: நினைவு, இழப்பு மற்றும் நம்பிக்கை. இழந்த நிலத்தையும் பிரிந்த உறவுகளையும் நினைவுகூர்வதன் மூலம் அந்த வலியை ஒரு கூட்டு அனுபவமாக மாற்றுகிறார் ஆசிரியர். ஆனால், இந்த வேதனைகளுக்கு இடையிலும் ஒரு மெல்லிய இழை போல "நம்பிக்கை" ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த நம்பிக்கை தான் இந்தச் சமூகத்தைத் தொடர்ந்து இயங்கச் செய்கிறது.

"மௌனத்தின் மௌனம்" வாசித்துவிட்டு மூடி வைக்கக்கூடிய ஒரு புத்தகமல்ல. இது நம் மனசாட்சியைக் குடைந்து கொண்டே இருக்கும் ஒரு தொடர் அனுபவம். போரின் வடுக்களைச் சுமந்திருப்பவர்களுக்கு இது ஒரு வடிகால் அந்த வலியை அறியாதவர்களுக்கு இது ஒரு கசப்பான பாடம்.

இந்த நூல் நமக்குச் சொல்லும் செய்தி ஒன்றுதான்:

"அதிகாரம் வரலாற்றை மாற்றியெழுதலாம், ஆனால், மக்களின் நினைவுகளில் உறைந்திருக்கும் உண்மையை ஒருபோதும் அழிக்க முடியாது."

காலத்தை இணைக்கும் பாலம்: தாயகம், தமிழகம், புலம்பெயர் தேசம்

இந்த 27 சிறுகதைகளும் வெறும் காகிதங்களில் அச்சடிக்கப்பட்ட சொற்கள் அல்ல; இவை ஈழத்தின் நிலப்பரப்பிலிருந்து உலகெங்கும் சிதறிப்போன தமிழ் ஆன்மாக்களை இணைக்கும் ஒரு உணர்வுப் பாலம்.

முள்ளிவாய்க்கால் என்பது ஒரு குறிப்பிட்ட புவியியல் நிலப்பரப்பில் நடந்த போர் மட்டுமல்ல; அது உலகத் தமிழினத்தின் மனசாட்சி மீது விழுந்த ஆறாத வடு. இன்று நாம் தாயகத்தில் எஞ்சியிருப்பவர்களாக இருக்கலாம், தமிழகத்தில் தொப்புள்கொடி உறவுகளாக இருக்கலாம்

அல்லது புலம்பெயர் தேசங்களில் புதிய வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்களாக இருக்கலாம். ஆனால், நம் அனைவரையும் பிணைக்கும் ஒற்றைப் புள்ளி – அந்த நிலத்தின் மௌனம்.

இந்த நூல் சொல்லும் செய்தி இதுதான்:

“நிலங்கள் பிரிக்கப்படலாம், எல்லைகள் கோடிடப்படலாம். ஆனால், நம் வலிகளும் நம் நினைவுகளும் ஒன்றே. முள்ளிவாய்க்கால் என்பது வீழ்ச்சியின் சின்னமல்ல, அது நாம் மீண்டும் மீண்டும் இணைய வேண்டிய புள்ளியின் அடையாளம்.”

ஒரு படைப்பாளியின் அறைகூவல்

”மௌனத்தின் மௌனம்” என்ற இந்தப் படைப்பு வாசகர்களுக்குக் கொடுக்கும் காணிக்கை – உண்மையை எதிர்கொள்ளும் துணிச்சல். ஒரு வாசகராக நான் இதைப் பார்க்கும்போது, ஒவ்வொரு கதையும் ஒரு வரலாற்றுப் பதிவாக என் கண் முன்னே நிழலாடுகிறது. ஒரு ஊடக வியலாளராக பார்க்கும்போது, மௌனம் எப்படி அதிகாரத்தைவிட வலிமையாக ஒலிக்க முடியும் என்பதை உணர்கிறேன்.

முள்ளிவாய்க்கால் என்பது ஒரு முடிவு அல்ல; அது ஒரு தொடக்கம். அதிகாரம் நம் வரலாற்றை மௌனிக்கச் செய்ய நினைக்கும்போது, கலைகளும் இலக்கியங்களுமே அந்த வரலாற்றைப் பாதுகாக்கும் கேடயங்களாக மாறுகின்றன. தாயகத்தில் துளிர்க்கும் ஒவ்வொரு நினைவும், தமிழகத்தில் எழும் ஒவ்வொரு குரலும், புலம்பெயர் தேசங் களில் பதியப்படும் ஒவ்வொரு பதிவும் ஒன்றிணையும் போதுதான் நம் இனம் தனக்கான நீதியைப் பெற்றுக்கொள்ளும்.

நாம் வெவ்வேறு தேசங்களில் சுவாசிக்கலாம் ஆனால், நம் அனைவரது இதயத் துடிப்பும் முள்ளிவாய்க்கால் மண்ணின் ஈரத்திலிருந்தே தொடங்குகிறது. சிதறிப்போன நம் உணர்வுகளை ஒன்றிணைக்க இந்த நூல் ஒரு கருவியாக அமையட்டும்.

ஒரு மருத்துவராக காயங்களின் வலியை அறிவேன், ஒரு ஊடக வியலாளராக உண்மைகளின் தேடலை அறிவேன், ஒரு இயக்குநராகக் காட்சிகளின் மொழியை அறிவேன். ஆனால், இந்நூல் அந்த மூன்றையும் கடந்து ஒரு தமிழனாக என் ஆன்மாவை உலுக்கியிருக்கிறது.”

இந்த நூலை வாசித்து முடிக்கும்போது, உங்கள் உள்ளத்தில் அந்த 27 கதைகளின் நிழல்கள் ஆழமாகப் பதிந்திருக்கும். அந்த நிழல்களிலிருந்து வெளிச்சத்தை நோக்கி நகர்வதே நாம் இந்தத் தொகுப்பிற்கும், இக்கதைகளின் உண்மை நாயகர்களுக்கும் செய்யும் உண்மையான மரியாதை. அந்த உண்மையை மௌனத்தின் மொழியில், அதன் அசல் வீரியத்துடன் பதிவு செய்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இறுதியாக, உலகத் தமிழினத்திற்கு ஒரு அறைகூவலுடன் இதை நிறைவு செய்கிறேன்:

“அதிகாரம் நம் வரலாற்றை அழிக்க நினைக்கும்போது, நம் கதைகள் அதனைப் பாதுகாக்கும். நாம் வெவ்வேறு தேசங்களில் சுவாசிக்கலாம், ஆனால் நம் இதயத் துடிப்பு முள்ளிவாய்க்காலின் மண்ணிலிருந்துதான் தொடங்குகிறது. மௌனங்களைக் கடந்து ஒன்றாவோம் நம் வரலாற்றை நாமே எழுதுவோம்.”

இந்த “மௌனத்தின் மௌனம்” நம் அனைவரையும் அந்த ஒரு புள்ளியில் இணைக்கட்டும்.

என்றும் கலைப்பணியில் மற்றும் தமிழ்ப்பணியில்,

“மௌனத்தின் குரலாய்”

உங்களுடன்....

ஒரு இனத்தின் வரலாறு சில நேரங்களில் அதிகாரப்பூர்வ ஆவணங்களில் மட்டும் பதிவு செய்யப்படுவதில்லை. அது மக்களின் நினைவுகளில், உடைந்த வீடுகளின் சுவர்களில், மண்ணின் அமைதி யிலும், உயிரிழந்தவர்களின் பெயர்களிலும் எழுதப்படுகிறது. அந்த நினைவுகளின் நிழலில் பிறந்ததே இந்தச் சிறுகதைத் தொகுப்பு.

இந்த நூலில் இடம்பெறும் 27 கதைகளும் வெறும் கற்பனைச் சித்திரங்கள் அல்ல; அவை ஒரு காலத்தின் காயங்களிலிருந்து எழுந்த குரல்கள். ஒரு இனத்தின் அவலம், அதன் வாழ்வாதாரப் போராட்டம், அதன் விடுதலைக்கான கனவுகள் இவை கதைகளின் உட்பொருளாக ஓடுகின்றன. இந்தக் கதைகள் மக்கள் துயரத்தையும் எதிர்ப்பையும் மட்டுமல்ல, அவர்களின் நிலைத்திருக்கும் உயிர்ச்சக்தியையும் வெளிப் படுத்துகின்றன.

ஒரு காலத்தில் தமது நிலத்தில் சாதாரண மனிதர்களாக வாழ்ந்த வர்கள்.. விவசாயிகள், மீனவர்கள், மாணவர்கள், தாய்மார்கள் போரின் சூழலில் எவ்வாறு வேறு விதமான வாழ்க்கைக்கு தள்ளப் பட்டார்கள் என்பதை இந்தக் கதைகள் சாட்சியமாக பதிவு செய்கின்றன. ஒரு கிராமத்தின் அமைதி எவ்வாறு வெடிப்புகளின் சத்தமாக மாறியது, ஒரு குடும்பத்தின் நாளாந்த வாழ்வு எவ்வாறு பயமும் இழப்பும் நிரம்பிய வரலாறாக மாறியது என்பதையும் இவை அமைதியான, ஆனால் சக்தி வாய்ந்த மொழியில் சொல்லுகின்றன.

ஒவ்வொரு கதையும் உண்மை சம்பவத்தின் நிழலில் பிறந்தது. சில கதைகளில் மனிதர்களின் பெயர்கள் மற்றும் இடங்கள் பாதுகாப்புக்காக

மாற்றப்பட்டுள்ளன; சில சம்பவங்கள் மறைக்கப்பட்டுள்ளன; அதேவேளை, சில கதைகளில் சம்பந்தப்பட்டவர்களின் உண்மைப் பெயர்களும் அப்படியே இடம்பெற்றுள்ளன. இந்த மாற்றங்கள் உண்மையை மறைக்க வில்லை; சம்பந்தப்பட்டவர்களின் பாதுகாப்பையும் மரியாதையையும் காக்கும் நோக்கத்திலேயே செய்யப்பட்டவை.

இலக்கியம் சில நேரங்களில் ஒரு சமூகத்தின் மௌனத்தை மொழியாக மாற்றும். சொல்ல முடியாத துயரங்கள் கதைகளாக மாறும் போது, அவை தனிப்பட்ட நினைவுகளாக இல்லாமல் ஒரு காலத்தின் சாட்சிகளாக மாறுகின்றன. இந்தக் கதைகள் நினைவுகளின் பதிவு களாகவும், மறக்கப்படக் கூடாத அனுபவங்களின் சான்றுகளாகவும் நிற்கின்றன.

இந்த கதைகள் வெறும் போரின் வரலாறை மட்டும் பதிவு செய்ய வில்லை. அவை மனித வாழ்வின் பொறுமையையும், எதிர்ப்பையும் வெளிப் படுத்துகின்றன. அழிவுகளின் மத்தியில் கூட மனிதன் நம்பிக்கையை விடாது; அவன் நினைவுகளை காப்பாற்றி, தனது வரலாற்றை சொல்ல முயல்கிறான். அந்த முயற்சியின் ஒரு சிறிய வெளிப்பாடே இந்த நூல்.

இந்தக் கதைகள் ஒரே நேரத்தில் இலக்கியமும் சாட்சியமும் ஆகும்.

அவை ஒரு காலத்தின் குரல்.
ஒரு மக்களின் நினைவு.
ஒரு மண்ணின் மறக்கப்படாத வரலாறு.

இந்தக் கதைகளை வாசிக்கும்போது, வாசகர்கள் வெறும் கதை களை படிப்பதில்லை; அவர்கள் ஒரு காலத்தின் அடையாளங்களைச் சந்திக்கிறார்கள் ஒரு இனத்தின் வேதனைகளையும் நம்பிக்கை களையும், அதன் நினைவுகளையும் எதிர்கால கனவுகளையும். மறையாமல் வைத்திருக்கும்.

நிஜத்துடன் நிலவன்


“மௌனத்தின் மௌனம்”
நவம்பர் 27
தமிழர் எழுச்சி நாள்
அந்த நினைவின் ஒளியில்
இருபத்தேழு கதைகள்
மீள் எழுச்சியின் குரலாய்
இந்நூலில் உயிர் பெறுகின்றது.
அந்த ஒலியை உணரும் போது
ஒரு வாசகன் மட்டும் அல்ல,
ஒரு மனிதன் மீண்டும் பிறக்கிறான்.



மௌனம் பேசாது வார்த்தைகளோடு பேசும்

– இதயவள்.

மண்ணை விடப் பெரிய காதலாய் சுமந்த தேசம்
மரணத்தின் நிழலில் மண்டியிட்டுக் கிடந்தது...
விடியும் காலத்தின் முன் விழித்திருந்த கண்கள்
இனப்படுகொலையின் சாட்சிகளாய் உறைந்தன.
அகதி முகாமின் அமைதி உடைந்த வட்டத்தில்,
முள்ளிவாய்க்கால் மணலில் மறைந்த உயிர்கள்
சொல்லத் துடித்த கதைகள் காற்றில் கரைகின்றன.
காட்சிக்காக ஓடிய கால்கள் சோர்ந்து விழுந்தன,
பிணங்களின் வாசம் வீசும் பசியின் நிழலில்
வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் ஒரு நூலிழை!
கடைசிக் கட்டு அவிழ்ந்த பின்பும்
தீராத வடுவாய் எரிகிறது அந்தப் பெரும் நிலம்.
அருட்சகோதரி மரியானின் துண்டு நிலத்தில் சிதறிய
இரத்தச் சாட்சியங்கள் யாவும் மௌனத்தின் ஒலங்கள்.
கடல் இன்னும் வரவில்லை எனத் தவித்தபடி
வெள்ளைக்கொடி ஏந்தி சரணடைந்த கைகள்,
வட்டுவாகல் பாலத்தில் விடப்பட்ட தடம் தெரியாத உறவுகள்...
“அப்பா எப்ப வருவார்?” என்ற குழந்தையின் வினாவுக்கு
மௌனத்தின் அறைகளில் இன்னும் பதிலில்லை!
தலை இழந்த பனை மரங்களின் கீழ் சரிந்து கிடக்கும்
இந்த இனத்தின் வீரம் மெதுவான மரணத்தைச் சுவைக்கிறது.
மௌனத்தின் குப்பியில் அடைக்கப்பட்ட கண்ணீர் துளிகளாய்
வாழ்வின் ஈரம் தொலைந்த நிலத்தில்,
மங்களப் பாட்டியின் நிலாச்சோறு ஒரு கனவாகிப் போனது!
ஆயிரம் கதைகள் சொல்லத் துடித்தும் ஊமையாகிப் போன
அந்தப் பெரும் நிலத்தின் சாட்சியாக...
வாழ்கிறது இந்தப் மௌனத்தின் மௌனம்.



மன்னனை விடப் பெரிய காதல்

மன்னாரின் காலை ஒவ்வொன்றும் கடற்காற்றின் உப்புத் துவர்ப்புடன் பிறக்கும். அந்த காற்று பள்ளி வளாகத்தின் பழைய வேப்ப மரங்களைத் தொட்டு, வகுப்பறை ஜன்னல்களில் நுழைந்து, புத்தகத்தின் பக்கங்களை மெதுவாக அசைக்கும். அந்தக் காற்றோடு சேர்ந்து குழந்தைகளின் சிரிப்பும், கரும்பலகையில் எழுதிய சாளரச் சத்தமும், ஓய்வுநேர ஓட்டங்களும் ஒரு சிறிய உலகை உருவாக்கும்.

அந்த உலகில்தான்

வைகுந்தனும்... மலர்விழியும்... முதலில் ஒருவரை ஒருவர் அறிந்தார்கள்.

முதலில் அது ஒரு சாதாரண நட்பு. ஒரே வகுப்பறை. ஒரே ஆசிரியர்கள். ஒரே மைதானத்தில் மாலை நேரம்.

மலர்விழி எப்போதும் அமைதியாக இருப்பவள். பேசும்போது மெதுவாகப் பேசுவாள். ஆனால், அவள் சிரிக்கும்போது கண்களில் ஒரு ஒளி பளிச்சிடும். அதைப் பார்த்தே அவள் மனம் எப்படி இருக்கும் என்று யாரும் அறிந்துவிடலாம்.

வைகுந்தன் அதைக் கவனித்தான்.

அவன் அதிகமாகப் பேசுபவன். நண்பர்களின் நடுவில் சிரிப்பு சத்தங்களை உண்டாக்குபவன். ஆனால், சில நேரங்களில் அவன் அமைதியாக மாறிவிடுவான். கடலை நோக்கி நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருப்பான்.

அதைக் கவனித்தாள் மலர்விழி. அவர்களின் நட்பு அந்தச் சிறிய கவனிப்புகளிலிருந்தே உருவானது.

நேரம் மெதுவாக நகர்ந்தது.

சிறுவயது மெல்ல மெல்ல இளமையாக மாறியது. அந்த மாற்றத்தின் நடுவில் சில உணர்வுகள் மனிதர்களின் உள்ளத்தில் பிறக்கும். அவை சொல்லப் படாதவை. ஆனால் அவை இருந்து கொண்டே இருக்கும்.

வைகுந்தனுக்கும் மலர்விழிக்கும் அந்த உணர்வு பிறந்தது. அவர்கள் இருவரும் அதை உணர்ந்தார்கள். ஆனால், ஒருபோதும் சொல்லவில்லை. அந்த ஆண்டின் மழைக்காலம் முடிந்தபின் மடுமாதா ஆலயத் திருவிழா வந்தது.

மன்னாரின் அந்தத் திருவிழா ஒரு கிராமத்தின் ஆன்மாபோல. தூரத்தில் இருந்தே கோயில் மணியும் செபத்தின் ஒலியும் கேட்கும். ஆலயத்தின் வெள்ளைச் சுவர்கள் மாலை ஒளியில் மெதுவாக தங்க நிறம் பூசப்பட்டதுபோல் தெரியும். மக்கள் கூட்டம் அலைபோல நகரும். அந்தக் கூட்டத்தின் நடுவே வைகுந்தன் நடந்து கொண்டிருந்தான். அப்போது அவன் அவளைப் பார்த்தான்.

மலர்விழி.

விளக்குகளின் ஒளியில் அவள் முகம் மெதுவாகப் பிரகாசித்தது. காற்றில் அவள் தலைமுடி அசைந்தது. அவள் திரும்பி அவனைப் பார்த்த அந்த நொடியிலேயே வைகுந்தன் நின்றுவிட்டான்.

“வைகுந்தன்...” என்று அவள் சொன்னாள்.

அவன் சிரித்தான்.

“மலர்விழி.”

அவர்கள் ஆலயத் தோட்டத்தின் ஓரமாக நடந்தார்கள்.

மெழுகுவர்த்திகள் எரிந்துகொண்டிருந்தன. மக்கள் மண்டியிட்டு பிரார்த்தித்தனர். ஆலய மணி ஒலி காற்றில் பரவியது. அவர்கள் பள்ளி நினைவுகளைப் பற்றிப் பேசினார்கள். ஆசிரியர்கள் பற்றிப் பேசிச் சிரித்தார்கள். பழைய நண்பர்கள் பற்றிக் கேட்டார்கள். ஆனால், அந்த உரையாடலின் அடியில் சொல்லப்படாத ஒரு உணர்வு இருந்தது.

அது காதல்.

இருவரும் அதை உணர்ந்தார்கள். ஆனால், அந்த வார்த்தை அவர் களுக்கிடையே வரவில்லை. அந்த இரவு முடிந்தபோது மக்கள் கூட்டம் மெதுவாகக் கலைந்தது. பிரியும் முன் மலர்விழி ஒரு நொடி நின்றாள்.

“நாம் மீண்டும் சந்திப்போமா?” என்று கேட்டாள்.

வைகுந்தன் சிரித்தான்.

“இந்த மண் சிறியது,” என்றான்.

“மீண்டும் சந்திப்போம்.”

ஆனால், சில மாதங்களில் அந்த மண்ணின் அமைதி உடைந்தது. கிராமங்கள் வெறிச்சோடின. மக்கள் வீடுகளை விட்டு வெளியேற ஆரம்பித்தனர். இடம்பெயர்ந்த மக்களின் நீண்ட வரிசைகள் மண்ணின் மீது நகர ஆரம்பித்தன.

ஒரு நாள் அந்த வரிசையில் வைகுந்தனும் நடந்து கொண்டிருந்தான்.

தூசி நிறைந்த பாதை.

சுமைகள் சுமந்த மக்கள்.

அழுகை கலந்த குழந்தைக் குரல்கள். அப்போது கூட்டத்தின் நடுவே அவன் அவளை மீண்டும் கண்டான். மலர்விழி... அவள் தோளில் ஒரு சிறிய பையை சுமந்து நடந்துகொண்டிருந்தாள்.

“மலர்விழி!” என்று அவன் அழைத்தான்.

அவள் திரும்பிப் பார்த்தாள். சோர்வான முகத்தில் ஒரு பழைய ஒளி மீண்டும் பிறந்தது. அவர்கள் மீண்டும் ஒன்றாக நடந்தார்கள். பல

நாள் பயணத்திற்குப் பிறகு மக்கள் முழங்காவில் வந்தடைந்தனர். அந்த இடம் ஆயிரக்கணக்கான இடம்பெயர்ந்த மக்களால் நிரம்பியிருந்தது.

கூடாரங்கள்.

தற்காலிக வாழ்க்கை.

மண்ணும் தூசியுமாய்.

ஒரு மாலை முழங்காவிலின் எல்லையில் இருந்த பாலைப்பழ மரத்தின் பழமையான மரநிழல் மெதுவாக மண்ணில் குனிந்தது, காலத்தின் கனவுகளை தாங்கிய நிழலாய். ஒவ்வொரு இலைகளும், மெல்ல மெல்ல காற்றில் கதை சொன்னது. மரத்தின் நிழல்கூட அவர் களின் அன்பைப் பாராட்டியது, மண்ணின் சத்தம்கூட அவர்களின் நட்பைக் கவனித்தது. ஒரு நொடி, உலகம் தங்கிவிட்டதுபோல, மர நிழலில் அவர்கள் இருவரும் அமர்ந்திருந்தார்கள். சூரியன் மெதுவாக மறைந்து கொண்டிருந்தான்.

நீண்ட நேரம் யாரும் பேசவில்லை.

பின்னர் மலர்விழி சொன்னாள்:

“நாம் வாழ்ந்த மண்ணை விட்டுவிட்டு இங்கே வந்திருக்கிறோம்.”

வைகுந்தன் மண்ணைப் பார்த்தான்.

“ஆனால், அந்த மண் இன்னும் நமக்கே தான்.”

மலர்விழி மெதுவாகச் சொன்னாள்:

“அதை மீண்டும் பெற யாராவது போராட வேண்டும்.”
வைகுந்தன் அவளைப் பார்த்தான்.

“நம் தலைமுறை அதற்காக நிற்க வேண்டிய நேரம் வந்திருக்கிறது.”

மலர்விழி அமைதியாக இருந்தாள்.

பின்னர் மெதுவாகக் கேட்டாள்:

“நாம் என்ன செய்யப் போகிறோம்?”

வைகுந்தன் சிறிது நேரம் பதில் சொல்லவில்லை.

பின்னர் மெதுவாகச் சொன்னான்:

“நாம் ஒருவரை ஒருவர் விரும்புகிறோம்.”

மலர்விழி சிரித்தாள்.

“ஆம்.”

“ஆனால், இந்த மண்ணை நாம் அதைவிட அதிகமாக விரும்புகி றோம்.”

அவள் கண்களில் கண்ணீர் மிளிர்ந்தது.

“அப்படியானால் நம் காதல் என்ன ஆகும்?” என்று கேட்டாள்.

வைகுந்தன் பார்வையை மாற்றினான். மாலை வானம் சிவப்பு நிறத்தில் தெரிந்தது. “நம் காதல் இந்த மண்ணோடு சேர்ந்து வாழட்டும்,” என்றான். அந்த மாலை முழங்காவிலின் மண்ணில் அவர்கள் இருவரும் ஒரு முடிவெடுத்தார்கள்.

அவர்கள் ஒருவருக்கொருவர் காதலைச் சொல்லவில்லை. அவர்கள் திருமணத்தைப் பற்றிப் பேசவில்லை. ஆனால், அவர்கள் தங்கள் வாழ்க்கையை ஒரே பாதையில் அர்ப்பணித்தார்கள்.

தங்கள் மண்ணிற்காக... தங்கள் மக்களுக்காக...

அந்த இரவு முழங்காவிலின் அமைதியில் வைகுந்தனும் மலர்விழியும் ஒரு புதிய வாழ்வை நோக்கி நடந்தார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் காதலித்ததைவிட அந்த மண்ணை அதிகமாகக் காதலித்தார்கள். அவர்களின் காதல் இரண்டு மனிதர்களுக்கிடை யிலான காதல் அல்ல.

அது...

ஒரு தேசத்தின் மீது கொண்ட காதல். அந்த காதலின் வழியே அவர்கள் வரலாற்றின் பாதைக்கு அமைதியாக நடந்தார்கள்..



விடியற் காலத்தின் முன்

முள்ளிக்குளம் ஒரு அமைதியான கிராமம். அந்த கிராமத்தில் காலை மெல்ல மெல்ல விழிக்கும். முதலில் இரவின் இருள் மெதுவாகப் பின்வாங்கும். பின்னர் கிழக்குக் கரையில் மெல்லொளிரும் ஒளி தோன்றும். அந்த ஒளி வயல்களின் மீது விழும்போது, நெற் பயிர்களின் நுனியில் தங்கியிருந்த பனித்துளிகள் சிறு நட்சத்திரங்களைப் போல தொங்கியபடி மின்னும். அந்த நிலத்தில் வாழ்ந்தவர்கள் மண்ணோடு கலந்தவர்கள்.

அவர்களில் ஒருவன் பாவு. விவசாயம் அவனுக்கு தொழில் மட்டும் அல்ல அது வாழ்க்கை. மண்ணைத் தொடும் ஒவ்வொரு காலைப் பொழுதும் அவன் உயிரோடு இருப்பதை உணர்ந்தான். அவனுடைய மனைவி அஞ்சலி. அவள் அமைதியான பெண். வீட்டின் எல்லா சத்தங்களையும் அமைதியாகக் கேட்டு வாழ்ந்தவள்.

அவர்களுக்கு நான்கு பிள்ளைகள்.

மூத்தவன் ஆதி.
அடுத்து ஆதிரன்.
மூன்றாவது ஆதித்யன்.
கடைசியாக ஆனந்தி.

அவர்களின் வாழ்க்கை எளிமையானது. ஆனால், அந்த எளிமைக்குள் ஒரு முழு உலகம் இருந்தது. மாலை நேரங்களில் பிள்ளைகள் வயல் வெளியின் விளிம்பில் ஓடிக் கொண்டிருப்பார் கள். பாவு அங்கே நின்று பார்த்துக் கொண்டிருப்பான். அஞ்சலி வீட்டின் வாசலில் நின்று சிரிப்பாள்.

ஆனால் ஒருநாள் அந்த அமைதி முறிந்தது.

தூரத்தில் முதலில் ஒரு வெடிப்பு கேட்டது. பின்னர் இன்னொன்று. பின்னர் வானத்தில் இரும்புக் குரல்கள். அந்த நாளிலிருந்து முள்ளிக்குளம் மாறிவிட்டது. மக்கள் வீடுகளை விட்டு வெளியேற ஆரம்பித்தார்கள்.

பாவு தனது வீட்டின் வாசலில் நின்று ஒரு முறை திரும்பிப் பார்த்தான். அந்த வீட்டின் சுவர்களும் மரங்களும் வயல்களும்... அவனுடைய வாழ் நாளின் நினைவுகளைத் தாங்கியிருந்தன. ஆனால், அந்த நாளின் நினைவுகளை எடுத்துச் செல்ல முடியாது. அவர்கள் வெளியேறினார்கள்.

பல நாட்கள் அலைந்தபின் அவர்கள் பூநகரியை அடைந்தார்கள். பூநகரி கடற்காற்று வீசும் அமைதியான நிலம். அங்கே பாவு ஒரு சிறிய கொட்டகையை அமைத்தான். இடம்பெயர்ந்து கொண்டு வந்த தகரத் தகடுகளும் கிடுகுகளும் ஓலைகளும்... அவற்றை ஒன்றோடு ஒன்று இணைத்து ஒரு தற்காலிய தங்குமிடத்தை கட்டினான்.

அந்தச் சிறிய கொட்டகை அவர்களின் புதிய உலகம். ஒரு மூலையில் பாத்திரங்கள். மற்றொரு மூலையில் பிள்ளைகள் படுக்கும் இடம். நடுவில் ஒரு குப்பி விளக்கு. அந்த விளக்கின் ஒளியில் இரவுகள் மெதுவாக நகர்ந்தன.

ஒரு மாலை அவர்கள் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து உணவு உண்டார்கள். வெளியில் காற்று கிடுகுகளை அசைத்தது. அப்போது ஆதி மெதுவாகப் பேச ஆரம்பித்தான்.

“அப்பா...” பாவு அவனை நோக்கினான். “நாங்கள் இடம்பெயர்ந்து வரும்போது பலர் சாகிறதைப் பார்த்தோம்.” அவன் குரல் அமைதியாக இருந்தது. “விமானக் குண்டுகள்... வெடிகள்... மக்கள் மேல விழுந்தது...” அவன் ஒரு நிமிடம் அமைதியாக இருந்தான்.

“நான் சாக வேண்டிய நாள் வந்தால்...” அவன் தந்தையை நேராகப் பார்த்தான்.

“நான் சும்மா சாகக் கூடாது.” அஞ்சலி அவனைப் பார்த்தாள்.

“இந்த நாட்டுக்காக நான் ஏதாவது செய்ய வேண்டும்.”

“என் வாழ்க்கைக்கும்... என் மரணத்துக்கும் ஒரு அர்த்தம் இருக்க வேண்டும்.” அந்த வார்த்தைகள் அந்தக் கொட்டகையின் உள்ளே நீண்ட நேரம் நிலைத்திருந்தன.

பாவு மெதுவாகச் சிரித்தான்... அந்த சிரிப்பில் ஒரு தந்தையின் பெருமையும் ஒரு மறைந்த வலியும் இருந்தது.

அன்று இரவு.

குப்பி விளக்கு இன்னும் எரிந்துகொண்டிருந்தது. ஆதி ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தான். அது போராளிகளின் வரலாறுகள் பற்றிய புத்தகம். பல இளைஞர்கள். பல தியாகங்கள். நேரம் தாமதமானது. அவன் புத்தகத்தை அருகில் வைத்துக் கண்களை மூடினான். மற்றப் பிள்ளைகளும் தூங்கிவிட்டார்கள்.

அப்போது பாவு மெதுவாக அஞ்சலியிடம் சொன்னான்:

“ஆதி இன்று சொன்னதைக் கேட்டாயா?”

அஞ்சலி தலையசைத்தாள்.

“நாளை நான் அவனைப் போராட்டத்தில் சேர்க்க நினைக்கிறேன்.”

அஞ்சலி அமைதியாக இருந்தாள். பின்னர் மெதுவாகச் சொன்னாள்:

“அவனுக்கும் அது விருப்பம்.”

“இந்த நாட்டில் பிள்ளைகள் எல்லோரும் போராடுகிறார்கள்.”

அவள் கண்களில் கண்ணீர் பிறந்தது.

“நம்ம ஆதியும் போகட்டும்.” அந்த இரவு அந்தக் கொட்டகையின் உள்ளே ஒரு முடிவு பிறந்தது.

ஆனால், அவர்கள் அறியாத ஒன்று இருந்தது. ஆதி அந்த உரையாடல் முழுவதும் கேட்டிருந்தான்.

அந்த இரவில் அவன் குழந்தையாக இருந்து இளைஞனாக மாறினான்.

அடுத்த நாள் அதிகாலை. பூநகரியில் சூரியன் முகில்களைத் தள்ளி விட்டு மெதுவாக எழுந்தான். அஞ்சலி ஆதிக்குத் தேநீர் கொடுத்தாள். அவள் அவன் தலையை மெதுவாகத் தடவினாள். அந்தத் தடவலில் ஒரு தாய் சொல்லாத பல வார்த்தைகள் இருந்தன.

ஆதி அமைதியாகச் சிரித்தான்.

பாவு அவனை வெளியே அழைத்தான். அவர்கள் இருவரும் பூநகரியின் மணற்பாதையில் நடந்தார்கள். காலை ஒளி நிலத்தின் மீது பரவிக் கொண்டிருந்தது. தூரத்தில் போராளிகளின் பாசறை இருந்தது. அங்கே சென்றபோது பாவு நின்றான்.

அவன் தனது மகனைப் பார்த்தான். பின்னர் அவனைக் கட்டி அணைத்தான். அவன் நெற்றியில் முத்தமிட்டான்.

“நீ எங்கள் மகன் மட்டும் இல்லை,” என்றான்.

“இந்த மண்ணின் மகன்.”பின்னர் போராளிகளிடம் சொன்னான்:

“இந்தப் பெடியனை உங்களிடம் ஒப்படைக்கிறேன்.” “இந்த நாட்டுக்காக அவன் செய்ய வேண்டியதை நீங்கள் அவனுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.”

ஆதி திரும்பிப் பார்த்தான்.

தூரத்தில் அஞ்சலி நின்றுகொண்டிருந்தாள்... அவள் கண்ணீரோடு சிரித்தாள். அந்த அதிகாலை ஒரு தந்தை தனது மகனைத் தெளிவான பாதைக்கு அனுப்பினான். ஒரு தாய் தனது இதயத்தின் ஒரு துண்டை விடைகொடுத்து அனுப்பினாள். அந்த மணற்பாதையில் நடந்துசென்ற அந்தப் பெடியன் இனி ஒரு பெடியன் மட்டும் இல்லை.

அவன்

ஒரு தாயின் கண்ணீரும்

ஒரு தந்தையின் பெருமையும்

ஒரு மண்ணின் விடிவுப் புள்ளியும் ஆனான்.

பொற்றோர் பெற்றோர்

பொற்றோர் தந்தையும் பொற்றோர் தாயும்
பொற்குணம் உள்ளத்தில் வாழ்ந்தோர்.
மூத்த மகனை மண்ணின் நெஞ்சில்
முடிசூடும் வீரனென வளர்த்தோர்.

தாயக மண்ணின் துயர் கண்ட
தளராத உறுதியின் இதயங்கள்.
விடுதலை விதையாய் மகனை
வீரப் பாதையில் விதைத்தோர்.

இரத்தம் சொரியும் பாதையிலும்
இனத்தின் விடியலை கண்டோர்.
மகனை அல்ல மண்ணையே
மகனென எண்ணிய பொற்றோர்.

அமைதியின் உடைந்த வட்டம்



போரின் வரைபடங்களில் சில கோடுகள் வரையப்படுகின்றன. அவை எல்லைகள் என்று அழைக்கப்படுகின்றன. சில நேரங்களில் அவை "பாதுகாப்பு வலயம்" என்றும் அழைக்கப்படு கின்றன.

ஆழியன் அந்த வார்த்தையை முதன்முறை யாகக் கேட்டபோது, அவன் மனதில் தோன்றியது அது "பாதுகாப்பு வலயம்" அல்ல. அதுவொரு வட்டம். மணலில் வரையப்பட்ட ஒரு வட்டம். அதன் உள்ளே மக்கள்.

அதன் வெளியே போர்.

அந்த வட்டத்திற்குள் வந்தவர்கள் அது அவர்களைக் காப்பாற்றும் என்று நம்பினார்கள். ஆழியன் மட்டும் அது அவர்களை ஒன்றாகச் சேர்க்கும் என்று எண்ணினான்.

ஆழியன் ஒரு பத்திரிகையாளர். அவன் கையில் எப்போதும் ஒரு பழைய கேமரா இருக்கும். பையில் ஒரு கிழிந்த குறிப்பேடு. ஒரு காலத்தில் அவன் செய்திகளைப் பதிவு செய்தவன். இப்போது அவன் பதிவு செய்தது நினைவுகளை.

மண்

புகை.

அழுகை.

அமைதி.

அந்த நான்கு வார்த்தைகள் அவன் குறிப்பேட்டில் மீண்டும் மீண்டும் தோன்றின. மக்கள் அந்த வட்டத்திற்குள் வந்தார்கள். தங்கள் தோள்களில் பைகள். கைகளில் குழந்தைகள். முகத்தில் ஒரு சோர்ந்த நம்பிக்கை. “இங்கே குண்டுகள் விழாது,” என்று அவர்கள் ஒருவருக்கொருவர் சொன்னார்கள்.

“இது பாதுகாப்பு.”

அந்த வார்த்தைகள் காற்றில் மிதந்தன. ஆனால், போரின் சத்தம் மிக அருகில் இருந்தது. இரவில் மண் அதிர்ந்தது. பகலில் வானம் வெடித்தது.

ஒரு நாள் ஆழியன் தன் குறிப்பேட்டில் மெதுவாக ஒரு கேள்வி எழுதினான்.

“போருக்கு இத்தனை அருகில் பாதுகாப்பு ஏன் வரையப்படுகிறது?” அந்த கேள்விக்கு பதில் யாரிடமும் இல்லை.

மருத்துவமனை என்று அழைக்கப்பட்ட இடம் ஒரு கட்டிடம் அல்ல. சில கூடாரங்கள். சில மரக்கட்டில்கள். சில சோர்ந்த மருத்துவர்கள். இருந்தாலும் அந்த இடத்தில் மனிதர்களின் உயிர்களைக் காப்பாற்ற முயன்றார்கள்.

ஒரு நாள் அந்த இடத்தின் இருப்பிடத்தை ஆழியன் வெளியுலகிற்கு அறிவித்தான். “இங்கே காயமடைந்தவர்கள் இருக்கிறார்கள்,” என்று. அவன் அந்தச் செய்தியை அனுப்பிய சில மணி நேரங்கள் கழித்து வானத்தில் ஒரு உலோகச் சத்தம் எழுந்தது. பின்னர் மண் வெடித்தது. புகை உயர்ந்தது. மக்கள் கத்தினர். அந்த நாளில் ஆழியன் ஒரு விஷயத்தைப் புரிந்துகொண்டான். சில தகவல்கள் உயிர்களைக் காப்பாற்றுவதில்லை. அவை குறிகளைக் காட்டுகின்றன.

அதன் பிறகு அவர்கள் மருத்துவமனையின் இருப்பிடத்தை யாருக்கும் சொல்லவில்லை. அந்த மறைப்பின் பிறகு அந்த இடத்தில் குண்டுகள் விழவில்லை. அந்த உண்மை ஆழியனின் உள்ளத்தில் ஒரு குளிர்ந்த கல்லைப் போல தங்கி விட்டது.

ஒரு மாலை அவன் பதுங்குகுழியில் இருந்தான். மண் ஈரமாக இருந்தது. காற்றில் புகையின் வாசனை. வெளியே பனைமரம் ஒன்று நின்றிருந்தது. அதன் கீழே கருமையான உருண்டையாக ஒன்று விழுந்திருந்தது.

பனம்பழம் போல....

பல நாட்களாக அவன் சரியாகச் சாப்பிடவில்லை. அவன் அருகில் இருந்த இளைஞனைப் பார்த்தான். அவன் பெயர் இளமாறன்.

எப்போதும் சிரித்துக்கொண்டே இருப்பான். காயமடைந்தவர் களைத் தூக்கிச் செல்லவும், மருத்துவர்களுக்கும் ஓடி உதவுவான்.

“அதை எடுத்து வா,” என்றான் ஆழியன்.
இளமாறன் ஓடினான்...
சில நொடிகள்.
பின்னர் அவன் நின்றான்.

மெதுவாகத் திரும்பிப் பார்த்தான். அவன் முகத்தில் இருந்த சிரிப்பு மறைந்தது.

“அண்ணா...” என்றான். அவன் குரல் மெதுவாக உடைந்தது.

“அது பனம்பழம் இல்லை.”

ஆழியன் வெளியே வந்தான். அவன் அந்த இடத்தைப் பார்த்தான். அது ஒரு பழம் இல்லை. ஒரு சிறிய குழந்தையின் தலை. மண்ணில் தனியாகக் கிடந்தது.

ஆழியன் பார்வை எங்கோ வெறித்துப் பார்த்தது. வானம் அமைதியாக இருந்தது. அந்த அமைதி அவனுக்குத் தாங்க முடியாததாக இருந்தது. போர் சில நேரங்களில் மனிதர்களை மட்டுமல்ல. மொழியையும் கொன்று விடுகிறது.

நாட்கள் நகர்ந்தன.

ஒரு காலை இளமாறன் இருந்தான். மாலை அவன் இல்லை என்றானது. யாரும் அவனை எடுத்துச் செல்லும் காட்சியைப் பார்க்க வில்லை. யாருக்கும் அவன் எங்கே போனான் என்று தெரியவில்லை.

பொஸ்பரசின் தீ ஒருமுறை விழுந்ததும், ஒரு உயிரின் உடல் மெதுவாக நெருப்பு அனல் கண்ணோட்டத்தில் மறைந்தது. தீயின் நாக்குகள் அனைத்தையும் விழுங்கின முகம் கரைந்தது, பெயர் மறைந்தது, நினைவுகள் சிதறின. இறுதியில், காற்றில் பறந்தது... அடையாள மற்ற சாம்பல் ,

மாறாமல் இருந்தது – நேரம்.
மாறாமல் இருந்தது – அவன் நிழல்.
மாறாமல் இருந்தது – நினைவுகள்.

மற்றும் அந்த இடத்தில், சாம்பலுக்குள் புதைந்த, மறைந்த வாழ்க்கைகள் சத்தமில்லாமல் இன்றும் பேசுகின்றன; ஒரு கவிதையாய், ஒரு நினைவாக, மெதுவாக உலகில் ஒலி ஏற்படுத்துகின்றன. மண்ணின் மேல் சாம்பல் படர்ந்தாலும், உயிரின் கதை எப்போதும் உயிரோடு தொடரும்.

அவன் நிழல் மறைந்துவிட்டது. அந்த வட்டத்தில் பலர் மறைந்தது போல.

பல ஆண்டுகள் கழித்து ஆழியன் அந்த நாட்களை எழுதினான். அவன் மெதுவாக எழுதினான்:

“பாதுகாப்பு வலயம் என்பது ஒரு இடம் அல்ல. அது ஒரு கேள்வி. மக்களைக் காப்பாற்ற வரையப்பட்ட வட்டமா? அல்லது அவர்களை ஒன்றாகச் சேர்த்து அழிக்க வரையப்பட்ட வட்டமா?”

அவன் கடைசியில் ஒரு பெயரை எழுதியான்.

“இளமாறன்”.

அதன் கீழே ஒரு வரி.

“பல உயிர்களைக் காப்பாற்றிய அந்த நல்ல மனிதன் எங்கே போனான் என்று யாருக்கும் தெரியவில்லை.”

ஆழியன் பேனாவைக் கீழே வைத்தான்.

வெளியில் காற்று வீசியது பனை மரங்கள் மெதுவாக அசைந்தன; போலத் தோன்றியது. அவன் திடீரென்று நினைத்தான். அந்த நாள் மண்ணில் விழுந்தது ஒரு பழம் இல்லை. அமைதியின் வட்டம்தான் விழுந்து உடைந்தது அடையாளம் இல்லாமலும், நினைவுகள் கரைந்தாலும், கண்ணீர் உதிரும் இடங்கள் வாழ்கின்றன.

பாதுகாப்பு வலையம்

“பாதுகாப்பு வலையம் என அறிவித்து
பயம் நிழலாய் பூமியை சூழ்ந்தார்.
பாவமற்ற மக்கள் மண் விழுங்கும்
நதி போல இரத்தம் காற்றில் கலந்தது.

கண்ணீர் சிந்தும் குழந்தைகள் முன்
மௌனத்தில் கதைகள் வெள்ளம்
போல ஓடின.
பாதுகாப்பின் பெயரில் மறைந்த படையெடுப்பு
இன அழிப்பின் இருளில் திளைத்தது.

மண்ணின் உரிமை நினைவுகள் மறையாமல்
சுடர் போலத் திகழ்கின்றன.
நாடோடிக் கதைகள் சொல்லும் பழமொழிகள்
“அரசின் வலையம் மனிதனை மறையச்
செய்யாது” என்று.

பாதுகாப்பு என அறிவித்த வளையம்
இன அழிப்பின் பெரும் நிழலாகவே உள்ளது.”



மணலில் மறைந்த உயிர்

விஸ்வமடு படிப்பகம் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப் பட்ட எமது உறவுகளான மாவீரர்களுக்கு, மக்களின் இறுதி உறுதி வணக்கத்தைச் செலுத்துவதற்காக அமைக்கப்பட்ட ஆலயம் அதனை அண்மித்துள்ளது.

அதன் அருகே ஒரு காலத்தில் அது குழந்தைகளின் சிரிப்பால் நிரம்பிய இடம். காலை நேரங்களில் சிறுவர்கள் புத்தகப் பைகளை தோளில் சுமந்தபடி அந்த வாசலை நோக்கி ஓடி வந்தார்கள். வகுப்பறை களின் ஜன்னல்களில் இருந்து ஆசிரியர்களின் குரல்கள் வெளியே வந்தன.

மரங்களின் கீழ் சிறுவர்கள் சண்டை போட்டு விளையாடி னார்கள். ஆனால், அந்த ஆண்டில் அந்த இடத்தில் பள்ளி இல்லை.

அது,

இடம்பெயர்ந்த மக்களின் முகாம். புத்தக அலமாரிகளின் இடத்தில் மண் மூட்டைகள். வகுப்பறை மேசைகளின் இடத்தில் பிளாஸ்டிக் தாள்கள். விளையாட்டு மைதானத்தின்



இடத்தில் மண்ணில் தோண்டப் பட்ட பதுங்குகுழிகள்.

பல கிராமங்களிலிருந்து மக்கள் அங்கு வந்திருந்தார்கள். உடையார்கட்டு. புதுக்குடியிருப்பு. இரணைப்பாலை. என... அவர்கள் ஒரே விஷயத்தைத் தேடி வந்தவர்கள்.

“பாதுகாப்பு”

ஆனால், அந்த நாட்களில் வானமே பாதுகாப்பாக இருக்கவில்லை. அந்த மாலை சூரியன் மறையத் தொடங்கிய நேரம்.

விஸ்வமடு மண்ணில் திடீ ரென்று வானம் கிழிந்தது. முதல் வெடிப்பு. பிறகு இன்னொன்று. பிறகு மண் முழுவதும் நடுங்கியது. குண்டுகள் படிப்பகத்தின் மீது விழத்தொடங்கின. மக்கள் அச்சத்துடன் பதுங்குகுழிகளுக்குள் ஓடினார்கள்.

ஒரு பதுங்குகுழிக்குள் ஒரு தாய் இருந்தாள்.

அவள் பெயர்

செல்வராணி.

அவளுடன் நான்கு சிறுவர்கள். அவர்களில் ஒரு சிறுமி மாலதி. அவள் அழுதுகொண்டிருந்தாள். செல்வராணி அவளைத் தன் மார்பில் அணைத்தாள்.

“பயப்படாதே...

அம்மா இருக்கேன்...” அவள் மெதுவாக சொன்னாள். ஆனால் அந்த குரலுக்குள் கூட பயம் இருந்தது. அந்த நேரத்தில்... ஒரு குண்டு அந்தப் பதுங்குகுழிக்குப் பக்கத்தில் விழுந்தது.

ஒரு கணம் வெள்ளை ஒளி.

பிறகு

மண், புகை, சத்தம். பதுங்குகுழிக்குள் அமைதி. பிறகு சிறுவர் களின் அழுகை.

செல்வராணி

அசையாமல் கிடந்தாள். ஒரு குண்டுத் துண்டு அவளது வலது கையை தோள் மூட்டோடு கிழித்துச் சென்றிருந்தது. கருஞ்சிவப்பு ரத்தம் மணலில் கலந்து ஒரு செந்நீர் ஆறாக ஓடியது. அவள் மயக்கத்தில் இருந்தாள். அவளை பார்த்தவர்கள்... அவள் இறந்துவிட்டாள் என்று நினைத்தார்கள். சில நிமிடங்களில் மக்கள் அந்த இடத்தை விட்டு நகரத் தொடங்கினர்.

பயம்... மனிதர்களை விரைவாக நகர்த்துகிறது. குடும்பங்களாய் முள்ளிவாய்க்காலை நோக்கி ஓடினர். அந்தப் பதுங்குகுழியில் ஒரு உயிர் மட்டும் மெல்ல மூச்செடுத்துக் கொண்டிருந்தது.

செல்வராணி.

அந்த நேரத்தில் சில போராளிகள் காயமடைந்தவர்களைத் தேடி அந்தப் பகுதியில் ஓடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் போராட மட்டும் அல்ல. மக்களைக் காக்கவும் அவர்கள் அங்கே இருந்தார்கள்.

அவர்களில் ஒரு பெண் போராளி.

அவள் பெயர்

வேழினி.

வேழினி ஒரு பதுங்குகுழிக்குள் இறங்கினாள்.

மண்ணில்

ஒரு தாய் படுத்திருந்தாள். அவளது கை தோள்மூட்டோடு கிழிந்திருந்தது.

வேழினி அவளருகில் மண்டியிட்டு அமர்ந்தாள். அவள் செல்வராணியின் மூச்சைப் பார்த்தாள்.

ஒரு நிமிடம்... மற்றொரு நிமிடம். பிறகுஅவள் மெதுவாக சொன்னாள்:

“அம்மா உயிரோட இருக்கிறார்”

அவள்

தன்னோடு வைத்திருந்த சாரத்துணியைக் கிழித்தாள். அதை அந்த காயத்தின் மீது இறுக்கமாக கட்டினாள். ரத்தப்போக்கு மெதுவாகக் குறைந்தது.

பிறகு வேழினி... செல்வராணியை தன் தோளில் தூக்கிக் கொண்டாள். அவள் ஓடத் தொடங்கினாள். வெடிப்புகள் இன்னும் தொடர்ந்தன. மண் படலம் வானத்தில் எழுந்தது. அழுகைக் குரல்கள் காற்றில் நிரம்பின.

ஆனால், அவள் ஓடினாள். சிறிய மருத்துவ இடம் ஒன்று. மண் மூட்டைகளால் மறைக்கப்பட்ட ஒரு தற்காலிக சிகிச்சை மையம். அங்கே மற்றைய போராளிகள் இருந்தார்கள். வேழினி... செல்வராணியை மெதுவாகத் தரையில் வைத்தாள்.

இந்த “அம்மாவை எப்படியாவது காப்பாற்றுங்கோ” அவள் சொன்னாள். அவர்கள் உடனே சிகிச்சையைத் தொடங்கினர். அந்த நாள் செல்வராணி மீண்டும் உயிர் பெற்றாள்.

பல ஆண்டுகள் கழித்து...

அவள் இன்னும் உயிரோடு இருக்கிறாள்.அவளது வலது கை இல்லை. ஆனால் அவளுக்கு நினைவு இருக்கிறது. அவள் ஒரு கதையை எப்போதும் சொல்வாள்.

“என் குடும்பம் நான் இறந்துவிட்டேன் என்று நினைத்தார்கள். ஆனால், இந்த மண்ணுக்காக போராடிய ஒரு பெண் போராளி என்னை அந்த மணலிலிருந்து உயிரோட எடுத்துச் சென்றாள்.”

போர் பல உயிர்களை எடுத்துச் செல்லும். ஆனால், சில நேரங்களில் அதே போரின் நடுவில் ஒரு மனிதன் மற்றொரு மனிதனின் உயிரை காப்பாற்றுகிறான்.

விஸ்வமடு மணலில் இன்னும் பல கதைகள் புதைந்து கிடக்கின்றன.

அவற்றில் ஒன்று

ஒரு கையை இழந்த தாயின் கதை.

அவளை...

ஒரு பெண் போராளி மரணத்தின் எல்லையிலிருந்து திரும்பக் கொண்டு வந்த கதை.

போரின் வலி

போரில் கொத்து குண்டில் கையை ,ழந்தார்,
வாழ்க்கை முனீ் கையில் வெறும் வெறுமை.

கண்ணீரில் நனைந்த முகம் சொல்கிறது,
இறந்த கனவுகளினீ் கதையை.

வலியில் திணறியும் நெஞ்சம் பேசுகிறது,
மண்ணினீ் நினைவுகள் மறக்கமுடியாத வலி.

பிறர் நினைவுகளில் என்றும் நிலைபெறும்,
வீரத்தின் குரல் சிந்தும் சுடராய் வாழும்.



கூச்சிக்காக ஓடிய

கால்கள்

வடக்குக் கடலின் உப்பு மணம் கலந்த காற்று மெதுவாக வீசிக் கொண்டிருந்தது. அந்தக் காற்று ஒரு காலத்தில் குழந்தைகள் விளையாடிய மணல் வெளிகளைத் தொட்டுச் செல்லும். ஆனால், அந்த நாட்களில் அந்த நிலம் விளையாட்டின் நிலம் அல்ல.

அது பதுங்கிய உயிர்களின் நிலம்.

அது முள்ளிவாய்க்கால்.

மணலில் தோண்டப்பட்ட சிறிய பதுங்குகுழிகள். அவற்றுக்குள் பெண்கள், முதியவர்கள், குழந்தைகள். வானம் திறந்து விழுந்ததுபோல குண்டுகள் தினமும் விழுந்து கொண்டிருந்தன.

மரங்களின் நிழல்கூட பாதுகாப்பாகத் தோன்ற வில்லை. கடலும் அந்த நாட்களில் அமைதியாக இல்லை; அதன் அலைகள்கூடப் பயந்து மெதுவாகக் கரையைத் தொட்டன. அந்த மணல்வெளியில்

ஆயிரக்கணக்கான மக்கள். ஒரு சிறிய இடத்திற்குள் அடைக்கப்பட்ட பறவைகளைப் போல இருந்தார்கள்.

குழந்தைகள் அழுதார்கள். மூதாட்டிகள் மெதுவாக சுவாசத்தை இழுத்துக்கொண்டிருந்தார்கள். அம்மாக்கள் குழந்தைகளின் வாயை மூடி அழுகையின் சத்தம் வெளியில் செல்லாமல் தடுக்க முயன்றார்கள். அந்த பதுங்குகுழிகளில் ஒன்றில் சுமார் பத்து சிறுவர்கள் இருந்தார்கள். அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள்... ரூபி.

ரூபி ஒரு போராளி.

ஆனால், அந்த நேரத்தில் அவள் கையில் துப்பாக்கி இல்லை. அவள் கையில் இருந்தது பசியால் நடுங்கும் குழந்தைகளின் கைகள்.

“அக்கா... பசிக்குது....”

ஒரு சிறிய குரல் எழுந்தது.

அது அகரன்.

மண் படிந்த முகம். ஆனால், கண்களில் இன்னும் குழந்தைத் தனமான சிமிட்டல் இருந்தது. ரூபி அந்த முகங்களைப் பார்த்தாள். பசி அவர்களின் கண்களில் ஒரு வெற்றிடமாக இருந்தது.

பதுங்குகுழியை விட்டு வெளியே போனால்

வானத்தில் சுற்றும் விமானங்கள் காணும்.

கொத்துக் குண்டுகள் விழும்.

பொஸ்பரஸ் தீ மண்ணையே எரிக்கும்.

ஆனால், பசியை மறைக்க முடியாது. அந்த நேரத்தில் தூரத்தில் ஒரு புகை எழுவது ரூபியின் கண்களுக்குப்பட்டது. அது ஒரு கஞ்சிக் கொட்டகம். யாரோ அங்கே கஞ்சி ஊற்றிக் கொண்டிருந்தார்கள். ரூபி அருகில் இருந்த ஒரு காலி வாளியை எடுத்தாள்.

“நான் போயிட்டு வரேன்...”

அவள் மெதுவாகச் சொன்னாள். அவள் மணலைத் தாண்டி ஓடினாள். புகையைத் தாண்டி ஓடினாள். வானத்தின் சத்தத்தைத் தாண்டி ஓடினாள். அந்த இடத்துக்குச் சென்றாள். வாளியில் கஞ்சியை நிரப்பினாள். அந்தக் கஞ்சி சூடாக இருந்தது.

“இதைப் பார்த்தா பிள்ளைகள் சந்தோஷப்படுவாங்க...” என்று அவள் மனதில் நினைத்தாள்.

அவள் திரும்பி ஓட ஆரம்பித்தாள். அந்த நேரத்தில் பதுங்குகுழிக்குள் இருந்த அகரன் தூரத்தில் வாளியுடன் ஓடிவரும் ரூபியைப் பார்த்தான். அவன் கண்கள் ஒளிர்ந்தன.

“கஞ்சி!”

அவன் கத்தினான்.

அவன் காத்திருக்கவில்லை.

அவன் பதுங்குகுழியிலிருந்து வெளியே ஓடினான்.

“அக்கா... கஞ்சி!”

அவனது சிறிய கால்கள் மணலைத் தள்ளின.

அந்த சில நொடிகளில் அவன் உலகம் முழுவதும் அந்த கஞ்சிதான். அந்த நேரத்தில் வானம் கிடு கிடுத்தது.

ஒரு வெடிப்பு. மண் கலந்த தூசிகள் உயர்ந்து பரந்து எழுந்தன. ரூபி கீழே விழுந்தாள். அவள் மீண்டும் எழுந்தாள். வாளி இன்னும் அவள் கையில் இருந்தது.

சில அடிகள் முன்னால் அகரன் கிடந்தான். அவன் அமைதியாக இருந்தான். அவனுடைய இரு கால்களும்

இல்லை.

ரூபி அவனருகே ஓடினாள். அவள் கைகள் நடுங்கின.

“அகரன்....”

அவன் மெதுவாகக் கண்களைத் திறந்தான். அவன் முதலில் பார்த்தது வாளியில் இருந்த கஞ்சியை. அவன் மெதுவாகச் சொன்னான்:

“அக்கா... கஞ்சி.... ! விழுந்துடாதே....” எச் சொல்லியவாறு, அகரன் தன்னுடைய கண்களை மூடத் தொடங்கினான், அசைவற்றவனாக...

ரூபியின் கண்ணீர் மண்ணில் விழுந்து கொண்டேயிருந்தது. அவள் அந்த சிறுவனைத் தூக்கிக்கொண்டாள்.

நீண்ட தூரம் ஓடினாள். அவள் சென்றது, களமுனைகளின் மத்தியில், காயமடைந்தவர்களுக்கு மருத்துவ சிகிச்சை நடைபெறும் போராளிகளின் முகாம். முகாமுக்குள் நுழைந்ததும், அங்கிருந்த களமுனைப் போராளி மருத்துவர்கள் அவனை மீளுயிர் பெற வைத்தனர்.

பதினெட்டு ஆண்டுகள் கழித்து...
மீண்டும் அதே நிலம்.
மீண்டும் அதே கடல் காற்று.
முள்ளிவாய்க்கால் நினைவு நாளில்
மக்கள் வழியோரமாக அமைதியாக நடந்து சென்று கொண்டிருந் தார்கள்.

அந்த வழியில் ஒரு இளைஞன் சக்கர நாற்காலியில் உட்கார்ந் திருந்தான். அவன் முன் ஒரு பெரிய பாத்திரம்.

அதில்... கஞ்சி.

அவன் அமைதியாக வந்தவர்களுக்கு கஞ்சியை ஊற்றிக் கொடுத்துக் கொண்டிருந்தான். ஒரு முதியவர் அவனைப் பார்த்துக் கேட்டார்:

“தம்பி...!”

ஏன் நீங்க இங்கே கஞ்சி கொடுக்கிறீங்க?”

அவன் பதில் சொல்லவில்லை. அவன் மெதுவாகத் தன் தலையைக் குனிந்தான். அவன் பார்வை கீழே சென்றது. அவன் கால்கள் இருந்த இடத்தைப் பார்த்தான். அங்கு கால்கள் இல்லை. அவன் மீண்டும் மேலே பார்த்தான். அவன் முகத்தில் ஒரு சிறிய சிரிப்பு. அவன் மெதுவாகச் சொன்னான்:

“ஒருநாள்...

“கஞ்சிக்காக நான் ஓடினேன்.”

சில நொடிகள் அமைதி. பிறகு அவன் கையில் இருந்த கரண்டியை உயர்த்தி மற்றொரு பாத்திரத்தில் கஞ்சி ஊற்றினான்.

அவன் மெதுவாகச் சொன்னான்:

“அந்த நாளிலிருந்து.... யாரும் கஞ்சிக்காக ஓட வேண்டாம் என்று நான் காத்திருக்கிறேன்.” அந்த வழியில் சென்றவர்கள் அந்தக் கஞ்சியை எடுத்துக்கொண்டார்கள்.

அவர்களின் கண்களில் கண்ணீர் இருந்தது. ஏனெனில் அவர்கள் கையில் இருந்தது ஒரு சாதாரண கஞ்சி அல்ல.

அது... ஒரு சிறுவன் இழந்த இரண்டு கால்களின் இன்னும் அணையாத வெப்பம்.

அந்த மாலைநேரக் கடற் கரை சிவந்தது.

சூரியன் மறையவில்லை. அது ரத்தமாக கரைந்தது போல இருந்தது. மக்கள் மெதுவாக நகர்ந்தார்கள். ஒரு முடிவில்லாத நடைபயணம். அந்த கூட்டத்தின் நடுவில் அந்த சக்கர நாற்காலி இளைஞன் இன்னும் கஞ்சி கொடுத்துக் கொண்டிருந்தான்.

குழந்தைகள் கிண்ணத்தைப் பிடித்தார்கள்.

அவர்கள் சிரிக்க முயன்றார்கள்.

அந்தக் கஞ்சி

ஒரு உணவல்ல.

அது – ஒரு நினைவு.

அது – ஒரு மனிதனின் காயம்.
அது – மனிதநேயம் இன்னும் உயிரோடு இருக்கிறது என்பதற்கான சாட்சி.

அந்த நாளில் முள்ளிவாய்க்காலின் மணல் ஒரு உண்மையை மட்டும் நினைவில் வைத்துக்கொண்டது:

ஒரு சிறுவன் தன் கால்களை இழந்த பிறகும் மற்றவர்களின் பசியை மறக்கவில்லை.

அதுதான்

கஞ்சியின் வெப்பம்.

போரின் பசி

“போரின் வெற்றிக் குரலில் பசி தீட்டிய,
கஞ்சிக்கு காத்து, கண்ணீர் விட்டு நின்றான்.
விமான குண்டின் ஓலியில் காலை இழந்தான்,
மண்ணில் விழுந்த சுடரின் சாயல் போல.

இரத்தம் சென்று மண்ணோடு கலந்து,
நெஞ்சில் நிழல் போல பதிந்தது.
போரின் வெளிளத்தில் எழுந்த குரல்,
மறக்க முடியாத வலி சொன்னது.”



பசியின் நிழல்

முள்ளிவாய்க்காலின் மண்ணில் அந்த நாட்களில்... பசி ஒரு தெரியப்படாத நிழல்போல வாழ்ந்தது. அது எங்கும் இருந்தது. மணலில். காற்றில். மக்களின் கண்களில்.

அங்கு உணவு இல்லையென்றல்ல. சில இடங்களில் அரிசி மூட்டைகள் இன்னும் இருந்தன. சில பெண்கள் சிறிய பாத்திரங்களை பிடித்து நின்றிருந்தார்கள்.

ஆனால்,

அடுப்பில் தீ மூட்ட யாருக்கும் தைரியம் இல்லை. வானம் ஒவ்வொரு நிமிடங்களிலும் வாயைப் பிளந்தது. அதிலிருந்து கொத்துக் குண்டுகள் மழை போல விழுந்தன. ஒரு அடுப்பு பற்ற வைத்தால் அந்தப் புகை மரணத்தை அழைக்கும் சின்னமாக மாறிவிடும்.

அதனால்... அரிசி இருந்தும் பசி இருந்தது.

ஒரு பழைய மரத்தின் கீழ் சில குழந்தைகள் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் விளையாடவில்லை. அவர்கள் சண்டையிடவும் இல்லை. பசி இருக்கும் போது குழந்தைகளின் குரலும் மெதுவாகி விடுகிறது.

ஒரு சிறுவன் தனது வயிற்றை மெதுவாகப் பிடித்துக் கொண்டான்.

“அக்கா... சாப்பாடு எப்போ வரும்?”

அந்தக் கேள்வி

அங்கே இருந்த பெரியவர்களின் இதயத்தை மெல்லக் கிழித்தது.

ஆனாலும்.... பதில் யாரிடமும் இல்லை. அந்த மரத்திலிருந்து சிறிது தூரத்தில் சில போராளிகள் நின்றிருந்தார்கள்.

அவர்களின் முகத்தில் தூசி. கண்களில் பல இரவுகளின் தூக்க மின்மை.

ஆனால் அவர்கள் இன்னும் நின்றிருந்தார்கள்.

அவர்கள் கையில் ஆயுதம் இருந்தது.

ஆனால்,

அவர்கள் காக்க முயன்றது ஒரு நிலத்தை மட்டும் அல்ல. அவர்கள் காக்க முயன்றது அந்த நிலத்தில் வாழ்ந்த மக்களையும். அந்தக் குழந்தைகள். அவர்களுக்காகவே அவர்கள் அந்த மண்ணில் போராடி னார்கள்.

அவர்களிடம் ஒரு சிறிய உணவு. ஒரு நாளில் ஒருமுறை கிடைக்கும் அவர்களின் ஒரே உணவு.

சிறிது அரிசி.
சிறிது உப்பு.
அது போதும்

ஒரு மனிதன் இன்னும் சில மணி நேரம் உயிரைக் காப்பாற்ற.

ஒரு போராளி அந்தப் பாத்திரத்தைத் திறந்தான். அந்த நேரத்தில் அவன் பார்வை மர நிழலில் அமர்ந்திருந்த குழந்தைகளைத் தொட்டது. அவர்கள் அமைதியாக இருந்தார்கள்.

ஆனால் அவர்களின் கண்களில் ஒரு கேள்வி இருந்தது.

பசி தீராதா என்பதாய்?.

“நாம் சாப்பிடலாமா?” ஒருவர் மெதுவாகக் கேட்டார். அது ஒரு சாதாரண கேள்வி அல்ல. அது பசியும் கடமையும் இடையே நிற்கும் கேள்வி.

ஒரு நிமிடம் யாரும் பேசவில்லை.

பிறகு... மற்றொருவர் மெதுவாகச் சொன்னார்.

“அவர்கள் சாப்பிடட்டும்.”

போராளிகள் அந்த உணவை எடுத்துக் கொண்டு மர நிழலுக்குச் சென்றார்கள். குழந்தைகளின் முன் வைத்தார்கள்.

ஒரு சிறுமி அவர்களைப் பார்த்தாள்.

“மாமா... நீங்க சாப்பிட மாட்டீங்களா?”

ஒரு போராளி மெதுவாகச் சிரித்தான். அந்தச் சிரிப்பில் பசி இருந்தது.

ஆனால்,

அதை விட பெரியதாய் இருந்தது ஒன்று!

அன்பு.

“நாங்க பிறகு சாப்பிடலாம்.”

குழந்தைகள் அந்த உணவை மெதுவாகச் சாப்பிட்டார்கள். அவர் களின் முகத்தில் ஒரு சிறிய பிரகாசம்.

அந்தக் காட்சியை போராளிகள் அமைதியாகப் பார்த்தார்கள். அவர்களின் வயிற்றில் பசி இன்னும் இருந்தது. ஆனால் அவர்களின் உள்ளத்தில் ஒரு அமைதி இருந்தது. அந்த நேரத்தில் வானம் மீண்டும் வாய் பிளந்தது. ஒரு பெரும் வெடிப்பு. மண் நடுங்கியது. புகை வானத்தை மூடியது. ஆனால், அந்த மர நிழலில் சிறுவர்கள் இன்னும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

பல ஆண்டுகள் கழித்து....

ஒரு மனிதன் அந்த இடத்துக்குத் திரும்பி வந்தான். அவன் அந்த மரத்தைப் பார்த்தான். அவன் மணலைத் தொட்டான். அவன் அந்த நாளில் அந்த மரத்தின் கீழ் இருந்த ஒரு சிறுவன். அவன் மெதுவாக சொன்னான்:

“அவர்கள் எங்களுக்காக போராடினார்கள்”. அவர்கள் எங்களுக்காக பசியையும் தாங்கினார்கள். அந்த நாள்... அவர்கள் சாப்பிடவில்லை. நாங்கள் சாப்பிட்டோம். அதனால்தான் நாங்கள் இன்னும்...

“உயிரோட இருக்கோம்.”

போர் வீரர்களின் பெயர்களை எழுதலாம். ஆனால், சில உண்மைகள் அமைதியாக மண்ணில் மறைந்து போகின்றன. பசியால் வாடும் குழந்தைகளுக்கு தங்கள் ஒரே உணவை கொடுத்த மனிதர்கள். அவர்கள் அந்த மண்ணுக்காகப் போராடினார்கள். அதே மண்ணில் வாழ்ந்த மக்களுக்காகத் தங்கள் பசியையும் மறந்தார்கள். அவர்களின் பெயர்கள் வரலாற்றில் இல்லாமல் போகலாம்.

ஆனால்... அவர்கள் கொடுத்த அந்த ஒரு உணவு ஒரு தலை முறையின் உயிராக மாறியது என்பதை அந்த மண் அறியும்.





கடைசிக் கட்டு

பிள்ளிவாய்க்காலின் மாலை வானம் அந்த நாளில் ஒரு வண்ணத்தை அணிந்திருந்தது. அது சிவப்பு அல்ல. அது சாம்பலும் அல்ல.

இரத்தம் வானத்தைத் தொடும்போது அது எப்படிப் பட்ட நிறமாக மாறுமோ அப்படியொரு மங்கலான ஒளியின் படர்வாக இருந்தது.

அந்த வானத்தை பார்த்தவர்கள் அதன் அழகைக் காணும் நிலையில் இல்லை.

அவர்கள்

அதன் கீழ் உயிரோடு இருப்பதற்காக போராடிக்கொண்டு இருந்தார்கள்.

மணலில் தோண்டப்பட்ட ஒரு குழி. அதன் மேல் கிழிந்த பிளாஸ்டிக். மணல் மூட்டைகள். சிறிது நிழல்.

அதுவே,

அந்த இடத்தில் “மருத்துவமனை”. அங்கு மருத்துவ சாதனங்களின் ஒலி இல்லை. ஆனால் மனித வலியின் ஒலி இருந்தது.

குழந்தையின் அழுகை.
மூச்சுத் திணறல்.
மெல்லிய முனங்கல் “அம்மா” என்ற குரல்கள்.

அவை எல்லாம் அந்த மணலில் உறைந்து கிடந்தன. அந்த இடத்தில் ஒரு மனிதன் தொடர்ந்து அசைந்து கொண்டிருந்தான்.

அருணன். அவரை அங்கே இருந்தவர்கள் “டாக்டர் அண்ணா” என்றவாறு அழைத்தார்கள். அவர் மருத்துவராகப் பிறக்கவில்லை. அவரை மருத்துவராக தேர்வு செய்தார்.

ஏனெனில்,

போரின் நடுவில் யாரோ ஒருவரின் உயிரைக் காப்பாற்ற வேண்டும். அவருடைய கைகளில்... ஒரு பழைய மருத்துவப் பை. அதன் உள்ளே இருந்தவை அதிகம் இல்லை.

சில மருந்துகள். சில துணிகள். மற்றும் கட்டுப் பட்டுகள். அந்த நாள் காயமடைந்தவர்கள் அலை போல வந்து கொண்டே இருந்தார்கள்.

ஒரு சிறுவன்.. அவனுடைய கண்களில் பயம். ஒரு வயதான பெண்... அவளுடைய முகத்தில் சோர்வுத் திரை.

ஒரு இளம் தாய்... தன்னுடைய காயத்தை மறந்து குழந்தையை மட்டும் படபடப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

அருணன் ஒவ்வொருவரையும் பார்த்தார். ஒவ்வொரு உயிரையும் ஒரு சிறிய உலகம்போல. ஒரு பெண் அவரது கையைப் பற்றி பிடித்தாள்.

“டாக்டர் அண்ணா...”

அவள் குரல் உடைந்தது.
“என் பையன்...

அவன் உயிர் பிழைப்பானா?”

அருணன்... அந்தச் சிறுவனின் மார்பில் கையை வைத்தார்.

மெல்லிய மூச்சு.

மெல்லிய துடிப்பு.

உயிர் இன்னும் அங்கே ஊசலாடியது. அவர் நம்பிக்கையோடு மெதுவாகச் சிரித்தார்.

“பிழைப்பான்.”

அந்தச் சொல்லில் ஒரு மருத்துவரின் அறிவு இல்லை. ஒரு மனிதனின் அபாரநம்பிக்கை இருந்தது.

தூரத்தில் பலமான
வெடிப்பு.
மண்.
புகை.
வானம்

ஒவ்வொரு நொடியும் அதிர்வால் சிதறியது. ஒரு போராளி ஓடி வந்தான்.

“அண்ணா!

இங்கிருந்து நகரனும்... செல் வருது!”
அருணன் அவரைப் பார்த்தார்.
பின் முன் படுத்திருந்தவர்களையும் பார்த்தார்.

மூன்று உயிர்கள். அவர்களால் நகர முடியவில்லை. அவரால் போக முடியவில்லை. அந்த சில நிமிடங்களில் நேரம் நின்று போனது.

பிறகு... ஒரு மறுபடியும் பெரும் வெடிப்பு. மண் வானத்தில் அள்ளி எறியப்பட்டது. பிளாஸ்டிக் தாள் கிழிந்தது.

ஒளி... ஒரு கணத்தில் பளிச்சிட்டு மறைந்தது.

அருணன் தரையில் விழுந்தார்.
அவரது தோளில் இரத்தம் வழிந்தது. அவருக்கே காயம்.
ஆனால்...



அவர் முதலில் பார்த்தது தன் காயத்தை அல்ல. அவரது அருகில் ஒரு சிறுமி. அவளுடைய மூச்சு வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருந்தது.

அருணன் மருத்துவப் பையைத் திறந்தார். அதில் மீதமிருந்தது ஒரே ஒரு கட்டுப்பட்டு.

அந்த நொடி

அவரது வாழ்க்கையின் மிக நீண்ட நொடியாக இருந்தது.

தன் காயமா?
அல்லது
அந்தச் சிறுமியா? அவர் ஒரு கணம் மட்டும் யோசித்தார்.

பின்... அந்தக் கட்டுப் பட்டு அந்தச் சிறுமிக்கே என்றானது. சிறுமி மெல்லக் கண்களைத் திறந்தாள்.

“அண்ணா....” அவள் குரல் மெல்லிய காற்றில்....

“நான் உயிர் பிழைப்பேனா?”

அருணன் சிரித்தார்.... அந்தச் சிரிப்பில் வலி இருந்தது. ஆனால் அதை விட பெரியது கருணை.

“நீ பிழைப்பாய்.”

சில நேரம் கழித்து அந்தச் சிறுமி பாதுகாப்பான இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டாள்.

அருணன்... அங்கேயே இருந்தார்.



ஒரு மறுபடியும் பெரும் வெடிப்பு. அள்ளி எறியப்பட்ட அவரது வயிற்றில் இருந்து இரத்தம் மெதுவாக மணலில் கலந்து கொண்டிருந்தது. அவர் வானத்தைப் பார்த்தார். அந்த நேரத்தில் முள்ளிவாய்க்கால் வான் பரப்பு அமைதியாக இருந்தது.

ஒரு விசித்திரமான அமைதி. ஒரு மனிதன் உலகத்திலிருந்து அமைதியாக விலகும் அந்தச் சிறிய அமைதி.

பல ஆண்டுகள் கழித்தன...

ஒரு இளம் பெண் ஒரு நினைவிடம் முன் நின்றாள். அவள் கரங்களில் ஏந்திய ஒரு மலரை வைத்தாள். அவள் தான் அந்த நாளில் காப்பாற்றப் பட்ட சிறுமி. அவள் மெதுவாக சொன்னாள்:

"அண்ணா... நான் இன்னும் உயிரோட இருக்கேன்." போர் எப்போதும் வீரர்களை நினைவில் வைக்கும்.

ஆனால்...

அது மறந்து விடுகிறது அமைதியாக உயிரைக் காப்பாற்றிய வர்களை. ஒரு கட்டுப்பட்டை கொண்டு அந்த உயிரைக் காப்பாற்றிய மருத்துவ மனிதனை. முள்ளிவாய்க்காலின் மணலில் இன்னும் பல கதைகள் புதைந்து கிடக்கின்றன.

அவற்றில் ஒன்று ஒரு மருத்துவரின் கதை அல்ல. ஒரு மனிதனின் கதை. ஒரு உயிரை காப்பாற்ற தன் உயிரையே அமைதியாக விட்டு சென்ற ஒரு மனிதனின் கதை.

நினைவுகளின் சாட்சி

அவனின் பெயர் அருண்கதிர்.

ஆனால் யாரும் அவனை அந்த பெயரில் அழைப்பதில்லை.

முகாமில் அவனை “பத்திரிகையாளர்” என்று தான் அழைப்பார்கள். அவன் ஒரு கையிலே பேனா வைத்திருந்தான். மற்றைய கையிலே பழைய கேமரா. ஆனால், அவன் எடுத்த புகைப்படங்களில் பாதியையேனும் உலகம் ஒருபோதும் பார்க்கவில்லை.



அவன் காயமடைந்தபோது அவனைத் தாங்கிக் கொண்டது அந்தச் சிறிய மருத்துவமனை. அது மருத்துவமனை அல்ல. அது ஒரு நாட்டின் உடைந்த மனச்சாட்சி. அங்கிருந்த வாசனை... மருந்தின் வாசனை இல்லை. அது காயங்களின் வாசனை.

அருண்கதிர் கண்களைத் திறந்தபோது முதலில் கேட்டது ஒரு குழந்தையின் சத்தம். அவன் தலையைத் திருப்பிப் பார்த்தான். ஒரு குழந்தை தன் தாயின் மார்பில் முகத்தைப் புதைத்திருந்தது. அந்த தாய் அசையவில்லை. அந்த குழந்தை இன்னும் பாலைத் தேடியது.

அருண்கதிரின் கைகள் நடுங்கின.

அவன் கேமராவை எடுத்தான். ஆனால், ஒரு நொடி கழித்து அதை மீண்டும் கீழே வைத்தான். சில காட்சிகள் உலகம் பார்ப்பதற்காக மட்டும் அல்ல... அவை மனிதன் மறக்கக் கூடாதவை . மருத்துவமனைத் தரையில் ஒரு பெண் வலியோடு கிடந்தாள். அவள் அகதி முகாமுக்குச் செல்லும் பேருந்திலிருந்து இறக்கப்பட்டவள்.

அவள் கர்ப்பிணி.

அங்கு யாரும் மருத்துவர் இல்லை. யாருக்கும் மருந்து இல்லை. ஆனால் அந்த இரவில் ஒரு குழந்தை பிறந்தது.



வெடிக்கும் ஒலிகளின் நடுவில்... அந்த குழந்தை அழுதது.

அந்த அழுகை ஒரு புதிய உயிரின் சத்தம் அல்ல. அது ஒரு உடைந்த நாட்டின் முதல் சுவாசம் போல இருந்தது.

அருண்கதிர் அங்கே எல்லா வற்றையும் பார்த்தான். மனிதன் பார்க்கக்கூடாத காட்சிகளை முன்பும் பார்த்திருந்தான்.

ஒரு நாள் அவன் ஒரு உடலைப் பார்த்தான்.

ஒரு தாயினது.

அவள் உயிரிழந்திருந்தாள். அவள் வயிற்றின் காயத்தின் வழியே ஒரு சிறிய கை வெளியே தெரிந்தது. அந்தக் கையை பார்த்தபோது அருண்கதிர் திடீரென்று கண்களை மூடிக் கொண்டான்.

“கருவறை கூட பாதுகாப்பான இடமில்லை...”

என்று அவன் மனதில் ஒரு குரல் எழுந்தது. முகாமின் வாழ்க்கை இன்னுமொரு இருள் படிந்தது. அங்கே மக்கள் உயிரோடு இருந்தார்கள். ஆனால், மனித மரியாதை மெதுவாக இறந்து கொண்டிருந்தது.

ஒரு மாலை.

அவன் ஒரு காட்சியைப் பார்த்தான். அது அவனுக்கு புதியதாய் இல்லை. பல வருடங்களுக்கு முன் அவன் சிறுவனாக இருந்தபோது ஒரு வயலில் அதே காட்சியைப் பார்த்திருந்தான்.

ஒரு பெண். சில சிப்பாய்கள். அவன் அப்போது ஓடவில்லை. ஏனெனில், அவன் உடல் பயத்தில் கல்லாகி விட்டது.

இப்போது...

வரலாறு மீண்டும் அதே காட்சியை அவன் முன்னால் நடத்தியது. அவன் திடீரென்று உணர்ந்தான். போர் ஒருபோதும் முடிவதில்லை. அது மனிதர்களின் நினைவுகளில் தொடர்கிறது. ஆனால் அந்த இரவில் அவனை முற்றிலும் உடைத்த காட்சி வேறு ஒன்று.

அவன் தந்தை. ஒரு அமைதியான மனிதர். ஒரு பள்ளி ஆசிரியர். அவரை முகாமின் நடுவில் நிற்க வைத்தார்கள். அவரை அவமானப் படுத்தினர். அருண்கதிர் அந்த காட்சியைப் பார்த்தபோது... அவன் உள்ளம் உடைந்தது. அவன் தந்தை அவனைப் பார்த்தார். அந்த கண்களில் பயம் இல்லை. அந்த கண்களில் ஒரு வேண்டுகோள் மட்டும்.

“நீ இதை மறக்காதே.”

அந்த இரவு அருண்கதிர் தூங்கவில்லை. அவன் கையில் பேனா. அவன் எழுதத் தொடங்கினான். அவன் உலகத்தை காப்பாற்ற முடியாது. ஆனால் உலகம் மறக்காதபடி செய்ய முடியும்.

அவன் எழுதினான்:

பால் குடித்த குழந்தையை... பேருந்தில் பிறந்த குழந்தையை... கருவறை கூட பாதுகாப்பாக இல்லாத நாளை... ஒரு தந்தையின்

அமைதியான கண்களை... பல ஆண்டுகள் கழித்து ஒரு பல்கலைக்கழக நூலகத்தில் ஒரு மாணவன் அந்த கட்டுரையைப் படித்தான்.

அவன் நீண்ட நேரம் பேசவில்லை. பிறகு மெதுவாகச் சொன்னான்:

“இந்த எழுத்து... வரலாறு அல்ல.”

“இது ஒரு மனிதன் தாங்கிய நினைவின் சுமை.”

நூலகர் கேட்டார்.

“அந்த எழுத்தாளரின் பெயர் தெரிகிறதா?”

மாணவன் புத்தகத்தின் முதல் பக்கத்தை பார்த்தான். அதில் எழுதப்பட்டிருந்தது:

அருண்கதிர்.

அவன் ஜன்னல் வழியாக வெளியில் பார்த்தான். மெதுவாகச் சொன்னான்:

“சில மனிதர்கள் உயிர் பிழைப்பதற்காக வாழ்வதில்லை.”

“அவர்கள் சாட்சியாக வாழ்கின்றார்கள்.”

நினைவின் சாட்சிகள்

மௌனமாகக் கிடக்கும் மண்ணின் மீது
இன்னும் கேட்கிறது அழுகையின் எதிரொலி
சிதைந்த காலங்களின் தடங்களில்
உயிர்களின் நிழல்கள் நடக்கின்றன.

தீயால் கருகிய நினைவுகள்
பழைய புகைப்படங்களாய் உறைகின்றன,
பெயர்கள் மட்டும் இல்லை
பிரார்த்தனைகளும் கூட இழந்துபோனவை.

காற்றில் மிதக்கும் சாம்பல் துகள்கள்
வரலாற்றை மீண்டும் எழுத மறுக்கின்றன,
அழிந்த குரல்களின் இடைவெளியில்
நீதியின் கேள்வி மட்டும் நிற்கிறது.

மறக்கச் சொல்லும் காலத்துக்குள்
மறுக்க முடியாத நினைவுகள் வாழ்கின்றன
அவை சாட்சிகள் அல்ல,
உண்மையின் இதயத் துடிப்புகள்.

இருள் சூழ்ந்த நினைவுப் பாதைகளில்
ஒரு தீபம் மட்டும் அணையாமல் நிற்கிறது
அது நினைவு.
அது சாட்சி.
அது மறக்க முடியாத வரலாறு.



அருட்சகோதரி மரியாளின் ஒரு குண்டு

LDங்கலான மாலை. முள்ளிவாய்க்கால் மண்ணில் அந்த மாலை ஒரு சாதாரண மாலையாகவில்லை. சூரியன் கடலுக்குள் இறங்குவதற்கு முன் வானம் சிவப்புச் சாயம் பூசி இருந்தது.

கடலிலிருந்து வீசும் காற்று உப்பு வாசனையாக மட்டும் அல்ல... புகை, வெடிபொருட்கள், எரிந்த பிளாஸ்டிக், மனித அச்சம்... அனைத்தையும் ஏந்தி வந்தது. தூரத்தில் தொடர்ந்து கேட்கும் துப்பாக்கிச் சத்தம் ஒரே செய்தியைச் சொல்லிக் கொண்டிருந்தது:

இராணுவம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

அந்த மாலை மண்ணின் மேல் ஆயிரக்கணக்கான காலடிச் சுவடுகள் இருந்தன. இடம்பெயர்ந்த மக்கள். குடும்பங்கள். அழும் குழந்தைகள் என... அந்த நாட்களில் ஒரு பெரிய துயரம் உருவாகி இருந்தது. பல பிள்ளைகள் பெற்றோர்களைத் தவறவிட்டிருந்தனர். பல பெற்றோர்கள் பிள்ளைகளை இழந்திருந்தனர்.

மண்ணின் மேல்

“அம்மா...!”

“அப்பா...!”

என்ற குரல்கள் மட்டுமே அலைந்தன. அந்த குழப்பத்தின் நடுவில் இரண்டு போர்நிலையில் அவர்கள் இருந்தனர். ஒரு போர் முன்னரங்கில். மற்றொரு போர் மக்களை காப்பாற்றும் மனிதநேயப் போரென...

அவர்கள் போராளிகள். அவர்களில் ஒருத்தி தமிழினி.

குறுகிய தலைமுடி, மண்ணால் படிந்த முகம், கையில் பழைய துப்பாக்கி. அவள் ஒரு வரைபடத்தை பார்த்து மெதுவாகச் சொன்னாள். “அந்தப் பதுங்குகுழிகளில் இன்னும் குழந்தைகள் இருக்கிறார்கள். இராணுவம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. நாம் இப்போ போய்தான் அவர்களை மீட்டுக் கொண்டு வரணும்.”

அவளுடன் இன்னும் இரண்டு பெண் போராளிகள் இருந்தனர். கதிர்மதி மற்றும் யாழினி.

அவர்கள் தாழ்ந்து ஓடத் தொடங்கினர். மண்ணில் தோண்டப்பட்ட ஒரு பதுங்குகுழி. அதற்குள் ஐந்து பெண் குழந்தைகள். அவர்களில் பத்து வயதுக்கும் குறைவான ஒரு சிறுமி தரையில் படுத்திருந்தாள்.

அவள் பெயர் காவியா. அவளின் வலது காலில் குண்டு சிதறல் காயம். அவள் அசைய முடியாமல் மண்ணில் படுத்திருந்தாள்.

அவள் அருகில் அவளின் கையை பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள் மற்றொரு சிறுமி...

நிலா.

அந்த குழந்தைகளுடன் ஒரு பெண் இருந்தாள். வெள்ளை ஆடை யணிந்த ஒரு கிறிஸ்தவ மதப்பணி செய்பவர்.

அருட்சகோதரி மரியாள்.

அவள் கையில் ஒரு ஜெபமாலை. அவள் மெதுவாக ஜெபித்துக் கொண்டிருந்தாள். அந்த நேரத்தில் மண்ணைத் தள்ளியபடி ஒரு கனமான காலடி. ஒரு சிங்கள இராணுவ சிப்பாய்... அந்த பதுங்கு குழியைப் பார்த்தான்.

அவன் கண்கள் அந்தக் குழந்தைகளின் மீது விழுந்தன. பிறகு அவன் காயமடைந்த காவியாவைப் பார்த்தான். அவன் அவளின் கையைப் பிடித்து மண்ணில் இழுத்தான்.

“அக்கா...!”

நிலா கத்தினாள். அந்த குரல் மங்கலான மாலையின் அமைதியைக் கிழித்தது.

அந்தக் குரலை அருட்சகோதரி மரியாள் கேட்டாள் அவள் கண்கள் ஒரு கணம் வானத்தை அண்ணாந்து நோக்கின. அவள் வாழ்நாளில் கையில் பிடித்தது ஜெபமாலை மட்டுமே.

ஆனால், அந்தப் பதுங்குகுழியில் பெண் போராளி தமிழினி அவளிடம் ஒரு ஆயுதத்தைக் கொடுத்திருந்தாள்.

“சிஸ்டர்,”

தமிழினி மெதுவாக சொன்னாள். “இந்த துப்பாக்கியை பிடிச்சு வச்சிருங்க. யாரும் குழந்தைகளுக்கு அருகே வரக்கூடாது.”

தமிழினி... மற்ற குழந்தைகளை தவண்டு தவண்டு வெளியே கொண்டு செல்லத் தொடங்கினாள். மண்ணின் மேல் குண்டுகள் இன்னும் விழுந்து கொண்டிருந்தன. அந்த நேரத்தில் அந்தச் சிப்பாய் காவியாவை இழுத்துக்கொண்டே போனான்.

அவள் காயமடைந்த காலில் மண் ஒட்டிக் கொண்டிருந்தது. அந்தக் குழந்தை உயிரோடு இருக்கிறாளா இல்லையா என்பதே தெரிய வில்லை.

அருட்சகோதரி மரியாள் துப்பாக்கியை எடுத்தாள். அவள் கைகள் முதற் தடவையாக நடுநடுங்கின. அவள் இதயம் வேகமாகத் துடித்தது. அந்தக் கணத்தில் அவள் ஒரு கேள்வி மட்டும் கேட்டாள்:

“இந்த குழந்தை உயிரோட இருக்கணும் இல்லையா?”

அவள் துப்பாக்கியை உயர்த்தினாள். ஒரு சத்தம். ஒரு குண்டு.

மங்கலானமாலை ஒரு கணம் அமைதியானது. சிப்பாய் மண்ணில் விழுந்தான். சில நிமிடங்களில் தமிழினியும் கதிர்மதியும் திரும்பி வந்தனர்.

அவர்கள் காவியாவையும் மீதமிருந்த குழந்தைகளையும் அந்த இடத்திலிருந்து எடுத்துச் சென்றனர்.

அருட்சகோதரி மரியாள் அமைதியாகச் சொன்னாள்:

“நான்..

அவனைச் சுட்டுவிட்டேன்.”

தமிழினி... அவளின் தோளில் கையை வைத்தாள். அவள் மெதுவாகச் சொன்னாள்:

“இன்று நீங்கள் ஒரு ஆயுதம் எடுத்ததில் தப்பில்லை சிஸ்டர்... ஒரு குழந்தையின் உயிரைக் காப்பாற்றினீர்கள்.” சிஸ்டர் கண்களில் ஒரு நிதானம் குடி கொண்டிருந்தது.

போரின் வேளையில் பாசமாய் நின்ற
பாதுகாப்பு கரங்கள் அருட்சகோதரிகள்.
காயம் கண்ட கண்களுக்கு ஆறுதல் தந்தார்,
கருணை மொழியில் நம்பிக்கை விதைத்தார்.
இருள் சூழ்ந்த நாளில் ஒளி போல வந்து,
இனிய சேவையால் உயிர்களைக் காத்த அருட்சகோதரிகள்.



மௌனத்தின் ஓலம்

LDITலை வெயில் சாலையின் மேல் மெதுவாக இறங்கிக் கொண்டிருந்தது. பழைய பேருந்து நிலையம் அருகிலுள்ள பாதை யோரத்தில் சில பெண்கள் அமர்ந்திருந்தனர். அவர்களின் கைகளில் புகைப்படங்கள். அந்தப் புகைப்படங்களில் இளம் முகங்களாய் சிலர் சிரித்தபடி,... சிலர் மாணவர் ஆடைகளில், சிலர் இன்னும் குழந்தைத் தனத்தை இழக்காத முகங்களுடன்.

அவர்கள் முன் ஒரு பலகை.

“எங்கள் பிள்ளைகள் எங்கே?”

மழையும் வெயிலும் அதை மங்கச் செய்திருந்தது.

சிவகாமி அம்மா தனது கையில் இருந்த புகைப்படத்தை மெதுவாகத் துடைத்தாள். அது அவளது மகன் அருணின் படம்.

பல்கலைக்கழக மாணவன். ஒரு இரவு சில வாகனங்கள் வீட்டின் முன் நின்றன. அவர்கள் அவனை அழைத்துச் சென்றார்கள். அதற்குப் பிறகு அவன் திரும்பி வரவில்லை.

முதல் நாட்களில்

அவள் எல்லோரிடமும் கேட்டாள். போலீஸ் நிலையத்தில் கேட்டாள். அரசு அலுவலகத்தில் கேட்டாள். மனித உரிமை அமைப்புக்களிடம் கேட்டாள். அவள் கேட்ட கேள்வி ஒன்றே ஒன்று.

“என் மகன் எங்கே?”

அவர்களின் பதிலும் ஒன்றே ஒன்று.

மௌனம்.

ஒரு நாள் அவள் தெரிந்துகொண்டாள் அவள் மட்டும் அல்ல. அதே கேள்வியுடன் இன்னும் பல அம்மாக்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

ஒருவர் தனது மகனைத் தேடினார். மற்றொருவர் தனது கணவரைத் தேடினார். ஒரு பெண் தனது சகோதரனை.

அவர்கள் அனைவரும் ஒரு நாள் வீதியின் ஓரத்தில் அமர்ந்தார்கள். கைகளில் புகைப்படங்களுடன். அதன் பிறகு அந்த வீதி அவர்களின் காத்திருப்பின் இடமாக மாறியது.

மழை பெய்தது.

வெயில் கொதித்தது.

நாட்கள் ஆண்டுகளாக மாறின.

ஒரு நாள்... ஒரு வெளிநாட்டு அதிகாரி வந்தார். அவர் அந்தப் பெண்களைப் பார்த்து சொன்னார்:

“உங்கள் வேதனையை நாங்கள் புரிந்துகொள்கிறோம்.”

சிவகாமி அம்மா அவரை நேராகப் பார்த்தாள்.

அவள் மெதுவாகக் கேட்டாள்:

“அப்படியானால்...

என் மகன் எங்கே?”

அவர் பதில் சொல்லவில்லை. அவர் திரும்பிச் சென்றார்.

ஒரு மாலை அந்த போராட்டத்தில் இருந்த ஒரு முதிய அம்மா திடீரென்று கீழே சாய்ந்தார். அவர் கையில் இருந்த புகைப்படம் தரையில் விழுந்தது. அதில் ஒரு இளைஞன் சிரித்துக் கொண்டிருந்தான். அந்த புகைப்படத்தை யாரோ எடுத்துப் பார்த்தார்கள். அதை மெதுவாக அவரது மார்பின் மேல் வைத்தார்கள். அவர் எழுந்திருக்கவில்லை. அடுத்த நாள்

மற்றய பெண்கள் மீண்டும் அதே இடத்தில் அமர்ந்திருந்தனர். புதிய பலகை ஒன்று வைக்கப்பட்டது. அதில் எழுதப்பட்டிருந்தது:

“எங்கள் பிள்ளைகள் மட்டும் இல்லை. எங்கள் அம்மாக்களும் மறைந்து கொண்டிருக்கிறார்கள்.”

சிவகாமி அம்மா இன்னும் அதே புகைப்படத்தை கையில் பிடித்துக் கொண்டிருந்தாள். அவள் இப்போது கேள்வி கேட்கவில்லை.

அவள் அழவில்லை. அவள் காத்திருக்கிறாள். பதினாறு ஆண்டு களாக. மாலைச் சூரியன் கீழே இறங்கிக் கொண்டிருந்தான். சாலை விளக்குகள் ஒளிர்ந்தன. புகைப்படங்களில் இருந்த முகங்கள் மஞ்சள் வெளிச்சத்தில் மெதுவாகப் பிரகாசித்தன.

சிவகாமி அம்மா... தன் மகனின் முகத்தை நீண்டநேரம் பார்த்தாள். அவள் மெதுவாகச் சொன்னாள்:

“நீ எங்கேயோ இருக்கிறாய்...” அது கேள்வி இல்லை. அது நம்பிக்கை இல்லை.

அது ஒரு மௌனம்.

வீதியில் மக்கள் சென்றார்கள். சிலர் பார்த்தார்கள். சிலர் கவனிக்க வில்லை. ஆனால் அந்த பாதையோரத்தில் ஒரு அம்மா இன்னும் அமர்ந் திருந்தாள். அவள் கையில் ஒரு புகைப்படம். அவள் காத்திருப்பு... பதினாறு ஆண்டுகள்.

அந்த காத்திருப்பின் உள்ளே....

ஒரு பெரும் ஓலம் இருந்தது. அதை யாரும் கேட்கவில்லை. ஆனால் அது இன்னும் ஒலித்துக் கொண்டிருந்தது.

அதன் பெயர்...

மௌனத்தின் ஓலம்.

“

இலங்கையின் மண்ணில் கண்ணீர் விதைத்த வரலாறு,
வலிந்து காணாமல் போனோரின் நிழல் இன்னும் பேசுகிறது.
பொற்றோர்கள் வயதாகி சாவடைகின்ற வேதனை,
பொறுமையின் விளிம்பில் நின்ற தாய்மார்களின் மௌனம்.

நீதியின் நீழ்ப்பு நெஞ்சங்களை நசுக்க,
நேரத்தின் சுமை நினைவுகளை மங்கச் செய்கிறது.
சாட்சிகள் மெதுவாக மண்ணோடு கலக்க,
சத்தியம் காற்றில் அலைந்து தேடுகிறது.

காலம் கடந்து குரல்கள் மங்கினாலும்,
காயங்களின் கதைகள் மண்ணில் நிற்கின்றன.
மறக்க சொல்லும் உலகின் மத்தியில்,
மறவாத மனங்கள் நெருப்பாய் எரிகின்றன.

இது மௌனத்தின் பின்னாலுள்ள வேதனை,
இது அழிக்கப்படும் சாட்சிகளின் சுவடு.
இது ஒரு நாட்டின் மறைக்கப்பட்ட இருள்,
இதுவும் ஒரு இனவழிப்பின் மௌனச் சாட்சி.

”

வடக்கின் மணல்வெளிகள் இன்னும் போரை மறக்கவில்லை. காற்று வீசும் ஒவ்வொரு முறையும் அந்த நிலம் ஒரு பழைய கதையைத் திறக்கிறது. அந்தக் கதைகளில் ஒன்றின் தொடக்கம்.

வட்டுவாகல் பாலம்.

அந்த நாட்களில் அந்த பாலம் ஒரு பாலம் அல்ல. அது இரண்டு உலகங்களின் எல்லை. ஒரு பக்கம் போரின் முடிவு. மற்றொரு பக்கம் தெரியாத எதிர்காலம். ஆண்கள் ஒரு பக்கம் நிறுத்தப்பட்டார்கள். பெண்கள் இன்னொரு பக்கம். அம்மாக்கள் அழுதார்கள். குழந்தைகள் கைகளைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். இளைஞர்கள் வரிசையில் நின்றார்கள்.

மௌனத்தின் சாட்சி

அந்த வரிசையில் ஒருவன் எழில்வண்ணன். அவனுக்கு வயது அதிகம் இல்லை. இன்னும் முழுமையாக வாழ்க்கையைத் தொடங்காத வயது. அந்த நாளில் இராணுவ வாகனங்கள் வந்தன. சிலரை அதில் ஏற்றினார்கள்.



“சிறிய விசாரணைதான்... பிறகு விடுவோம்.”

அது சொல்லப்பட்டது. ஆனால், அந்த வாகனங்களில் ஏறிய பலர் மீண்டும் ஒரு போதும் திரும்பி வரவில்லை.

எழில்வண்ணன் ஏற்றப் பட்டவர்களில் ஒருவன். அவன்

கொண்டு செல்லப்பட்ட இடம் ஓமந்தை அருகிலிருந்த மத்திய கல்லூரி கட்டிடம்.

அது ஒரு கல்வி நிலையம் இல்லை.

அது ஒரு முகாம்.

அங்கிருந்த அறைகள் விசாரணை அறைகள்.

அங்கிருந்த இரவுகள் மிக நீண்ட இரவுகள்.

முகாமில் இருந்த இளைஞர்கள் பலர் மௌனமாக இருந்தார்கள். சிலர் இரவில் அழுதார்கள். சிலர் சுவரைப் பார்த்துக்கொண்டே இருந்தார்கள். ஒவ்வொருவருக்கும் வேறு வேறு கதைகள் இருந்தன. ஆனால், அந்த கதைகளின் அடியில் ஒரே மாதிரியான ஒரு இருள் இருந்தது.



எழில் வண்ணன் பெரும்பாலும் பேசவில்லை. ஒரு இரவு அவனைத் தூக்கி எழுப்பினர்.

நள்ளிரவு. அவன் விசாரணை அறைக்கு அழைத்துச் செல்லப் பட்டான். அந்த இரவு அவன் வாழ்க்கையின் மிக நீண்ட இரவு. அந்த இரவுக்குப் பிறகு அவன் மாறிவிட்டான். அவன் கண்களில் ஏதோ ஒன்று உடைந்திருந்தது.

நாட்கள் கடந்தன. ஒரு நாள் முகாமிற்கு ஒரு உளநல மருத்துவரும், ஒரு உளவளத் துணையாளரும்

வந்தார்கள். அவர்கள் அங்கு இருந்த இளைஞர்களை ஒவ்வொரு வராச் சந்தித்தார்கள். அவர்கள் ஒரு மேசை அருகில் உட்கார்ந்தார்கள்.

இளைஞர்கள் வரிசையாக வந்தார்கள்.

சிலர் பேசவில்லை. சிலர் அழுதார்கள். சிலர் கதைகளைத் தொடங்கி முடிக்காமல் நிறுத்திவிட்டார்கள். அந்த வரிசையில் ஒரு நேரத்தில் எழில்வண்ணன் வந்தான். அவன் உட்கார்ந்தான். அவன் தலையைக் குனிந்தான். நீண்ட நேரம் அவன் எதுவும் பேசவில்லை. மருத்துவர் மெதுவாகக் கேட்டார்:

“உனக்குத் தூக்கம் வருகிறதா?”

அவன் தலை அசைத்தான்.

“இல்லை.”

“உன்னால் ஏன் தூங்க முடியவில்லை?”

அவன் சில நொடிகள் அமைதியாக இருந்தான். பிறகு மெதுவாகச் சொன்னான்: “நான் கண்களை மூடினால் அந்த இரவு திரும்பி வருகிறது.” அவன் குரல் நடுங்கியது. அவன் நிறுத்திக்கொண்டான். மீண்டும் அமைதி. உளவளத் துணையாளர் மெதுவாகச் சொன்னார்:

“நீ பேசலாம். இங்கே யாரும் உன்னைத் துன்புறுத்த மாட்டார்கள்.” அந்த வார்த்தை எழில்வண்ணனின் கண்களை உடைத்தது.

அவன் அழ ஆரம்பித்தான். அவன் குரல் உடைந்தது. அவன் சொல்லத் தொடங்கினான். அவன் சொல்ல முடியாத விஷயங்களைச் சொல்ல முயன்றான். அவன் சொன்ன கதையின் சில பகுதிகள் வார்த்தைகளாக வந்தன. மீதியெல்லாம் அழுகையாக வந்தது. அந்த நாளிலிருந்து மருத்துவரும் உளவளத் துணையாளரும் அவனை மீண்டும் மீண்டும் சந்தித்தார்கள்.

அவன் மெதுவாகப் பேச ஆரம்பித்தான். அவன் இன்னும் முழுமை யாகக் குணமடையவில்லை. ஆனால், அவன் உயிருடன் இருந்தான். அது பெரிய விஷயம்.

பல வருடங்கள் கடந்தன.

ஒரு சிறிய நகரத்தில் ஒரு சமூக மையம் இருந்தது. அங்கு சில இளைஞர்கள் மற்றவர்களுக்கு உதவிக்காக வேலை செய்தார்கள். அங்கு வந்தவர்களில் ஒருவர் எழில்வண்ணன். அவன் இப்போது அமைதி யானான். அவன் அதிகம் பேசமாட்டான். ஆனால், யாராவது அழ ஆரம்பித்தால் அவன் அமைதியாக அருகில் உட்கார்ந்து கேட்பான்.

ஒரு நாள் ஒரு புதிய இளைஞன் வந்தான். அவன் தலையைக் குனிந்து உட்கார்ந்திருந்தான். அவன் பேசவில்லை. எழில்வண்ணன் அவன் அருகில் உட்கார்ந்தான். நீண்ட நேரம்... அவர்கள் இருவரும் அமைதியாக இருந்தார்கள். பிறகு எழில்வண்ணன் மெதுவாகச் சொன்னான்:

“நான் பேச முடியாமல் ஒரு காலம் இருந்தது.” அவன் அந்த இளைஞனைப் பார்த்தான்.

“ஆனா ஒரு நாள் யாரோ எனக்காக அமைதியாக உட்கார்ந்திருந் தார்கள்.” அவன் சிரிக்க முயன்றான். அவன் குரல் மெதுவாக இருந்தது. “அதனால்தான் நான் இன்னும் உயிருடன் இருக்கிறேன்.” அந்த இளைஞன் முதல் முறையாகத் தலையை உயர்த்திப் பார்த்தான். அந்த கணத்தில் எழில்வண்ணன் புரிந்துகொண்டான்.

அந்த இளைஞன் மெதுவாகப் பேச ஆரம்பித்தான். பாடசாலை முடிந்து வரும் பாதையை “இராணுவ முகாம்” எனக் கூறி, விம்மி விம்மி அழ ஆரம்பித்தான். அவனுடைய அழுகை, சொல்ல முடியாத பல வேதனை களையும், வலிகளையும் வெளிப்படுத்தியது.

சில போர்கள் துப்பாக்கியால் முடிவதில்லை. நினைவுகளாக மீண்டும் உயிரோட்டமடைந்தது. வடக்கின் காற்று இன்னும் வீசுகிறது. வட்டுவாகல் பாலம் இன்னும் நிற்கிறது. அந்தப் பாலம் ஒரு காலத்தில் மனிதர்களைப் பிரித்தது. ஆனால், அதே பாலத்தின் நினைவுகள் இப்போது சில மனிதர்களை மீண்டும் மனிதர்களாக மாற்றுகிறது.



கடல் இன்னும் வரவில்லை

அருணின் சிறுவயது ஒரு சத்தத்துடன் தொடங்குகிறது.

அது குண்டுச் சத்தம் அல்ல.

அது அலைச் சத்தமும் அல்ல.

அது... பசியின் சத்தம்.

அந்தச் சத்தம் முதலில் அவன் உடலுக்குள் பிறந்தது. பின்னர் அது அந்தத் தறப்பாள் கூடாரத்தில் பரவியது. பிறகு முழு முகாமையும் நிரப்பியது. பல ஆண்டுகள் கழித்தும், அந்தச் சத்தம் இன்னும் அவன் உள்ளே உயிரோடு இருக்கிறது.

அந்தக் காலையில் சிந்து அமைதியாக இருந்தாள். அவள் தூங்கிக் கொண்டிருக்கிறாள் என்று மீனா நினைத்தாள். ஆனால், அந்த அமைதி ஒரு குழந்தையின் தூக்கம் அல்ல என்று யாருக்கும் அப்போது தெரிய வில்லை. மீனா கடலை நோக்கி நின்றிருந்தாள். அவளது உடல் இங்கே. ஆனால் அவளது பார்வை அதோ தூரத்தில்.

“இன்று கப்பல் வரும்,” அவள் மெதுவாகச் சொன்னாள். அந்த ஒரு வாக்கியம் அன்று அவர்களின் உயிரின் வடிவமாகியது. மாத்தளன் கடற்கரை அன்று ஒரு இடம் இல்லை. அது ஒரு காத்திருப்பு.



மக்கள் அங்கே நின்றிருந்தனர். ஒவ்வொருவரும் தனித்தனியாக இருந்தும், அனைவரும் பசியினால் உடல் சோர்ந்திருந்தனர். அவர்கள் கடலைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அருண் முதலில் கடலைப் பார்த்தான். பின்னர் மக்களைப் பார்த்தான். அதன்பிறகு தான் அவனுக்குப் புரிந்தது அந்த நாள் கடல் ஒரு உயிரல்ல. அது ஒரு தீர்ப்பு.

“அம்மா... கப்பல் வந்தால் என்ன ஆகும்?” அருண் கேட்டான்.

“நாம் சாப்பிடுவோம்,” மீனா சொன்னாள். அவள் சொல்லாதது: நாம் உயிரோடிருப்போம். மதியம். ஒரு மனிதன் கத்தினான்:

“கப்பல்!” அந்த வார்த்தை மக்களின் நிலையை மாற்றியது.

சிலர் ஓடினர்.

சிலர் அழுதனர்.

சிலர் மண்ணில் விழுந்தனர்.

அருண் மீனாவின் கையைப் பிடித்தான். அந்தப் பிஞ்சுக் கை குளிராக இருந்தது. பயத்தால் அல்ல. நீண்ட பசியால்.

கப்பல் வந்தது. ஆனால் கரையை எட்டவில்லை. அது கடலின் எல்லையில் நின்றது. ஒரு வாக்குறுதி போல. ஒரு பொய் போல. சில உணவுகள் இறக்கப்பட்டன. மீதியானவை அங்கேயே இருந்தன.

“நாளைக்கு...” யாரோ சொன்னார்.

அந்த “நாளை” எப்போதும் வராத நாளாக மாறியது. அன்று இரவு மழை பெய்தது. மழை மட்டும் அல்ல,

நிலமும் நகர்ந்தது. அவர்களின் கூடாரம் நீரில் கரைந்தது. அவர்கள் சாலையில் நின்றனர். மீனா சிந்துவை அணைத்துக் கொண்டிருந்தாள். அருண் அவளை பார்த்தான்.சிந்து அழவில்லை.

அவள் அன்றைய நாள் முதல் முறையாக அழவில்லை. அடுத்த நாள் கடல் கோபமாக இருந்தது. அலைகள் உயர்ந்தன. காற்று கத்தியது. கப்பல்... திரும்பியது. அந்தத் தருணம் அருணின் வாழ்க்கையில் முதல் முறையாக “இழப்பு” உருவெடுத்தது.

ஒரு மனிதனை இழப்பது அல்ல. ஒரு வாய்ப்பை. ஒரு நாளை. ஒரு எதிர்காலத்தை. அன்று இரவு வானம் கோரமாய் வாய் பிழந்தது . குண்டுகள் விழுந்தன.

மண், மழை, இரத்தம் எல்லாம் ஒன்றாகக் கலந்தன. அவர்கள் ஓடினர். மீனா அருணை இழுத்துக் கொண்டே ஓடினாள். ஆனால் அவள் கையில் இருந்த சிந்து அவள் இன்னும் அமைதியாகவே இருந்தாள்.

மருத்துவகூடத்தில் மருத்துவர் அவளைப் பார்த்தார். அவர் எதுவும் பேசவில்லை. அவரது மௌனம் அந்த நாளின் கடலைப்போல இருந்தது.

“அவள் தூங்குகிறாளா?” மீனா கேட்டாள்.அந்த கேள்வி அந்த இடத்தில் இருந்த எல்லா உயிர்களையும் கிழித்தது.

பல ஆண்டுகள் கழித்து அருண் புரிந்து கொண்டான்: அன்று சிந்து மட்டுமல்ல. அவள் குழந்தைத்தனமும் இறந்தது. இப்போதெல்லாம்

அருண் கடலை பார்க்கும்போது அது நீலமாகத் தெரிவதில்லை. அது வெள்ளையாகத் தெரியவில்லை.

அது பசியின் நிறமாக...

மௌனத்தின் நிறமாக...

அந்த இரவு மழை மட்டும் பெய்யவில்லை. வானம் தன் சுமையை இறக்கிக்கொண்டது. மாத்தளன் மணலில் அலைகள் வந்தன. ஆனால் அந்த மனித அலைகள் அருணின் நினைவில் ஒரே ஒரு கேள்வியை மட்டும் விட்டுச் சென்றது:

அவன் இன்றும் ஒரு கேள்வியுடன் வாழ்கிறான்: அந்த நாள் கப்பல் நின்றிருந்தால்... அலைகள் அமைதியாக இருந்தால்... ஒரு சிறிய உணவுப் பை அவர்களின் கைகளில் வந்திருந்தால்... சிந்து இன்னும் உயிரோடு இருந்திருப்பாளா?

கடல் இன்னும் பதில் சொல்லவில்லை.

“ஒரு குழந்தையின் பசியை கடல் கூடக் கேட்காதபோது இந்த உலகம் எங்கே இருந்தது?”





கப்பலும் கரையொதுங்கிய மக்களும்

மண்ணின் வெப்பம் கால்களை எரித்தது. முள்ளிவாய்க்கால் மணலில் ஓடிக் கொண்டிருந்த மக்களுக்கு... மண் பாதை ஒரு தண்டனை போல. வடகிழக்கின் அந்த இறுதி நாட்களில் காற்றே வெடியின் ஓலியுடன் சிதறியது.

“டட்... டட்... டட்...” தூரத்தில் துப்பாக்கிச் சத்தம். பின்னர் ஒரு கிளைமோர் வெடிப்பு. மண் திடீரென்று மேலே எழுந்தது. அது மீண்டும் விழும்போது மனிதர்களின் மேல் கொட்டியது.

“கீழே படுங்க!” யார் யாரோ கத்தினர். மக்கள் மண்ணில் விழுந்தார்கள். சிலர் மீண்டும் எழுந்தார்கள். சிலர் எழுந்திருக்கவே இல்லை.

அந்த கூட்டத்தில் ஒரு மனிதன் தனது மகன் கவினின் கையைப் பிடித்துக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தான்.

“அப்பா... நமக்கு என்ன ஆகும்?” கவினின் குரல் நடுங்கியது.

அவன் தந்தை – சிவன் மூச்சை இழுத்துக் கொண்டே சொன்னான். “நம்ம ஓடிப் போவோம் டா... கடலுக்குப் போனா கப்பல் வரும்.” அந்த வார்த்தை

கவினின் மனதில் ஒரு சிறிய நம்பிக்கை. அவர்கள் கடற்கரையை அடைந்தபோது மணற் திட்டுகள் முழுவதும் மக்கள். காயமடைந்தவர்கள். அழும் குழந்தைகள். மண்ணில் கிடக்கும் உடல்கள். ஒரு முதியவர் வானத்தை பார்த்துக் கொண்டு சொன்னார்:

“கப்பல் வருமாம்...” அந்த ஒரு வார்த்தை மக்களின் உள்ளத்தில் மெதுவாகப் பரவியது. அவர்கள் எல்லோரும் கடலைப் பார்த்தார்கள். அங்கே எதுவும் இல்லை. கடல் வெளியில் எந்தப் புள்ளியும் தெரிய வில்லை.

சூரியன் மேலே ஏறிக்கொண்டிருந்தான். மண் சூடாகியது. கவின் தன் தந்தையின் அருகில் அமர்ந்தான்.

“அப்பா... அம்மா எங்கே?” சிவன் ஒரு நிமிடம் அமைதியாக இருந்தான்.

அவன் மெதுவாகச் சொன்னான்: “நம்ம முன்னாடியே போயிருப்பா...” கவின் கடலைப் பார்த்தான்.

“அப்பா... கப்பல் நம்மை எங்க கொண்டு போகும்?” “வைத்திய சாலைக்கு... திருகோணமலைக்கு. அதே நேரத்தில் ஒரு பெண் கையில் ஒரு சிறிய கருவியுடன் பேசிக்கொண்டிருந்தாள். அவள் குரல் காற்றில் உடைந்தது. காதில் நுழைந்தது.

“இங்க பொதுமக்கள் இருக்காங்க... காயமடைந்தவர்கள் நிறைய பேர்... உலகம் இதைக் கேட்கணும்...” அவள் அழுதாள். ஆனால் பேசுவதை நிறுத்தவில்லை. அந்த குரல் வெடிவீதிகளின் நடுவில் ஒரு சாட்சியாக இருந்தது.

சிவன் அதைக் கேட்டான். அவன் கவிணைப் பார்த்தான். “கேளுடா... யாரோ நம்ம கதை சொல்லுறாங்க.” கவின் புரியாமல் பார்த்தான்.

மாலை அண்மித்தது. அந்த நேரத்தில் கடலில் ஒரு கறுப்பு நிழல் தோன்றியது. முதலில் யாரும் நம்பவில்லை. பிறகு யாரோ கத்தினர்:

“கப்பல்!” அந்த வார்த்தை கரையில் கிடந்த உயிர்களை எழுப்பியது.

மக்கள் அழுதார்கள்.

சிலர் சிரித்தார்கள்.



கவின் மகிழ்ச்சியுடன் தந்தை யைப் பார்த்தான்.

“அப்பா! கப்பல் வந்திட்டு!” அவன் சிவனின் கையைப் பிடித் தான். ஆனால் அந்த கை மெதுவாக குளிர்ந்து கொண்டிருந்தது.

“அப்பா...?” அவன் தந்தையின் முகத்தை பார்த்தான். அந்த முகம் அமைதியாக இருந்தது. சிவன் அந்த கப்பலுக்கு காத்திருந்த படியே மணலில் மூச்சை நிறுத்தி யிருந் தான்.

கவின் அதை புரிந்து கொள்ள வில்லை. “அப்பா... எழுந்திரு... கப் பல் வந் திட் டு...” அவன் மெதுவாகக் குலுக்கினான். அந்த நேரத்தில் ஒரு மீட்புப் படையினர் கவினைத் தூக்கிக் கொண்டனர்.

“மல்லி (தம்பி)... உன் அப்பா?” கவின் மணலைக் காட்டினான்.

“அவர் காத்திருக்கிறார்...” கப்பல் கரையை அடைந்தது. மக்கள் ஏற்றிக் கொண்டார்கள். கடல் மெதுவாக இருளில் மூழ்கியது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு. ஒரு சர்வதேச மன்றில் ஒரு இளைஞன் சாட்சி கொடுக்க நின்றிருந்தான்.

அவன் பெயர் – கவின் சிவன். அவன் மெதுவாக பேச ஆரம்பித்தான்.

“அந்த நாளில் முள்ளிவாய்க்கால் மணலில் என் அப்பா கப்பலுக்காக காத்திருந்தார்.” அவன் ஒரு நிமிடம் அமைதியாக நின்றான். அரங்கம் முழுவதும் அமைதி.



பிறகு அவன் மெதுவாகச் சொன்னான்: “அவர் கப்பலைப் பார்க்கவில்லை. ஆனா... நான் பார்த்தேன்.” அவன் தீர்ப்பாய் நீதிபதி களைப் பார்த்தான். அவன் குரல் நடுங்கவில்லை.

“நான் உயிரோட இருக்கி றேன்.” “அதனால்தான் அந்த நாள் நடந்ததை உலகத்துக்கு சொல்ல நான் இங்கே நிற்கிறேன்.” அவன் ஒரு சிறிய இடைவெளி எடுத்தான்.

பிறகு சொன்னான்: “ஏனெனில் சாட்சிகள் இன்னும் உயிரோட இருக் கின்றன.” அந்த வார்த்தைகள் அரங்கத்தின் அமைதியில் நீண்ட நேரம் ஒலித்தன.

முள்ளிவாய்க்கால் மணல் அந்த நாளில் பல உயிர்களைப் புதைத் திருந்தது. ஆனால், அது ஒரு குரலைப் புதைக்க முடியவில்லை. அந்தக் குரல் இன்னும் உலகத்தை நோக்கி சொல்லிக் கொண்டிருக்கிறது:

“நாங்கள் பார்த்தோம்.” என்பதாக...

நந்திக் கடலில் மறைந்த சூரன்



நந்திக் கடலின் கரையில் அந்திப் பொழுது
மெதுவாக இறங்கிக் கொண்டிருந்தது.
காற்றில் உப்பின் வாசனை இருந்தது.
அந்த மணற் கரையில் ஒருத்தி
அமைதியாக நின்றாள்.

அவள் பெயர் கௌதமி.

அவளுடன் ஒரு 17 வயது இளைஞன் நின்றான்.
அவன் கண்களில் கடலைப் போல ஆழம்
இருந்தது.

அவன் பெயர் செயலாகரன்.

அவர்கள் இருவரும் நின்ற இடத்திலிருந்து
தொலைவில் வற்றப்பளை கண்ணகியம்மன்
ஆலயத்தின் கோபுரம் மங்கலாகத் தெரிந்தது.

அந்த ஆலயம் இந்த நிலத்தின் பழமையான நினைவுகளில் ஒன்று. பல போர்களையும், பல தலைமுறைகளையும் பார்த்த ஆலயம். போர்க்களத்தில் சென்ற மறவர்கள் பல பேரைக் காத்த தெய்வம் என்று இந்த மண்ணில் மக்கள் நம்பும் தெய்வம். அந்த தெய்வத்தின் முன் இன்று கௌதமி மீண்டும் காத்திருந்தாள்.

ஏனெனில்...

அவள் வாழ்க்கை முழுவதும் ஒரு காத்திருப்பாகவே மாறியிருந்தது. கௌதமி ஒரு சாதாரண பெண். அவள் கனவுகள் சிறியது.

ஒரு வீடு. ஒரு குடும்பம். ஒரு அமைதியான வாழ்க்கை. ஆனால் அவள் காதலித்தவன் ஒரு சாதாரண மனிதன் அல்ல.

செயல் வீரன். அவன் இந்த மண்ணின் ஒரு போர் மறவன். மண்ணையும் மக்களையும் காக்க வேண்டும் என்ற தீ அவன் உள்ளத்தில் எப்போதும் எரிந்தது.

கௌதமி அவனை மணந்த நாளில் அவன் கண்களில் இருந்த அந்தத் தீயைப் பார்த்தாள். அந்தத் தீயை அணைக்க முடியாது என்பதையும் அவள் புரிந்து கொண்டாள். ஆனால், அவன் திரும்பி வருவான் என்று மட்டும் அவள் நம்பினாள்.

ஒரு சாதாரண மனிதன் அல்ல; நிலத்தைவிட உயிரை மதிக்காதவன். மக்களை விடத் தனது உயிரை முன்னிலைப்படுத்தாதவன். அந்தப் போர் மறவனை பார்த்த முதல் நாளை கௌதமி இன்னும் மறந்து விடவில்லை.

போர் நடந்து கொண்டிருந்த நாட்கள். செயல்வீரன் அடிக்கடி களத்திற்குச் செல்வான். சில சமயம் சில நாட்கள் விடுமுறை கிடைக்கும். அப்போது அவன் வற்றாப்பளை மண்ணிலிருந்த தனது வீட்டிற்குத் திரும்புவான். அந்த நாட்களில் கௌதமி உலகமே நிறுத்தப் பட்டதுபோல வாழ்ந்தாள்.

அவன் சிரிப்பு

அவள் வீட்டின் ஒளி.
அவன் காலடிச் சத்தம்

அவள் உயிரின் இசை.

ஆனால் போர் அந்த கனவுகளுக்குக் காலம் கொடுக்கவில்லை.

ஒரு நாள் செயல்வீரனை மீண்டும் களம் அழைத்தது. புறப்படு வதற்கு முன் கௌதமி அவனைப் பார்த்து கேட்டாள்:

“நாம் மீண்டும் சந்திப்போமா?”

செயல்வீரன் சில நொடிகள் அமைதியாக இருந்தான். பிறகு மெதுவாகச் சிரித்துக் கொண்டே சொன்னான்.

“நான் திரும்பி வராவிட்டாலும்...

நம்ம வரலாறு திரும்பி வரும்.” அந்த வார்த்தை பின்னர் கௌதமியின் நினைவில் உறைந்த கல் போல மாறும் என்று அப்போது அவளுக்குத் தெரியவில்லை. அந்த வார்த்தை அவளுடைய நினைவில் இன்றும் உறைந்தது.

காலம் நகர்ந்தது.

கௌதமியின் வயிற்றில் ஒரு புதிய உயிர் வளர ஆரம்பித்தது. அதே நேரத்தில் நிலம் சுருங்கிக் கொண்டிருந்தது. போர் முடிவின் நிழல் நெருங்கிக் கொண்டிருந்தது. மக்கள் கூட்டமாக நகர்ந்தனர்.

காடு...
மணல்...
கடல்...

எல்லாம் சாவின் மனிதர்களால் நிரம்பியது. அந்தக் குழப்பத்தின் நடுவில் கௌதமி மீண்டும் செயல்வீரனைச் சந்தித்தாள்.

அவன் களைப்பாக இருந்தான். ஆனால் அவன் கண்களில் இருந்த அந்த போரின் தீ இன்னும் அணையவில்லை.

“நான் களத்தில் நிற்க வேண்டும்,” என்று அவன் சொன்னான்.

கௌதமி எதுவும் பேசவில்லை. அவள் மெதுவாக அவன் கையைப் பிடித்து தன் வயிற்றின் மீது வைத்தாள். அவன் உறைந்தான்.

“நம்ம குழந்தை...”

அந்த ஒரு வார்த்தை செயல்வீரனின் உள்ளத்தைக் கிழித்தது. அவன் ஒருபோதும் சரணடையக்கூடாது என்று தனக்கே உறுதி எடுத்தவன்.

ஆனால், அந்த நாளில் அவன் ஒரு போர் மறவன் மட்டும் அல்ல... ஒரு தந்தை ஆகிக் கொண்டிருந்தான். செயல்வீரன் அவளை நீண்ட நேரம் பார்த்தான். அவன் கண்களில் ஒரு நிமிடம் போர்க்களம் மறைந்தது.

அவன் அல்லது அவள்

“ஒரு சுதந்திரமான மண்ணில் பிறக்க வேண்டும்.” நான் களத்திற்கு செல்லவேண்டும் என்றான். ஆனால், போர் அந்த கனவுகளுக்குக் காலம் கொடுக்கவில்லை. செயல்வீரனை மீண்டும் களம் அழைத்தது. புறப்படுவதற்கு முன் கௌதமி அவனைப் பார்த்துக் கேட்டாள்:

“மீண்டும் பார்ப்போமா?”

செயல்வீரன் அமைதியாகச் சொன்னான்:

“போர்மறவன் சரணடையக் கூடாது.

அது மட்டும் எனக்குத் தெரியும்.”

அந்த வார்த்தை அவளது மனதில் அச்சமாகப் பதிந்தது.

நாட்கள் நகர்ந்தது போர் இறுதி நிழல் அருகே வந்தது. அவன் களைப்பாக இருந்தான். ஆனால் அவன் மனம் இன்னும் உடைய வில்லை. அவன் சொன்னான்:

“நான் களத்தில் இருக்க வேண்டும்.”

அன்று இரவு ராணுவம் சுற்றி வளைத்தது . கௌதமி அமைதியாக இருந்தாள். பின்னர் மெதுவாகச் சொன்னாள்:

“நம்ம குழந்தை...” அந்த ஒரு வார்த்தை செயல்வீரனை நிறுத்தியது. அவள் கண்ணீர் வழிந்த கண்களுடன் கேட்டாள்:
“உயிரோட இரு.”

அந்த நேரத்தில் போர், உறுதி, மரணம் எல்லாம் ஒரு கணம் தள்ளிச் சென்றது.

அப்போது... இராணுவம் ஒரு அறிவிப்பை வெளியிட்டது.

“முன்பு போரில் இருந்தவர்கள் பதிவு செய்ய வர வேண்டும். அவர் களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும்.” பலர் நம்பவில்லை. ஆனால் கௌதமி நம்பினாள். ஏனெனில் அவளின் வயிற்றில் ஒரு உயிர் வளர்ந்து கொண்டிருந்தது.

மறுநாள் காலை அவள் செயல்வீரனை அழைத்துச் சென்றாள். அவன் அமைதியாக நடந்தான்.அவன் கண்களில் ஒரு போர் மறவன் இன்னும் உயிரோடு இருந்தான். கௌதமி கையைப் பிடித்தபடி அவனை அங்கே கூட்டிச சென்றாள்.

அவன் பெயர் பதிவு செய்யப்பட்டது. அவன் மற்ற போராளிகளுடன் ஒரு வாகனத்தில் ஏற்றப்பட்டான். அந்த நேரத்தில் கடைசியாகத் திரும்பிப் பார்த்தான் கௌதமியை. அந்தப் பார்வை கௌதமியின் வாழ்க்கையில் உறைந்த கடைசிக் காட்சி.

அந்த நாளுக்குப் பிறகு செயல்வீரன் திரும்பி வரவேயில்லை. பல மாதங்கள் கழித்து குழந்தை பிறந்தது.

அவன் பெயர்

செயலாகரன்.

அவன் தனது தந்தையை ஒருபோதும் பார்க்கவில்லை. ஆனால் அவன் வளர்ந்து கதை கேட்டான்

“உன் அப்பா ஒரு போர்மறவன்.”

ஆண்டுகள் சென்றன.

கௌதமி இன்னும் தேடினாள். பட்டியல்கள். சிறைகள். கேள்விகள். எங்கும் ஒரு பதில் இல்லை. கௌதமி ஒவ்வொரு வாரமும் வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயத்திற்கு வருவாள் ஏனெனில் அந்த தெய்வம் போர் மறவர்களை காக்கும் தெய்வம் என்று இந்த மண்ணில் மக்கள் நம்பினர். அவள் ஒவ்வொரு முறையும் ஒரே வேண்டுதல் வைப்பாள்.

“அம்மா...

அவன் உயிரோடு இருக்கிறானா இல்லையா ஒருமுறை எனக்குக் காட்டு என்று...

பல ஆண்டுகள் கடந்து போனது.இன்று அவள் மீண்டும் நந்திக் கடலோரத்தில் நிற்கிறாள். அவள் அருகில் இளைஞனாக வளர்ந்த செயலாகரன். அவள் பின்னால் கோபுர அழகுடன் கண்ணகி அம்மன் கோயில். திருமணத்துக்குப் பிறகு ஒவ்வொரு களச்சமருக்கும் முன் அங்கேயே சென்று வேண்டியவள் அவள்.

இன்று மீண்டும் அவள் கைகளை இணைத்தாள். அவள் மெதுவாகச் சொன்னாள்:

“அம்மா...

அவன் உயிரோட இருக்கிறானா இல்லையா...

என்று....

கடல் மெதுவாகக் கரையைத் தட்டியது. செயலாகரன் அந்தக் கடலை நீண்ட நேரம் பார்த்தான். பின்னர் அவன் மெதுவாகச் சொன்னான்:

“அம்மா....

காத்திருப்பு இன்னும் முடியல.”

கௌதமி கடலைப் பார்த்தாள். அந்த கடல் பல கதைகளை விழுங்கிய கடல்.

இன்றும் நந்திக் கடல் அமைதியாகவே இருந்தது. அவள் மீண்டும் மெதுவாகச் சொன்னாள்.

“இங்கேதான் உன் அப்பாவைக் கடைசியாகப் பார்த்தேன்.”

செயலாகரன் எதுவும் பேசவில்லை. அவன் கடலைப் பார்த்தான். பிறகு திரும்பிக் கேட்டான்.

“அம்மா....

நீங்கள் இன்னும் ஏன் காத்திருக்கிறீர்கள்?” கௌதமி அமைதியாகச் சிரித்தாள். அவள் சொன்னாள்.

“ஒரு போர்மறவன் வீரச்சாவடையலாம். ஆனால், காணாமல் போனவன் இன்னும் திரும்பி வரக்கூடும்.”

அந்த நேரத்தில் தொலைவில் வற்றப்பளை கண்ணகியம்மன் ஆலய மணி ஒலித்தது. காற்று கடலைத் தாண்டி வந்தது. அந்த ஒலியைக் கேட்டு செயலாகரன் மெதுவாகச் சொன்னான்.

“அம்மா... அப்பா திரும்பி வரவில்லை என்றாலும் அவருடைய குரல் இன்னும் இங்கே இருக்கிறது.”

கௌதமி அவனைப் பார்த்தாள். அவன் கடலை நோக்கி நின்றான். அந்த நேரத்தில் அவள் திடீரென்று புரிந்துகொண்டாள். செயல்வீரன் திரும்பி வரவில்லை. ஆனால், அவன் என்னில் இருந்து மறைந்து விடவும் இல்லை.

அந்த இரவு நந்திக்கடல் அமைதியாக இருந்தது. ஆனால், அந்த அமைதிக்குள் இன்னும் ஒரு குரல் ஒலித்துக் கொண்டிருந்தது. அந்த மணற்கரையில் ஒரு மறைந்த குரல் இன்னும் வாழ்ந்தது.

அவன் உயிரோடு இருந்தான். அவன் மகனின் கண்களில்...

சரணடைந்த கைகள்

LDணல் வெப்பமாக இருந்தது. அந்த வெப்பம் சூரியனின் வெப்பம் மட்டும் அல்ல. அது சுழலும் குண்டுவீச்சுகளின் வெப்பமும் கூட. பல நாளாகச் சிதறி வரும் பயத்தின் வெப்பம். மரணத்தின் வெப்பம். முல்லைத்தீவு வட்டுவாகல். அந்தச் சிறிய நிலப்பரப்பில் ஆயிரக் கணக்கான மக்கள் ஒன்றிணைந்தனர்.

ஒரு இடைவெளி இல்லாமல், ஒரே வரிசையில். அவர்கள் முகங்களில் தூசி, கண்களில் பயம், கைகளில் வெள்ளைத் துணிகள். அது ஒரு அமைதியின் அடையாளம் போல தோன்றினாலும், அந்த அமைதியை மறைத்த கொடுமையின் குறியீடு.



அந்த வரிசையில் சிவரஞ்சன் இருந்தான். இருபத்துமூன்று வயது அவனுக்கு. அவன் சாதாரண இளைஞன். கையிலே புத்தகம், மனதில் கனவுகள். ஆனால், அந்த நாள் அவனை மாறவைத்தது. அவன் மாணவன்

அவனுடைய பள்ளி வாழ்க்கையோடு கடந்த நாட்கள் இங்கே யாருக்கும் பொருந்தவில்லை.

அவன் அம்மாவுடன் நடந்தான். அவள் கைகளைப் பிடித்துக் கொண்டே கூறினாள்: "மகனே... இப்போ எல்லாம் முடிஞ்சிடும்ல?"

சிவரஞ்சன் பதில் சொல்லவில்லை. மனதில் ஏராளமான கேள்விகள் இருந்தாலும், அந்த அமைதியான சிப்பாய்களின் பார்வை அதற்குத் தடையாக இருந்தது.

மக்கள் வரிசையில் முன்னேறினர். ஒவ்வொருவரும் பதிவு செய்யப்பட்டனர்: பெயர், வயது, கிராமம். ஒரு சாதாரண நடைமுறை போலத் தோன்றினாலும், உண்மையில் அது வாழ்க்கையின் கடைசிப் பதிவாக மாறியது.

சிவரஞ்சன் அந்த இடத்தை அடைந்தான். ஒரு சிப்பாய் அவனை கவனமாகப் பார்த்தான்:

"நீ இங்கே வா."

அவனது அம்மா உடனே பேசினாள்: "அவன் என்னோட மகன்... அவன் பொதுமகன்..." சிப்பாய் கையை உயர்த்தினான்.

"விசாரணை."

ஒரு வார்த்தை; ஆனால், ஆயிரக்கணக்கான குடும்பங்களை உடைத்தது. சிவரஞ்சன் மெதுவாக அம்மாவின் கையைப் பிடித்தான்.

"அம்மா... நான் போயிட்டு வரேன்." அவன் சிரிக்க முயன்றான். அந்த சிரிப்பு அவனுடைய அம்மாவுக்காக. அவன் சென்றான். திரும்பிப் பார்த்தபடியே...

அவள் அங்கேயே நின்றாள். அவள் கண்களில் பயம் இருந்தது. அந்த பயம் பிறகு பல ஆண்டுகள் ஆனாலும் அவளை விட்டுப் போகவில்லை. அவன் அந்த வரிசையிலிருந்து மறைந்தான். அதற்குப் பிறகு யாரும் அவனைப் பார்க்கவில்லை.

முகாம்களில் நாட்கள், மாதங்கள், பிறகு ஆண்டுகள் கடந்து சென்றன. சிவரஞ்சனின் அம்மா அவனை தேடிக் கொண்டே இருந்தாள். அவள் பல அலுவலகங்களுக்குச் சென்றாள். ஒவ்வொரு அலுவலகத்திலும் ஒரே பதில்:

“தகவல் இல்லை.”

அவள் ஒவ்வொரு முறையும் ஒரு புதிய நம்பிக்கையுடன் சென்றாள்.

ஒவ்வொரு முறையும் வெறுமையுடன் திரும்பினாள். ஒரு நாள் அவள் ஒரு பதிவுமையத்துக்குச் சென்றாள். அங்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தகவல்கள் சேகரிக்கப் பட்டன.

ஒரு இளைஞன் மேசையின் பின்னால் உட்கார்ந்திருந்தான். அவன் மெதுவாகக் கேட்டான்:

“பெயர்?”

“சிவரஞ்சன்.”

“கடைசியாக எங்கே பார்த்தீர்கள்?” அவள் ஒரு கணம் அமைதியாக இருந்தாள்.

பிறகு தீர்க்கமாகச் சொன்னாள்:

“அவன் கைகளை உயர்த்தி சரணடைந்தான்.” அந்த அறையில் சில நொடிகள் அமைதி நிலவியது.

இளைஞன் தட்டச்சு செய்தான். அவன் தலையை உயர்த்திப் பார்த்தான். அவள் இன்னும் நம்பிக்கையோடு இருந்தாள்.

“அம்மா... இவ்வளவு ஆண்டுகளாக இன்னும் நீங்கள் ஏன் காத்திருக்கிறீர்கள்?” அவள் மெதுவாக சிரித்தாள். அது மிகவும் மென்மையான சிரிப்பு.

“அவள் சொன்னாள்....”

சொற்களைத் தேடியபடியே.

“நான் போயிட்டு வரேன் என்று.”

இளைஞன் எந்தப் பதிலும் சொல்ல வில்லை. அவன் கணினித் திரையைப் பார்த்தான். அதில் ஒரு வரி மட்டும் இருந்தது:

“Last seen surrendering – May 2009” அவன் மெதுவாக இன்னொரு வார்த்தை எழுதினான்:

Missing.

அன்று மாலை அவன் வெளியே வந்தான். கடற்காற்று வீசியது. மாலை இருள் மெதுவாக நிலத்தை மூடியது. அவன் தனது குறிப்பேட்டைத் திறந்தான். அதில் நூற்றுக்கணக்கான பெயர்கள் இருந்தன.

ஒவ்வொரு பெயரும்
ஒரு குடும்பம்.
ஒவ்வொரு பெயரும்
ஒரு காத்திருப்பு.

அவன் ஒரு உண்மையை உணர்ந்தான்.

இந்த பட்டியல் காணாமல் போனவர்களின் பட்டியல் அல்ல. இது திரும்பி வராத சரணடைந்த கைகளின் பட்டியல். அவன் மறுபடியும் எழுதினான்:

“சாட்சிகள் இன்னும் உயிரோடு இருக்கிறார்கள்.”

அவன் அந்த வார்த்தையை நீண்ட நேரம் பார்த்தான். மௌனத்தின் உச்சரிப்பில் மறைந்த அந்தக் குரல்கள்

உலகம் கேட்டுக் கொள்ளாத குரல்கள். ஆனால், அவை மறைந்து போகவில்லை. ஏனெனில் அந்த நினைவுகள் ஒருநாள் வரலாற்றில் பதியும்.

மௌனத்தின் சாட்சி

முள்ளிவாய்க்கால் மணலில் மௌனம் நின்றது,
அலைகள் கரையைத் தழுவினாலும் குரல்கள் மறையவில்லை.
வடகிழக்கு நிலம் தமிழரின் இரத்தத்தில் நனைந்தது,
மண்ணின் ஒவ்வொரு துளியும் சாட்சி உரைத்தது.

சத்தியம் மறுக்கப்பட்ட உலகம் அவளைக் கடந்து சென்றது,
ஆனால் மண்ணின் நினைவுகள் மறையவில்லை.
மக்களைப் பாதுகாக்க வேண்டிய கைகள்,
ஆயுதத்தை தூக்கி மரணத்தை விதித்தன.



மருந்தும் மருத்துவமும் மறுத்து,
உயிர்களை மெதுவாக அணைத்தது அந்த கொடுமை.
வைத்தியசாலைகளில் கூட எரிவுண்டிகள் விழுந்தன,
மண்ணின் வாசல்கள் குரலோடு பதிந்தன.

2009 முள்ளிவாய்க்கால்
கடல் பார்த்துக் கொண்டிருந்தது, வானம் மௌனமாயிருந்தது.
மண்ணில் பதிந்த குரல்கள் ஒலித்தன,
மௌனமாக்கப்பட்ட உண்மைகள் மறையவில்லை.

வரலாறு மௌனமாகக் காணப்பட்டாலும்,
உயிர்களின் நினைவுகள் சாட்சியாக மாறின.
சத்தியம் மறைக்க முடியாத ஒளி போல,
மண்ணில் புதைந்த சாட்சிகள் மீண்டும் எழுந்தன.



மௌனத்தின் மௌனம், சத்தியத்தின் ஒலி,
உண்மையின் சுவடுகள் மண்ணில் பதிந்தன.
மறக்க முடியாத காயங்கள், மறையாத நினைவுகள்,
வரலாறு சொல்லும் கதைகள் உயிரோடு எழுகின்றன.

உலகம் மறந்தாலும் குரல்கள் வாழ்ந்தன,
மண்ணின் சாட்சிகள் மின்னும் ஒளியாக.
மௌனத்தின் மௌனம் எப்போதும் சொல்லும் உண்மை,
சத்தியம், வரலாறு, நினைவுகள் என்றென்றும் நிலவுகின்றன.

“வட்டுவாகல் பாலத்தில் விடப்பட்ட கை”

2009 ஆம் ஆண்டின்... அந்த மே மாதம் முள்ளிவாய்க்கால் நிலம் ஒரு நாட்டின் வரைபடத்தில் இருக்கும் ஒரு சிறிய புள்ளி மட்டு மல்ல. அது ஒரு இனத்தின் நொறுங்கிய மூச்சுகளும் அழிக்க முடியாத நினைவுகளும் மண் ணோடு கலந்திருந்த ஒரு இடம்.

அந்த நாளில் வானம் கருமையாக இருந்தது. புகையும், தூசியும் வானத்தை மூடியிருந்தது. கடல் அலைகள்கூட மெதுவாகத் தான் அடித்தன... அவைகூட மனிதர்களின் அழுகையை மதித் ததுபோல. அந்த மனிதக் கடலில் ஒரு ஐந்து வயது சிறுமி தன் தந்தையின் கையை பிடித்துக் கொண்டு நடந்தாள்.

அவளின் பெயர் நிலா.

அவள் இன்னும் உலகத்தின் கொடுமையை அறியாத பச்சிளம் பெண். அவள் அறிந்த உலகம் மிகவும் சிறியது.





அப்பாவின் தோள். அம்மாவின் மடி. மூன்று வயது தம்பியின் சிரிப்பு. அதுவே அவளது உலகம்.



வட்டுவாகல் பாலம் அருகே மக்கள் கூட்டம்
ஒரு பெருங்கடல்போல அலை மோதியது.
மக்கள் நடுவே பயம் ஒரு நிழல்போல
ஓடிக் கொண்டிருந்தது.
ஆயுதங்களுடன் நிற்கும்
சிப்பாய்கள் கட்டளைகளை
பிறப்பித்தபடி கத்தினர்.

அந்த குரல்கள்அந்தப்
பாலத்தின் மேல் ஒரு இரும்புக்
கத்தி போல விழுந்தன.

“ஆண்கள் எல்லாம் இந்தப்
பக்கம்!”

அந்த ஒரு வாக்கியம் நூற்றுக்
கணக்கான குடும்பங்களின்
இதயத்தை ஒரே நேரத்தில் கிழித்தது.

நிலாவின் தந்தை மெதுவாக நின்றார்.
அவர்தன் மகளை நோக்கிப் பார்த்தார். அந்த
பார்வையில் ஒரு தந்தையின் அளவற்ற அன்பும்...
ஒரு மனிதனின் உதவியற்ற பயமும்...
ஒன்றாகக் கலந்திருந்தது.

அவர் அவளை மடியில் தூக்கிக்கொண்டார். நிலா அவரது கழுத்தை சுற்றிப் பிடித்தாள்.

“அப்பா... நாங்கள் எல்லாரும் சேர்ந்து போவோமா?”

அந்த கேள்வி ஒரு குழந்தையின் எளிய நம்பிக்கை.

ஆனால், அந்த நம்பிக்கை அந்த நாளில் மிகவும் மெல்லிய ஒன்று. அவர் சிரிக்க முயன்றார். ஆனால் அந்தச் சிரிப்பு ஒரு உடைந்த

இதயத்தின் சிரிப்பு.

“நான் சீக்கிரம் வந்து சேருவேன்...” என்று அவர் மெதுவாகச் சொன்னார்.

அந்த வார்த்தைகள் ஒரு வாக்குறுதிபோல இருந்தது. ஆனால், அந்த வாக்குறுதியைக் காலம் காப்பாற்றவில்லை. அவர் நிலாவின் நெற்றியில் முத்தமிட்டார். அந்த முத்தம் ஒரு தந்தையின் அன்பு மட்டும் அல்ல.

அது....

ஒரு மனிதன் தன் குழந்தையின் நினைவில் தன்னை நிரந்தரமாக பதிக்க முயன்ற ஒரு கடைசி அடையாளம். பிறகு அவர் மெதுவாக அவளது கையை விட்டார். அந்த நொடியில் நிகழ்ந்தது... ஒரு சாதாரண பிரிவு அல்ல.

அது

ஒரு குழந்தையின் சிறுவயதை ஒரே நொடியில் பறித்துக்கொண்ட தருணம். அவர் கூட்டத்தின் மறுபக்கத்தில் நடந்து சென்றார். நிலா திரும்பத் திரும்ப பார்த்தாள்.

மக்கள் நடுவே அவளது அப்பாவின் தோள் மெதுமெதுவாக மறைந்தது. பனியில் மறையும் மரம்போல... அந்த உருவம் அவளது கண்களில் இருந்து அழிந்தது. அந்த தருணத்தில் ஒரு குழந்தையின் உலகம் அமைதியாக உடைந்தது.

ஆண்டுகள் கடந்துபோனது. போர் முடிந்தது என்று உலகம் சொன்னது. புதிய வீடுகள் கட்டப்பட்டன. புதிய சாலைகள் உருவானது.

ஆனால்,

ஒரு குழந்தையின் மனதில் ஒரு கேள்வி மட்டும் இன்னும் பதில் இல்லாமல் இருந்தது.

“என் அப்பா எங்கே?”

இப்போது நிலாவுக்கு இருபது வயது. ஆனால், அவளது நினைவுகளில் அவள் இன்னும் அந்த ஐந்து வயதுக் குழந்தைதான்.

ஒவ்வொரு மே மாதமும் அவள் வட்டுவாகல் பாலத்திற்குச் செல்கிறாள். அங்கே நின்று அந்த நாளை நினைக்கிறாள்.

ஒரு தந்தையின் கை ஒரு குழந்தையின் கையை விட்ட அந்த நொடியை. அவள் இன்னும் காத்திருக்கிறாள்.

ஒரு நாள்

அந்த கூட்டத்தின் மறுபக்கத்தில் இருந்து அவளது அப்பா திரும்பி வந்து நிற்பார் என்று.

முள்ளிவாய்க்கால் மண் இப்போது அமைதியாக இருக்கலாம். ஆனால், அந்த மண்ணின் கீழ் ஆயிரக்கணக்கான கதைகள் இன்னும் உயிரோடு இருக்கின்றன.

அவற்றில் ஒன்று

ஒரு சிறுமியின் கதை.

அவள் இன்னும் உலகத்திடம் கேட்கிறாள்:

“நாங்கள் ஒப்படைத்தவர்கள்....

எங்கே?”.....

போரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நினைவில் குடும்பங்கள் இன்னும் கண்ணீர் சுமந்து வாழ்கின்றார்கள் மறைந்த முகங்களும் குரல்களும் மறக்கப்படவில்லை.

மண்ணின் ஒவ்வொரு துளியும் அவர்களின் நினைவுகளுக்குச் சாட்சியாக நிற்கிறது. மௌனத்தில் புதைந்தாலும் அந்த உண்மை அழியவில்லை.

நீதி இன்னும் காத்திருக்கிறது காலம் கடந்தும் உண்மை நிலைத்திருக்கிறது.



அப்பா எப்ப வருவார்?

அந்தக் கேள்வி கனியிசையின் வீட்டில் பல ஆண்டுகளாகத் திருப்பித் திருப்பி கேட்டுக் கொண்டே இருந்தது. அது ஒரு குழந்தையின் சாதாரண கேள்வி அல்ல; அது அந்த வீட்டின் சுவர்களில் ஒட்டிக் கொண்டிருந்த நினைவு.

மாலை நேரங்களில் வீட்டு வாசலில் அமர்ந்திருக்கும் அவளது அம்மா அந்தக் கேள்வியைக் கேட்டவுடன் முகத்தைத் திருப்புவாள். சில சமயம் பதில் சொல்ல முயற்சிப்பாள்.

“ஒருநாள் வருவார்...” ஆனால் அந்த வார்த்தை முழுமையாக வெளிவராது. குரல் நடுவே நின்றுவிடும். பின்னர் அமைதி. அந்த அமைதி தான் அந்த வீட்டின் மொழி.

கனியிசை இப்போது உயர்தர வகுப்பு மாணவி. ஆனால் அவளது மனதில் இன்னும் மூன்று வயதுக் குழந்தையின் குரல் வாழ்ந்து கொண்டே இருந்தது.

அந்த நாள்... 2009 மே மாதம்.

முல்லைத்தீவின் வெப்பமான மணல் கால்களை எரித்துக் கொண்டிருந்தது. மக்கள் கூட்டம் நீண்ட வரிசையாக நகர்ந்தது. குழந்தைகள் அழுதனர். காயமடைந்தவர்கள் மெதுவாக நடந்தனர். சிலர் எதையும் பேசவில்லை. அந்தக் கூட்டத்தில் கனியிசையும் இருந்தாள். அவள் தன் அப்பாவின் கையைப் பிடித்திருந்தாள்.

அவளது அப்பா... கந்தசாமி திவிச்சந்திரன். கிராமத்தில் பலர் அவரை "இசையாளன்" என்று அழைப்பார்கள். அவர் சில நேரங்களில் வீட்டில் மெதுவாகப் பாடுவார். அந்த குரல் கனியிசைக்கு மிகவும் பிடிக்கும்.

ஆனால், அந்த நாள் அவர் பாடவில்லை. மிகவும் அமைதியாக இருந்தார். வட்டுவாகல் பாலத்தை அடையும் நேரத்தில் சில இராணுவத்தினர் வந்தனர்.

ஒருவர் கை காட்டினார்.

"நீங்க இங்க வரணும்." அப்பா திரும்பிப் பார்த்தார். அந்தப் பார்வை கனியிசையின் நினைவில் இன்னும் தெளிவாக இருக்கிறது.

அது ஒரு பார்வை மட்டுமல்ல.அது ஒரு விடைபெறல். "நான் போயிட்டு வரேன்," என்று அவர் சொன்னார். அவர் மீண்டும் திரும்பி வரவில்லை.

காத்திருப்பு...

அந்த நாளுக்குப் பிறகு வீடு மாறியது. அம்மா தினமும் கதவை நோக்கிப் பார்ப்பாள். இரவு நேரத்தில் வெளியே சத்தம் கேட்டால் உடனே எழுந்து நிற்பாள். பிறகு மீண்டும் அமைதியாக உட்கார்ந்து விடுவாள்.

ஒரு நாள் கனியிசை கேட்டாள். "அம்மா... அப்பா இருக்கிறார் தானே?" அம்மா பதில் சொல்லவில்லை. பிறகு மெதுவாகச் சொன்னாள். "அவரை எங்காவது வைத்திருப்பாங்க..." அந்த "எங்காவது" என்ற வார்த்தை அந்த வீட்டில் பல ஆண்டுகள் வாழ்ந்தது.

பள்ளிக் காலம் நகர்ந்தது.

கனியிசை வளர்ந்தாள்.

பள்ளியில் நல்ல மாணவி. ஆனால், சில நேரங்களில் அவளது கவனம் பாடங்களில் இருக்காது. அவள் ஜன்னல் வெளியே மரங்களைப் பார்த்துக் கொண்டிருப்பாள். ஒரு நாள் தமிழ் ஆசிரியர் ஒரு கட்டுரை எழுதச் சொன்னார்.

“உங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத நாள்.”

மாணவர்கள் எல்லாம் எழுதத் தொடங்கினர். கனியிசை மட்டும் வெறும் தாளை பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு மெதுவாக ஒரு வரி எழுதினாள்.

“என் அப்பாவை கடைசியாக பார்த்த நாள்.”

அவள் எழுதிக்கொண்டே இருந்தாள். அந்த நாள், அந்த பாலம், அந்தப் பார்வை... எல்லாம் வார்த்தைகளாக மாறின. அந்தக் கட்டுரையை ஆசிரியர் வாசித்தபோது அவர் நீண்ட நேரம் அமைதியாக இருந்தார்.

பிறகு சொன்னார்:

“நீ எழுத வேண்டும்.” அந்த நாள் கனியிசைக்கு ஒரு உண்மை புரிந்தது. கதைகள் சில நேரங்களில் மனிதர்களை மறக்காமல் வைத்திருக்கலாம்.

பல ஆண்டுகளுக்கு பிறகு.... பல ஆண்டுகள் கழித்து கனியிசை ஒரு பெரிய மேசையின் முன் உட்கார்ந்திருந்தாள். அவள் முன் பல கோப்புகள். அவை எல்லாம் ஒரே விஷயத்தைப் பற்றியது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள். ஒவ்வொரு கோப்பும் ஒரு வாழ்க்கை. அவள் மெதுவாகப் பக்கங்களைத் திருப்பினாள்.

ஒரு இடத்தில் அவளது கை நின்றது. அங்கே ஒரு பெயர் இருந்தது. கந்தசாமி திவிச்சந்திரன் அதன் கீழே ஒரு குறிப்பு:

“2009 மே 16 கடைசியாக வட்டுவாகல் பகுதியில் காணப்பட்டவர்.” அவள் நீண்ட நேரம் அந்த பெயரைப் பார்த்தாள்.

பிறகு மெதுவாகச் சிரித்தாள்.

அது சந்தோஷ சிரிப்பு அல்ல.

அது ஒரு உண்மை புரிந்த சிரிப்பு.

ஏனெனில் அந்த கோப்புகளைத் தொகுத்தவர்

கனியிசை தான். இறுதியாக சிறுவயதில் அவள் கேட்ட கேள்வி:

“அப்பா எப்ப வருவார்?” அதற்குப் பதில் இன்னும் இல்லை. ஆனால், அந்த கேள்வி தான் அவளை இந்தப் பாதைக்கு கொண்டு வந்தது. அவள் ஜன்னல் வெளியே பார்த்தாள். மாலை இருள் மெதுவாக இறங்கிக் கொண்டிருந்தது. அவள் முன் இருந்த காகிதத்தில் ஒரு தலைப்பு எழுதினாள்.

“மௌனத்தின் ஓலம்.”

அவள் எழுதத் தொடங்கினாள்.

அந்தக் கதை ஒரு தந்தையின் கதை மட்டும் அல்ல.

ஒரு குழந்தையின் கேள்வி மட்டும் அல்ல.

அது ஒரு கூட்டமக்களின் நினைவு.

ஒரு தலைமுறையின் சாட்சி.

ஒரு உலகத்தின் மௌனம்.

அந்த இரவு எழுதிக்கொண்டிருந்தபோது கனியிசைக்கு ஒரு உண்மை புரிந்தது: மௌனம் ஒருநாள் கதையாகிப் பேசும். அந்த ஓசையை உலகம் கேட்கும் வரை...



மௌனத்தின் வரிகை...

அந்தக் குரல் சங்கவியின் கனவுகளில் பல ஆண்டுகளாக திரும்பி வந்தது.

"உடைகளைக் கழற்றி விட்டு வரணும்..."

அவள் திடீரென்று விழித்துக் கொண்டாள். அறை முழுவதும் இருள். ஜன்னல் வழியாக ஒரு மெல்லிய காற்று மட்டும் வந்தது. அவளது நெஞ்சு வேகமாகத் துடித்தது. பல ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால், சில குரல்கள் காலத்தைக் கடந்து வாழ்கின்றன. அவை மறக்க முடியாத நினைவுகளாக மாறி விடுகின்றன.

அந்த குரல் அவளை மீண்டும் அந்த நாளுக்கு அழைத்துச் சென்றது. அன்று மாலை வானம் சிவந்திருந்தது. வடக்கின் மண் தூசியில் மூழ்கி யிருந்தது. அந்த பாதையில் ஆயிரக்கணக்கான மக்கள் நகர்ந்தனர். அவர்களுடைய நடைகள் மெதுவாக இருந்தது. போர் முடிவுக்கு வந்திருந்தாலும் மக்களின் மனதில் அமைதி வரவில்லை. அந்தக் கூட்டத்தில் சங்கவியும் இருந்தாள். பதினாறு வயது. அவள் தன் தம்பி சங்கரின் கையை பிடித்துக்கொண்டு நடந்தாள். அவனுக்கு பதினான்கு வயது.

“அக்கா... இன்னும் எவ்வளவு தூரம்?” என்று அவன் கேட்டான்.

சங்கவி பதில் சொல்லவில்லை. அவள் முன்னே பார்த்தாள். அங்கு கம்பி வேலிகள் தெரிந்தன. அதற்குப் பின்னால் ஆயுதம் தாங்கிய இராணுவம். அந்த இடம் ஒரு கதவுபோல் இருந்தது.

ஒரு பக்கம் போரின் உலகம். மற்றொரு பக்கம் தெரியாத எதிர்காலம்.

அவர்களுடன் அம்மாவின் தம்பி வந்தார். இருபத்தொரு வயது இளைஞன். அவர்களுடன் ஒரு சிறிய குழந்தையும் இருந்தது. அந்தக் குழந்தைக்கு பெற்றோர் இல்லை. போர் அதை எடுத்துச் சென்றது.

மக்கள் மெதுவாக முன்னே சென்றனர். அழுகை, காயம், பயம்... அவை எல்லாம் அந்த பாதையின் மொழிகள். இறுதியில் அவர்கள் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியை அடைந்தனர். மக்களை வரிசையில் நிறுத்தினார்கள். அந்த நேரத்தில் ஒரு குரல்.

“எல்லாரும் கேளுங்க!”

அந்த குரல் காற்றைக் கிழித்தது.

“உடைகளை கழற்றி விட்டு வரணும்.”

முதலில் யாருக்கும் புரியவில்லை. பிறகு அந்தக் குரல் மீண்டும் வந்தது.

“ஒட்டுத்துணி கூட இருக்கக்கூடாது.”

அந்த வார்த்தைகள் விழுந்த நொடியில்... முழு கூட்டமும் அமைதியாகி விட்டது. அந்த அமைதி சங்கவிக்கு ஒரு விஷயமாகத் தோன்றியது.

ஒரே இருள்.

அது மெதுவாக மனிதர்களின் மீது இறங்கியது. ஒருவருக்குப் பிறகு ஒருவராக... மக்கள் தங்கள் உடைகளைத் தரையில் வைத்தனர். அது வெறும் உடைகளை கழற்றுவது இல்லை. அது மனித மரியாதையை தரையில் வைப்பதுபோல இருந்தது. சங்கவி தன் கைகளை மார்பின் மீது வைத்துக் கொண்டாள். அவளது கண்கள் வெறுமையாக இருந்தது.

அவள் முன்னால் அவளது அப்பா. அவளது தம்பி. அவள் அந்த காட்சியை பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த நேரத்தில் இராணுவ வீரர்கள் வரிசையில் நடந்தனர். அவர்கள் ஒவ்வொருவரையும் "பரிசோதித்தனர்".

ஆனால், அந்த பரிசோதனை... ஒரு எல்லையைக் கடந்து சென்றது. ஒரு வயதான மனிதர் திடீரென மயங்கி விழுந்தார். ஒரு பெண் கைகளை முகத்தில் வைத்துக்கொண்டு அழுதாள். ஒரு இளைஞன் மண்டியிட்டுக் கெஞ்சினான்.

"தயவு செய்து..." அந்த வார்த்தை காற்றில் கரைந்தது. சிலர் மயங்கி விழுந்தனர். சிலர் இராணுவ வீரர்களின் கால்களைப் பிடித்து அழுதனர். அந்த சத்தங்கள் சங்கவியின் காதுகளை நிரம்பின.

அழுகை.

பயம்.

அவமானம்.

அவை எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு விஷயமாக மாறின. ஒரு நீண்ட இருள். அந்த இருள் அவளுள் அன்றே பிறந்தது.

பல ஆண்டுகள் கழிந்தன.

நகரத்தின் பல்கலைக்கழக வளாகம் அமைதியாக இருந்தது. மரங்களின் நிழல் பாதையில் விழுந்திருந்தது. நூலகத்தின் ஜன்னல் அருகில் சங்கவி உட்கார்ந்திருந்தாள். அவள் முன் திறந்த புத்தகம். ஆனால், அவள் படிக்கவில்லை. அவளது நினைவுகள் அந்த நாளுக்குத் திரும்பிச் சென்றிருந்தது. அந்த நேரத்தில் அவளது தோழி அமலா வந்தாள்.

"நீ சரியாகிற்றீயா சங்கவி?" என்று கேட்டாள். சங்கவி சிரிக்க முயன்றாள்.

"சரி தான்." ஆனால் அது உண்மை இல்லை. அந்த நினைவுகள் அவளை இன்னும் விடவில்லை. சில நேரங்களில் அவள் இரவில் விழித்து விடுவாள்.

அந்தக் குரல்கள் மீண்டும் அவளது காதுகளில் ஒலிக்கும்.

“உடைகளை கழற்றி விட்டு வரணும்....” அவள் கைகள் நடுங்கும். அந்த நினைவு அவளது கல்வியையும் பாதித்தது. ஒரு காலத்தில் அவள் மிகச் சிறந்த மாணவி. ஆனால் இப்போது... அவளது மனம் படிப்பில் நிலைக்கவில்லை.

ஒரு நாள் அமலா மீண்டும் கேட்டாள்.

“நீ ஏதோ உள்ளே வைச்சிட்டு இருக்க.” சங்கவி நீண்ட நேரம் அமைதியாக இருந்தாள்.

பிறகு மெதுவாகப் பேசத் தொடங்கினாள். அவள் அந்த நாளைச் சொன்னாள்.

அந்த வரிசையை.

அந்தக் குரலை.

அந்த அவமானத்தை.

அமலா அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தாள். பிறகு மெதுவாகச் சொன்னாள்:

“நீ அந்த இருளை தனியா சுமக்குற.”

சங்கவி தலை குனிந்தாள். “அது போகுமா?” என்று கேட்டாள். அமலா ஜன்னல் வெளியே பார்த்தாள். மாலை இருள் மெதுவாக இறங்கிக் கொண்டிருந்தது.

“இருள் எப்பவும் போகாது,” என்றாள். “ஆனா அதைப் பற்றி பேச ஆரம்பிச்சா... அது ஒளியா மாற ஆரம்பிக்கும்.” அந்த இரவு சங்கவி வீட்டிற்குத் திரும்பினாள்.

அவள் ஒரு காகிதத்தை எடுத்தாள். பல ஆண்டுகளாக அவள் சொல்லாத நினைவுகளை எழுதத் தொடங்கினாள்.

அந்த வரிசை.

அந்த குரல்.

அந்த மௌனம்.

அவள் எழுதும்போது அவளுக்கு ஒரு உண்மை புரிந்தது. அந்த நாளில் அவள் மட்டும் இல்லை. ஆயிரக்கணக்கான மக்கள் இருந்தனர். அவர்களில் பலர் இன்று உயிரோடு இல்லை. அந்த நினைவுகளை சொல்ல யாரும் இல்லை.

அந்த நேரத்தில் சங்கவிக்கு ஒரு உண்மை தெரிந்தது. அந்த இருள் அவளுடையது மட்டுமல்ல. அது மௌனமாகிப்போன ஆயிரம் குரல்களின் இருள். அவள் எழுதிக்கொண்டே இருந்தாள். அவள் எழுதிய ஒவ்வொரு வரியிலும் அந்த இரவின் குளிர் இருந்தது. சாளரத்தின் வெளியே நகரம் இன்னும் விழித்துக் கொண்டே இருந்தது.

தொலைவில் வண்டிகளின் ஓசை மெதுவாக வந்து மறைந்தது., ஆனால் அந்த அறையின் உள்ளே, நேரம் வேறு விதமாக நகர்ந்தது. காகிதத்தின் மீது விழுந்த ஒளிக்கோடு மெல்ல மாறிக்கொண்டிருந்தது. அது ஒரு சாட்சியைப்போல அமைதியாக நின்றது.

ஒவ்வொரு சொல்லும், அவள் மனத்தின் அடியில் புதைந்து கிடந்த மௌனங்களை வெளியே கொண்டு வந்தது. நினைவுகள் சில நேரம் காயம்போல இருந்தன. சில நேரம் அவை ஒரு நீண்ட சுவாசம் போலவும் இருந்தன. அவள் எழுதியது ஒரு இரவின் கதையல்ல.

ஒரு மனிதன் இருளை எதிர்கொண்ட தருணத்தின் கதை. அந்தக் கதையில் பயமும் இருந்தது, அதிர்ச்சியும் இருந்தது. ஆனால் அதைவிட முக்கியமாக அதில் உயிர் இன்னும் நின்றுகொண்டிருப்பதற்கான சான்று இருந்தது.

ஒரு கட்டத்தில் அவள் பேனாவை நிறுத்தினாள். மீண்டும் காகிதத் தைப் பார்த்தாள். அந்த வரிகள் இப்போது அவளுக்கே புதிதாகத் தோன்றின. ஏனெனில், சில உண்மைகள் மனதில் இருக்கும்போது ஒரு

பாரமாக இருக்கும். ஆனால் எழுதப்பட்டவுடன் அவை ஒரு சாட்சியாக மாறிவிடும்.

சாளரத்தின் வழியாக வந்த ஒளி இப்போது கொஞ்சம் மங்கி யிருந்தது. ஆனால், அந்த காகிதத்தின் மீது இன்னொரு ஒளி இருந்தது. அது மின்விளக்கின் ஒளி அல்ல. அது எழுத்தின் ஒளி. சங்கவி மெதுவாக காகிதத்தை மடித்தாள்.

அவள் அறிந்திருந்தாள் இது ஒரு கதையின் முடிவு அல்ல. இது ஒரு குரல், மௌனத்தைத் தாண்டி வெளியே வந்த முதல் தருணம்.

அவள் காகிதத்தை முடித்தாள். ஒவ்வொரு வரியும், ஒவ்வொரு சொல்லும் அவள் வாழ்ந்த இருளின் காட்சி, உண்மையின் சாட்சி ஆனது. காகிதத்தில் எழுந்த ஒளிக்கோடுகளுடன் சேர்ந்து ஒரு புதிது, ஒரு நிலைத்த ஒளி போல மிளிர்ந்தது.

அவள் எழுதியது வெறும் கதை அல்ல. அது ஒரு சாட்சி, ஒரு போரின் நினைவுப்படம், மனிதன் எதிர்கொண்ட இருள் மற்றும் வெளிச் சத்தின் மாயாஜாலம். இதை வாசிக்கும் யாரும் அந்த வாரங்களை நேரில் காணவில்லை என்றாலும், அந்த உண்மை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டது.

அவளின் குரல்,

அவளின் கண்கள்,

அவளின் மனதின் ஒளி

ஒவ்வொரு வாசகத்திலும் பிரகடனம் செய்யப்பட்டது. அது உலகத்திற்கு ஒரு அழுத்தமான வாக்குறுதி: இருளை வெல்லும் ஒளி எழுத்தில் மையமாகும். உண்மை எழுத்தில் வாழும். சங்கவி சிரித்தாள். இப்போது அந்த சிரிப்பில் மகிழ்ச்சி இல்லை, ஆனால் ஒரு சூரிய ஒளி போல ஒளிரும் புரிதல் இருந்தது.



மௌனத்தின் அறைகள்

இரவு நகரத்தை மெதுவாக மூடிக் கொண்டிருந்தது. கொழும்பின் வீதிகளில் விளக்குகள் இருந்தாலும், அந்த வெளிச்சம் மனிதர்களின் அச்சத்தை அகற்ற முடியவில்லை. அன்றைய இரவில் ஒரு வெள்ளை வான் நின்றது.

அதில் எந்தச் சத்தமும் கேட்கவில்லை. அது ஒரு சாதாரண வாகனம் போலவே தோன்றியது. ஆனால் அதை பார்த்தவர்கள் தங்கள் பார்வையைத் திருப்பிக்கொண்டார்கள். ஏனெனில், அந்த வாகனம் ஒரு கதையை எடுத்துச் சொல்லும். அதிலிருந்து திரும்பி வருபவர்கள் மிகவும் குறைவு.

அவன் வீட்டுக்குள் இருந்தான். அம்மா சமையலறையில் பாத்திரங் களைக் கழுவிக் கொண்டிருந்தாள். தண்ணீரின் சத்தம் அந்த இரவின் அமைதியைக் குழப்பியது.

அப்போது கதவு தட்டப்பட்டது. ஒரு தட்டல். அதன்பின்னர் இன்னொரு தட்டல். அவன் கதவைத் திறந்தான்.வெளியில்

நின்றவர்கள் சீருடை அணியவில்லை. ஆனால் அவர்களின் குரலில் அதிகாரம் இருந்தது.

“சில கேள்விகள் கேட்கணும்.” அவன் பதில் சொல்லும் முன் அவர் களின் கைகள் அவன் தோள்களில் விழுந்தன. அந்த இரவில் அவன் உலகம் மாறியது. அவனை வாகனத்துக்குள் தள்ளினர். கண்கள் கட்டப்பட்டன.

அவன் பார்த்த கடைசி காட்சி ...

அம்மா கதவின் அருகே நின்றுகொண்டிருந்தாள். அவள் எதையும் பேசவில்லை. ஆனால் அவளது கண்களில் இருந்த பயம் அந்த இரவை விடக் கருமையாக இருந்தது.

வாகனம் நகரத்தை விட்டுச் சென்றது. அவன் கண்கள் கட்டப் பட்டிருந்தாலும், சக்கரங்களின் ஒலியைக் கேட்டுத்தூரத்தை உணர்ந்தான்.

உள்ளே இருந்தவர்கள் பேசவில்லை. அந்த மௌனம் ஒரு விசாரணையின் ஆரம்பம் போல இருந்தது. அவன் இறக்கப்பட்ட இடத்தில் காற்று ஈரமாக இருந்தது. ஒரு இரும்பு கதவு திறக்கும் சத்தம். அவனை உள்ளே இழுத்துச் சென்றனர். கண்களைத் திறந்தபோது அவன் முதலில் பார்த்தது சுவர் அல்ல.

தரையில் இருந்த இரத்தக் கறைகள். அவை பழையவை. ஆனால் அவை அழியவில்லை.

“நீ என்ன செய்தாய்...?” ஒரு அதிகாரி கேட்டான். அவன் பதில் சொல்லவில்லை. அவன் உண்மையில் எதையும் செய்யவில்லை.

அந்த அமைதியே அவர்களுக்குப் பதிலாக இருந்தது. ஆனால் அந்த பதிலை அவர்கள் ஏற்கவில்லை. அவன் கைகளை சங்கிலியால் பிணைத்தனர். அறையில் இருந்த கருவிகளை அவன் பார்த்தான். ஒவ்வொரு கருவியும் ஒரு கதையை நினைவில் வைத்திருந்தது.

அந்தக் கதைகள் எந்தப் புத்தகத்திலும் எழுதப்படவில்லை.

அவை மனித உடல்களில் எழுதப்பட்டவை.

நாட்கள் கடந்தன.

அவன் நேரத்தைக் கணக்கிடவில்லை. அந்த இடத்தில் சூரியன் இல்லை. ஒளி இருந்தாலும் அது சூரிய ஒளி இல்லை.

அவர்கள் ஒரே விடயத்தை மீண்டும் சொன்னார்கள்.

“ஒப்புக்கொள்.”

அவன் சொன்னான்: “நான் செய்யவில்லை.” அவர்கள் சிரித்தார்கள். அந்தச் சிரிப்பு மனித சிரிப்பு இல்லை. அது அதிகாரத்தின் சிரிப்பு.

ஒரு நாள் அவன் அருகில் இருந்த அறையில் ஒரு பெண் அழுதாள். அந்த அழுகை மெதுவாக ஆரம்பித்தது. பின்னர் அது முழு கட்டிடத்தை யும் நிரப்பியது. அவனால் அந்தக் குரலை மறக்க முடியவில்லை.

ஏனெனில் அந்த குரலில் மனிதனின் எல்லா அச்சங்களும் இருந்தன. அந்த முகாமில் பலர் இருந்தனர். சில இளைஞர்கள், பெண்கள், சிலர் வயதானவர்கள்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கதை.

ஒரு இரவு...

ஒரு வெள்ளை வான்

ஒரு அறையென...

சில நேரங்களில் அதிகாரிகள் சோர்வாக இருந்தார்கள்.அவர்கள் புகை பிடித்தார்கள்.

அவர்கள் சிரித்தார்கள். அவர்கள் இந்த அறைகளை சாதாரண அலுவலகம் போல பார்த்தார்கள். ஆனால் அந்த சுவர்கள் வேறு கதைகளை நினைவில் வைத்திருந்தன.

மாதங்கள் கடந்தன. ஒரு நாள் கதவு திறந்தது.

“போ.” அவன் நம்பவில்லை. அவர்கள் சங்கிலியை அவிழ்த்தனர். அவன் வெளியே நடந்தான். வெளியில் சூரியன் இருந்தது. அவன் கண்கள் அந்த வெளிச்சத்தை ஏற்க முடியவில்லை. ஆனால், அவன் மனதில் இன்னும் அந்த இருண்ட அறைகள் இருந்தன.

பல ஆண்டுகள் கழித்து அவன் பேச ஆரம்பித்தான்.அவன் குரல் நடுங்கியது. ஆனால் அவன் சொன்ன வார்த்தைகள் தெளிவாக இருந்தன.

“அந்த அறைகள் இருந்தன.”

“அந்த சங்கிலிகள் இருந்தன.”

“அந்த மனிதர்கள் இருந்தார்கள்.”

சிலர் அவனை நம்பவில்லை. சிலர் அமைதியாக இருந்தார்கள். ஆனால் சிலர் அவன் குரலைப் பதிவு செய்தார்கள். அந்த குரல்கள் உலகம் முழுவதும் சென்றது. ஏனெனில் சில மௌனங்கள் நிரந்தரமாக இருக்காது.

ஒரு நாள் அவை கதைகளாக மாறும்.

ஒரு நாள் அவை சாட்சியங்களாக மாறும்.

ஒரு நாள் அவை நீதியைத் தேடும்.

அப்போது அந்த குரல் ஒரு மனிதனுடையது மட்டும் அல்ல. அது ஒரு இனத்தின் நினைவு.

அது மறைக்கப்பட்ட வரலாற்றின் ஒலி.

அது இன்னும் பதில் தேடும் மௌனம்.

அவன் பெயர் மறவன்



மறைந்த ஒளி

முல்லை நகரத்தின் மாலை காற்று மரங்களின் இலை களை மெதுவாக அசைத்துக் கொண்டிருந்தது. அந்த அசைவில் ஒரு விதமான நினைவின் சலசலப்பு இருந்தது. யாரோ பழைய காலத்தை மெதுவாக எழுப்புவதுபோல...

பூங்காவின் நீண்ட இரும்பு இருக்கையில் அவள் தனியாக அமர்ந்திருந்தாள். சுற்றிலும் மக்கள் நடந்து சென்றனர். சிலர் சிரித்தார்கள். சிலர் தங்கள் கைப்பேசிகளில் மூழ்கியிருந்தனர். குழந்தைகள் ஓடி விளையாடினர்.

அந்தக் கூட்டத்தின் நடுவில் அவள் ஒரு சாதாரண பெண் போலவே தோன்றினாள். ஆனால், அவள் உள்ளத்தில் மறைந் திருந்த வாழ்க்கையை அவள் மட்டும் தான் அறிந்திருந்தாள்.

அவள் மெதுவாகத் தன் கைகளை விரித்துப் பார்த்தாள். அந்த கைகள் ஒரு காலத்தில் உயிர்களைக் காப்பாற்ற முயன்ற கைகள். அந்த கைகள் ஒரு காலத்தில் இரத்தத்தில் நனைந்த கைகள். அந்த கைகள் ஒரு காலத்தில் பயத்தால் நடுங்கிய கைகள்.

மழைத்துளி ஒன்று அவளின் கன்னத்தில் விழுந்தது. அவள் கண்களை மூடினாள். அந்த ஒரு கணத்தில் காலம் பின்சென்றது. அவளின் பெயரை இப்போது யாரும் நினைவில் வைத்திருக்கவில்லை.

ஆனால், ஒரு காலத்தில் அந்த பெயர் ஒரு பள்ளியின் வருகைப் பதிவில் தினமும் எழுதப்பட்டிருந்தது. காலை நேரங்களில் அவள் பள்ளிக்குச் செல்லும்போது புத்தகங்களை மார்போடு அணைத்தபடி நடந்தாள். வெள்ளைச் சீருடையில் அவளின் நடை மெதுவாக இருந்தாலும் உறுதியானது.

அவளின் கண்களில் ஒரு ஒளி இருந்தது...

இன்னும் வராத எதிர்காலத்தின் ஒளி...

மருத்துவராக வேண்டும் என்ற கனவு அவளின் மனதில் மெதுவாக வளர்ந்து கொண்டிருந்தது. காயமடைந்தவர்களைக் காப்பாற்ற வேண்டும். வலியால் அலறும் மனிதர்களுக்கு அமைதியைத் தர வேண்டும்.

அவள் நினைத்த உலகம் மிகவும் எளிமையானது. ஆனால், வரலாறு சில சமயம் குழந்தைகளின் கனவுகளைக் கேட்காது.

முதலில் தூரத்தில் வெடிக்கும் சத்தங்கள் மட்டும் கேட்டது. பின்னர் இரவில் வானத்தில் ஒளிரும் தீப்பந்துகள். கிராமத்தில் பெரியவர்கள் மெதுவாகப் பேசத் தொடங்கினர்.

“போர் மோசமாகிறது...” அந்த வார்த்தையின் முழு அர்த்தம் அவளுக்குப் புரியவில்லை. ஆனால், கிராமத்தின் காற்று மாறிவிட்டது. அமைதி மெல்ல மறைந்தது.

ஒரு நாள் பள்ளியில் இருந்தபோது திடீரென எல்லோரும் வெளியே ஓடினார்கள்.

தூரத்தில் ஒரு வெடிப்பு.

மண் தூசு வானத்தை மூடியது. அந்த நாள்தான் அவள் முதன் முறையாக இரத்தத்தின் வாசனையை உணர்ந்தாள். பாடசாலை

வளாகத்தின் அருகில் ஒருவன் கிடந்தான். அவனொரு இளைஞன். அவனின் தோளில் ஆழமான காயம்.

இரத்தம் மெதுவாக மண்ணில் கலந்து கொண்டிருந்தது. அவன் கண்களில் மரணத்தின் பயம் இருந்தது. அந்த காட்சி அவளின் மனதில் ஆழமாகப் பதிந்தது. அந்த இரவு அவளுக்குத் தூங்க முடியவில்லை. ஒரு கேள்வி மட்டும் அவளைத் துரத்தியது.

"ஒரு போராளி காயமடைந்தால் ...

அவனை யார் காப்பாற்றுவார்கள்?" அந்தக் கேள்வியே அவளின் வாழ்க்கையின் திசையை மாற்றியது.

வடக்குக் கிழக்கின் வானம் புகையால் நிரம்பிய காலமது. கிராமங்களில் இரவு வந்தால் அமைதி இல்லை. தூரத்தில் வெடிக்கும் சத்தங்கள் மட்டும். அந்த நாட்களில்தான் அவள் ஒரு முடிவை எடுத்தாள்.

உயிர்களைக் காப்பாற்ற வேண்டும். அந்த எண்ணத்தோடு அவள் மருத்துவ உதவிப் பணியில் சேர்ந்தாள்.

அவள் துப்பாக்கி பிடிக்கவில்லை. ஆனால், காயமடைந்தவர்களின் கைகளைப் பிடித்தாள். உடைந்த எலும்புகள். இரத்தம் கலந்த மண். வலியால் நடுங்கும் உடல்கள். அவள் அவற்றின் நடுவில் வாழத் தொடங்கினாள்.

ஒரு இரவு. கள மருத்துவகூடத்தில் மங்கலான விளக்கு மட்டும் எரிந்தது. காயமடைந்த இளைஞன் ஒருவன் அவளின் கையைப் பிடித்தான். அவனின் குரல் மெதுவாக இருந்தது.

"அக்கா... நான் உயிர் பிழைப்பேனா?"

அவள் பதில் சொல்லவில்லை. அவள் மெதுவாக அவனின் நெற்றியைத் தொட்டாள். அந்த அமைதியே அவளின் பதில். சில நேரங்களில் வார்த்தைகள் பொய் பேசும். அமைதி மட்டும் உண்மையைச் சொல்லும்.

காலம் நகர்ந்தது.

போரின் கடைசி நாட்கள் வந்தன. மண், புகை, அச்சம் எல்லாம் ஒன்றாகக் கலந்திருந்த காலம். ஆயிரக்கணக்கான மக்களுடன் அவளும் சரணடைந்தாள். அந்தத் தருணத்தில் அவள் வாழ்ந்த உலகம் உடைந்தது. முகாம்களின் கம்பிகள் வானத்தை எட்டி நின்றன.அங்கே இரவு மிகவும் நீளமானது.

சில இரவுகளில் மனிதக் குரல்கள் கேட்காது.

சில இரவுகளில் அமைதியே மிகவும் பயங்கரமானது.

அவள் பல இரவுகளை நரக வன்முறைகளைக் கடந்து வந்தாள். அந்த இரவுகள் அவளின் உடலை மட்டும் அல்ல... அவளின் உள்ளத்தையும் கிழித்தன. ஆனால் அவள் உயிருடன் இருந்தாள்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு அவள் வெளியுலகிற்கு வந்தாள். மக்கள் அவளைப் பார்த்தார்கள்.

ஆனால், யாரும் அவளின் உள்ளத்தைப் பார்க்கவில்லை. அவள் சிரிக்க முயன்றாள். அந்தச் சிரிப்பு முழுமையாக பிறக்கவில்லை.

முல்லை நகரத்தின் பூங்காவில் அவள் மீண்டும் கண்களைத் திறந்தாள். மழை மெதுவாக விழுந்தது. மர இலைகள் அசைந்தன. உலகம் தனது வழியில் நகர்ந்து கொண்டிருந்தது. அவள் மெதுவாக தனக்குத் தானே சொன்னாள்.

“நான் இன்னும் உயிருடன் இருக்கிறேன்.”

அந்த ஒரு வாக்கியம்...

அவள் வாழ்க்கையின் புதிய தொடக்கம். சில ஒளிகள் வெளியில் தெரியாது. அவை மனிதர்களின் உள்ளத்தில் மறைந்து இருக்கும். அந்த ஒளியைக் கண்டுபிடிக்கும் வரை... மனிதன் வாழ்ந்துகொண்டே இருப்பான்.



அவள் பெயர் தென்னம் ஓலிக்கிறது

பூல்லை நிலத்தின் அந்திப்பொழுது மெதுவாக இறங்கிக் கொண்டிருந்தது. பள்ளி மணி அடித்துப் பல நேரம் ஆகி விட்டது. ஆனால், சில மாணவர்கள் இன்னும் வீட்டுக்குப் போகவில்லை.

பள்ளி வளாகத்தின் உள்ளே இருந்த பெரிய ஆலமரத்தின் கீழே அவர்கள் சுற்றி அமர்ந்திருந்தார்கள். அந்த ஆலமரம் இந்தப் பள்ளியை விட வயதானது. அதன் வேர் மண்ணைத் துளைத்து பழைய காலங் களின் நினைவுகளைப் பற்றி பிடித்துக் கொண்டிருந்தது. அந்த மரத்தின் கீழே அனுபவ ரேகைகள் படர்ந்த ஆசிரியர் ஒருவர் அமைதியாக நின்றிருந்தார். அவர் மெது வாகச் சொன்னார்.

“இந்தப் பள்ளியில்

ஒரு காலத்தில்

ஒரு மாணவி படித்தாள்.”

மாணவர்கள் எல்லோரும் அவரைப் பார்த்தார்கள்.

“அவள் பெயர்...”

அவர் சிறிது நேரம் நின்றார்.

“சோபனா.”

அந்தப் பெயர் புதிய மாணவர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

ஆனால்,

மங்கை திடீரென்று தலை உயர்த்தினாள்.

“அவளை நான் நினைக்கிறேன்...” அவள் மெதுவாக சொன்னாள். அந்த ஒரு வார்த்தையுடன் சாயங்காலக் காற்று பழைய கதவுகளைத் தட்டியது.

பல ஆண்டுகளுக்கு முன்பு...

அதே ஆலமரம். அதே மண். மாணவர்கள் தங்கள் கனவுகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

“நான் மருத்துவர் ஆகணும்.”

“நான் ஆசிரியர் ஆகணும்.”

அப்போது ஒரு மெதுவான குரல். “நான்...” அனைவரும் திரும்பிப் பார்த்தார்கள். அது சோபனா. அவள் மெதுவாக சொன்னாள்.

“யாராவது காயமடைந்தால் அவர்களுக்கு உதவணும் காப்பாற்றணும்.” அந்த வயதில் அந்த வார்த்தை அனைவரையும் புருவம் உயர்த்த வைத்தது.

பின்னர்.

போர் வந்தது. எங்கும் அவலச் சத்தங்கள். மண்ணில் புகை. மக்கள் தங்கள் வீடுகளை விட்டுப் போனார்கள்.

அந்த ஓட்டத்தில் சில குழந்தைகள் விரைவாகப் பெரியவர்களாகி விட்டார்கள்.

சோபனா

அவர்களில் ஒருத்தி. ஒரு நாள் அவள் பள்ளிக்கு வரவில்லை. மறுநாள் அவள் மேசை காலியாக இருந்தது. மூன்றாம் நாள் ஆசிரியர் மெதுவாகச் சொன்னார்.

“அவள் ஒரு முடிவு எடுத்திருக்கிறாள்.” அந்த நாளிலிருந்து சோபனா ஒரு புதிய பெயர் பெற்றாள்.

இசையருவி.

பின்னர் உலகம் அறிந்த பெயர்.

இசைப்பிரியா.

மாலை நேரங்களில் வன்னியில் ஒரு சிறிய தொலைக்காட்சி. அதில் ஒரு நிகழ்ச்சி ஒலிபரப்பு. ஒரு பெண் பேசுவாள். அவள் குரல் தெளிவாக இருக்கும்.

மங்கை அந்தக் குரலை கேட்டபோது மெல்லச் சிரித்தாள். “அது நம்ம சோபனா...” ஆண்டுகள் கடந்து சென்றன. போர் மேலும் கொடூரமானது.

இசைப்பிரியா ஒரு தாய் ஆனாள். அவளுக்கு ஒரு பெண் குழந்தை.

அகல்யா.

ஆனால், போர் அந்த தாலாட்டையும் எடுத்துக்கொண்டது. மருந்து இல்லாத இரவில் அந்த குழந்தை இறந்தது. அந்த நாளிலிருந்து இசைப்பிரியாவின் கண்கள் மாறின.

2009. முள்ளிவாய்க்கால் மண் காயங்களால் நிரம்பியிருந்தது. மக்கள் உதவி தேடி அழுதார்கள். இசைப்பிரியா அவர்களிடம் ஓடினாள். காயமடைந்தவர்களைத் தூக்கினாள். அழுதவர்களை அணைத்தாள்.

ஒரு நாள் அவள் தன் தாயிடம் தங்க வளையலைக் கொடுத்தாள். "நீங்கள் போங்க..."

"நான் பிறகு வருவேன்." அன்றுதான்... அவர்கள் அவளை பார்த்த கடைசி நாள்.

பல மாதங்கள் கழித்து

ஒரு புகைப்படம் வெளியானது. மண்ணில் கிடந்த ஒரு பெண். அவள் கைகள் கட்டப்பட்டிருந்தது. அவள் முகத்தில் காயம். அந்த முகத்தை பார்த்தபோது மங்கையின் கைகள் நடுங்கின.

"இது..." அவள் சொன்னாள். "நம்ம சோபனா."

ஆலமரத்தின் கீழ்

அமைதி பரவியது.

ஒரு புதிய மாணவி மெதுவாகக் கேட்டாள்.

"அப்போ... அவள் கதை இங்கே முடிந்ததா?" இறுதி பக்கங் களின் மறைக்க முடியாத சாட்சி. முதிய ஆசிரியர் அமைதியாகச் சிரித்தார்.

"இல்லை." அவர் தூரத்தே இருந்த மா மரத்தைக் காட்டி

"அந்த மரத்தைப் பாருங்கள்."

"அந்த மரம் அவள் நாட்டியது." மாணவர்கள் அதிர்ச்சியுடன் பார்த்தார்கள்.

“அவள் சொன்னாள்... ஒரு மரம் நட்டால் நான் இல்லாத நாளிலும் அது நிழல் தரும்.” அந்த நேரத்தில் காற்று பலமாக வீசியது. ஆல மரத்தின் இலைகள் சலசலத்தன. முதிய ஆசிரியர் தொடர்ந்தார். “ஒரு காலத்தில் பலர் நினைத்தார்கள் அவள் கதையை யாரும் அறிய மாட்டார்கள் என்று.”

“ஆனால்,

போர் முடிந்த பிறகு

தூர தேசத்தில் இருந்து

ஒரு காணொளி வெளிவந்தது.”

“அதில் ஒரு பெண் உயிருடன் பிடிக்கப்பட்டிருந்தாள்.” மங்கை மெதுவாகச் சொன்னாள். “சோபனா...” ஆசிரியர் தலை அசைத்தார்.

“ஆம்.”

“அவள் தான்.”

“பின்னர் மற்றொரு படம் வெளிவந்தது.”

“அதே முகம்.”

“ஆனால்,

இப்போது

அவள் பேசவில்லை.” மாணவர்கள் எல்லோரும் அமைதியாக இருந்தார்கள். ஆசிரியர் மெதுவாகச் சொன்னார்.

“அந்த நாளில் பலர் நினைத்தார்கள் அவள் கதை முடிந்துவிட்டது என்று... “ஆனால் அவர்கள் ஒரு விடயத்தை மறந்து விட்டார்கள்.” “சில கதைகள் ஒரு மனிதன் இறுதித் தொடரில் இருந்து ஆரம்பிக்கும்.”

பலமாகக் குயில் ஒன்று கூவியது. ஆலமரத்தின் இலைகள் அப்போதும் சலசலத்தன. முதிய ஆசிரியர் மெதுவாக சொன்னார்.

“ஒரு நாள் உலகம் நீதியைப் பற்றி பேசும்போது...” “ஒரு பெயர் மீண்டும் மீண்டும் வரும்.” அவர் கண்களை மூடி சொன்னார். அந்தப் பெயர் எல்லோர் மனதிலும் ஒரு விடயத்தை பதிவு செய்யும்.

“இசைப்பிரியா.” மாணவர்கள் அந்தப் பெயரை மனதில் மீண்டும் மீண்டும் சொன்னார்கள். அந்த மங்கிய பொழுதில் ஆலமரத்தின் கீழ் ஒரு உண்மை மீண்டும் உயிர்த்தது. சில குரல்கள் கொல்லப்பட்டாலும்... அவை வரலாற்றாகி மீண்டும் பேசத் தொடங்கும்.
அவள் பெயர் இன்னும் பேசப்படுகிறது.

இசைப்பிரியா - ஒரு மௌனத்தின் இசை

மாலை ஏழு மணிக்குப் பிறகு
திரையில் தோன்றும் ஒரு குரல் –
அது வெறும் செய்தி அல்ல,
ஒரு மண்ணின் துடிப்பு.

மென்மையான குரலில்
மக்களின் கதையை வாசித்தாய்
ஒவ்வொரு சொல்லும்
ஒரு இனத்தின் நெஞ்சைத் தொட்டது.

ஒருநாள் கடலின் காற்றில்
போராளியாக நடந்தவள் நீ,
பின்னர் மைக்கின் முன் நின்று
ஒரு தேசத்தின் குரலானாய்.

உன் பெயர் முதலில்
“இசை அருவி” என ஓடியது—
ஆனால் உலகம்
“இசைப்பிரியா” என அழைத்தது.

கண்களில் மென்மை இருந்தது,
இதயத்தில் தீ இருந்தது;
சொற்களில் தமிழ் இருந்தது,
உயிரில் ஒரு கனவு இருந்தது.

திரையில் வாசித்த செய்தி
இன்று வரலாறாகி விட்டது;
ஆனால் உன் குரல் மட்டும்
காலத்தின் நினைவில் இன்னும்
ஒலிக்கிறது.

நிசப்தமான இரவுகளில்
காற்று கூட சொல்லும்
“ஒரு குரல் இருந்தது
அது ஒரு இனத்தின் இசை” என்று.

அந்த இசை
இன்று நின்றுவிடவில்லை...
மண்ணின் நினைவில்
அது இன்னும் ஓடிக்கொண்டே இருக்கிறது.



மெதுவான மரணம்

"என் பெயரை எழுதாதீர்கள்,"

அவர் மெதுவாகச் சொன்னார். அந்த வார்த்தை காற்றில் எதிரொலித்தது. அவர் சிரிக்கவில்லை. ஆனால், அந்தச் சிரிக்காத முகத்தில் ஒரு நீண்ட வரலாறு மண்டியிருந்தது.

"என்னை எல்லோரும் மறந்துவிட்டார்கள்... ஆனால், நான் இன்னும் அந்தப் போரிலிருந்து வெளியே வரவில்லை."

அவரை இங்கே அருள் என்று அழைக்கலாம். வடக்கிலுள்ள ஒரு சிறிய கிராமத்தின் ஓரத்தில் ஒரு குறுகிய வீடு. வீட்டின் முன் ஒரு பழைய நாற்காலி. அந்த நாற்காலியில் அருள் பெரும்பாலும் அமைதியாக அமர்ந்து இருப்பார்.

அவர் கடலைப் பார்க்கவில்லை. வானத்தையும் பார்க்க வில்லை. அவர் பார்த்துக் கொண்டிருப்பது கடந்த காலத்தை.

ஒரு காலத்தில் அருள் கையில் ஆயுதம் இருந்தது. அப்போது அவரது கண்களில் பயம் இல்லை. இன்று அவரது

கையில் ஆயுதம் இல்லை. ஆனால், அவரது உடலில் போர்த்தழும்புகள் இன்னும் உள்ளன. போரின் கடைசி நாட்களில் அருள் காயமடைந்தார்.

மண்

புகை

சத்தம்

கத்தல்கள் அவை எல்லாம் அவரது நினைவுகளில் இன்னும் இருக்கின்றன. பின்னர் அவர் ஆயிரக்கணக்கானவர்களுடன் ஒரு தடுப்பு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டார். அந்த இடத்தை நினைத்தாலே அவர் சில நொடிகள் ஊமையாகி விடுவார்.

“அங்கே நடந்தது முழுவதையும் சொல்ல முடியாது,” என்று அவர் மெதுவாகச் சொன்னார்.

“ஆனால், அந்த நாட்கள் என் உடலை மட்டும் இல்லை... என் உள்ளத்தையும் உடைத்துவிட்டது.” முகாமிலிருந்து வெளியே வந்த நாள் அருள் நினைத்தார் வாழ்க்கை மீண்டும் தொடங்குமா என்று.

ஆனால் , சில வாழ்க்கைகள் ஒரு குறிப்பிட்டநாளில் நிறுத்தப்பட்டு விடுகின்றன. அதற்குப்பிறகு நேரம் மட்டும் நகரும். இன்று அருள் வேலை செய்ய முடியாது. போரில் ஏற்பட்ட காயங்கள் அவரது உடலில் மௌனமாக வாழ்கின்றன.

சில நாட்களில் அவர் நடக்கக்கூட முடியாது இருந்தது. சில நாட்களில் அவர் முழு இரவும் தூங்க முடியாது இருந்தது. உடலின் வலி அவரை மெதுவாக தின்று கொண்டிருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு மருத்துவர்கள் இன்னொரு செய்தியையும் சொன்னார்கள்.

“புற்றுநோய்.”

அந்த வார்த்தை

அவரது வாழ்க்கையில்

இன்னொரு போரின் கதவைத் திறந்தது.

“மருத்துவமனைக்குப் போக வேண்டும்,” அவர் சொல்கிறார்... போனால் யார் செலவு செய்யப் போகிறார்கள்?” அந்தக் கேள்விக்கு அவரிடம் பதில் இல்லை. உலகத்திடமும் இல்லை. அருள் தனியாக இல்லை. அவரைப் போல பலர் இருக்கிறார்கள். உடலில் காயங் களுடன். மனதில் போருடனும்...

சிலர் இன்னும் இரவில் திடீரென்று விழித்துக்கொள்கிறார்கள். சிலர் அமைதியைக்கூடப் பயத்தோடு எதிர்கொள்கிறார்கள். சமூக வலைத் தளங்களில் சில நேரங்களில் ஒரு செய்தி வருகிறது.

“முன்னாள் போராளி ஒருவர் மரணமடைந்தார்.” அந்தச் செய்தி சில மணி நேரம் மக்களின் கண்களில் தங்கி பின்னர் மறைந்து விடுகிறது. ஆனால் அந்தச் செய்தியின் பின்னால் ஒரு நீண்ட கதை உள்ளது.

அது... ஒரு மனிதனின் மரணம் மட்டும் அல்ல.

அது... ஒரு தலைமுறை மெதுவாக மறைந்து கொண்டிருக்கும்

அமைதியான சாட்சியம்.

ஒரு நாள் அருள் என்னிடம் ஒரு வாக்கியம் சொன்னார்.

அது... அவரது வாழ்க்கையின் முழு சுருக்கம் போல இருந்தது.

“போரில் நான் இறந்திருந்தால் அது ஒரு நாளில் முடிந்திருக்கும்.”

அவர் சிறிது நேரம் அமைதியாக இருந்தார். பின்னர் மெதுவாகச் சொன்னார்:

“ஆனால் இப்போது நான் ஒவ்வொரு நாளும் மெதுவாக இறந்து கொண்டிருக்கிறேன்.” உலகம் போர் முடிந்தது என்று சொல்லலாம். ஆனால், சில போர்கள் போர்க்களத்தில் முடிவதில்லை. அவை மனிதர் களின் உடல்களில் நினைவுகளில் நிசப்தமான இரவுகளில் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

அருள் இன்னும் அந்த நாற்காலியில் உட்கார்ந்தேதான் இருக்கிறார். காற்று வீசுகிறது. மாலை தன்னை மறைத்துக் கொள்கிறது. ஆனால் நான் அந்த நாற்காலியைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அப்போதுதான் எனக்கு ஒரு உண்மை புரிந்தது. அருள் மட்டும் இறப்பை நோக்கிச் செல்லவில்லை அவருடன் சேர்ந்து ஒரு தலை முறையின் சாட்சியமும் அல்லவா அமைதியாகச் செல்கிறது...

அவர் எதுவும் பேசவில்லை. ஆனால், அவரது அமைதி ஒரு கேள்வியை மட்டும் கேட்கிறது:

"மறக்கப்பட்ட மனிதர்களின் காயங்கள் ஒருநாள் உண்மையாகக் குணமாகுமா" என்பதாக...

நிழலின் வலி

"போரின் வெளிச்சத்தைக் கடந்து,
மண்ணின் துடிப்பில் நின்றோர் தோழர்கள்,
திடீரென சுமந்தனர் உயிரின் கனிகள்.
வார்த்தைகளும் மறைந்து,
மௌனத்தின் அலை போல காத்திருந்தது சந்தேகம்...

ஒவ்வொரு உறையும் சிதறி விழுந்தது, கண்கள் கண்ட குரல் முடியது;
அவைகள் உயிரின் வாசலுக்குள் நுழைந்தன,
ஆனால் விளக்கம் வெறும் நிழலாய் உளுந்தது.

உயிர் முடிந்த இடம், பூமி பேசும் மொழி,
வீணான நம்பிக்கையின் சப்தம் "இது தற்காலிகமா?
இது இயல்பா?" என்று கேட்கும் சோகம் நம்மைத் துரத்தியது.

விசம் தன்னால் பேசினதா?
அல்லது காலம் கடந்து சென்ற நேரம் சொன்னதா?
தோழர்களின் நினைவுகள் நெஞ்சில் நிமிர்ந்தன;
கடந்த காலத்தின் ஒலி நாமும் கேட்டோம்,
ஆனால் பதில் மறைந்திருந்தது.

இன்று கூட அந்த சந்தேகம் மண்ணின் வாசலில் ஊர்ந்து
மௌனமாகவும், வெள்ளை நிழலாகவும்
நம் நினைவில் ஓங்கிக்கொண்டு இருக்கிறது..."



வடக்குக் கடலின் உப்பு மணத்தைத் தாங்கிய காற்று. அடிக்கடி வந்து மண்ணைத் தொட்டுச் சென்றது. அது பளை எனும் கிராமம். தென்னஞ் சோலைகள் நீண்டிருக்க, நிழலை விரித்துக் காத்திருக்கும் பசுமை நிலம். வானத்தை நோக்கி காவலர்களைப்போல உயர்ந்து நிற்கும் பனை மரங்கள். காலைப்பொழுதில் கடலிலிருந்து வரும் காற்று, அந்த இலைகளை அசைக்கும் சத்தம், அது மண்ணின் பழைய நினைவுகளை மெதுவாகப் பேசும். ஒரு மொழிபோல ஒலிக்கும்.

அந்தக் கிராமத்தில் பிறந்தவன் கயன். அவன் வாழ்ந்த உலகம் மிகச் சிறியது

ஒரு களிமண் வீடு,

ஒரு மணற் தெரு,

ஒரு பள்ளிக்கூட மணி,

மற்றும் ஒரு நண்பன்.

அந்த நண்பன் கனி.

கனி மற்றும் கயனுக்கு 10 வயது, இருவரும் நான்கு வயதில் முதன் முதலாகப் பள்ளிக்குச் சென்றார்கள். அந்த நாளில் இருந்து அவர்கள் ஒருபோதும்

தலை இழந்த பனை மரங்களின் கீழ்

தனித்திருக்கவில்லை. பள்ளிக்கூடத்தின் பழைய மர மேசையில் அவர்கள் இருவரும் பக்கத்தில் அமர்ந்திருப்பார்கள்.

கயன் மெதுவாக எழுதிக் கொண்டிருப்பான். கனி அவற்றை சிரித்த படியே பார்த்துக் கொண்டிருப்பான். மதிய வேளையில் அவர்கள் மைதானத்தில் ஓடுவார்கள். மாமர நிழலில் உட்கார்ந்து பழுத்த மாம்பழங்களைப் பகிர்ந்து சாப்பிடுவார்கள்.

கயன் ஒருநாள் கேட்டான்.

“நாம் பெரியவர்கள் ஆன பிறகு என்ன ஆகப் போறோம்?”

கனி சிரித்தான்.

“நாம் பெரியவர்களாக மாட்டோம்... நாம் இதுபோலத்தான் இருப்போம்.”

அந்த சில வார்த்தைகளின் அர்த்தம் அவர்களுக்குத் தெரியாது. ஆனால், ஒருநாள் காலம் திடீரென்று அவர்கள் மேல் விழுந்தது. போர் அந்த நிலத்தைத் தொட்டது. முதல் முதலில் வானத்தில் ஒரு கரகரப்பு. பிறகு தூரத்தில் வெடிக்கும் ஒலி. பின்னர் ஓடும் மக்கள். “இங்கிருந்து போகணும்...” என்று பெரியவர்கள் சொன்னார்கள். அந்த இரவு பளைக் கிராமம் மெதுவாகக் காலியானது.

கயனும் கனியும் தங்கள் குடும்பங்களோடு இடம்பெயர்ந்தார்கள். ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடம். ஒரு மண்ணிலிருந்து இன்னொரு மண். பிளாஸ்டிக் தாள்களால் மூடிய கூடாரங்கள். மழை வந்தால் கசியும் கூரைகள். ஆனால், அந்த எல்லாவற்றையும் தாண்டி...

ஒரு விஷயம் மட்டும் மாறவில்லை.

அவர்கள் நட்பு.

சில நேரங்களில் அவர்கள் மண்ணில் ஒரு கோடு இழுப்பார்கள்.

“இது எங்கட பள்ளி,” என்று கயன் சொல்வான். கனி ஒரு சதுரம் வரைந்து காட்டுவான். “இது நம்ம மேசை.” அவர்கள் அந்த சதுரத்தின் அருகே அமர்ந்து சிரிப்பார்கள். அந்த சிரிப்புகள்.. போரின் நடுவே இன்னும் உயிருடன் இருந்த குழந்தைப் பருவத்தால் ஆனது.

நாட்கள் நகர்ந்தது... இடப்பெயர்வும் கூடவே நகர்ந்தது... நாட்கள் மாதமாக மாதங்கள் வருடமாக

ஒரு காலை....

வான்வெளி மிகவும் அமைதியாக இருந்தது. அந்த அமைதிக்குள் திடீரென்று ஒரு இரும்புச் சத்தம் உடைந்தது.

விமானம். அது வட்டமிட்டுச் சுழன்றது. கயன் மேலே பார்த்தான்.

“கனி... அது என்ன?” கனி பதில் சொல்ல முயன்றான். அதே கணத்தில் வானம் அதிர்ந்தது.

ஒரு குண்டு. பூமி குலுங்கியது. மண் துகள்கள் வான வெளியை மறைத்தது. புகை எல்லாவற்றையும் மூடியது. சில நொடிகள் உலகமே இல்லாததுபோல இருந்தது. கயன் மெதுவாகக் கண்களைத் திறந்தான். அவன் காதுகளில் இன்னும் சத்தம் முழங்கிக் கொண்டிருந்தது. சுற்றிலும் அழுகுரல்கள்.

அவன் முதலில் தேடியது கனியை.

“கனி!”

அவன் கத்தினான். மீண்டும் கத்தினான். பின்னர் அவன் பார்வை சாலையின் ஓரத்தில் விழுந்தது. அங்கே ஒரு சிறிய உடல் சுருண்டு கிடந்தது. அது கனி. கயன் ஓடிச்சென்றான். அவன் நண்பனைத் தூக்க முயன்றான். அப்போதுதான் அவன் பார்த்தான். கனியின் தலை தொங்கியது.

ஒரு கணம் கயனின் உலகம் நின்றுபோனது. அவன் புரிந்து கொள்ளவில்லை. அவன் உடலைத் தழுவிக்கொண்டான்.

“எழு... கனி... நாம் பள்ளிக்குப் போகணும்....” பதில் இல்லை. அவன் உடலை அசைத்தான்.

மண் மட்டும் விழுந்தது. கயன் திடீரென்று அழ ஆரம்பித்தான். அவன் அந்த உடலைத் தழுவிக்கொண்டு சாலையோரத்தில் உட்கார்ந்தான். அவன் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது.

அந்த மண்

அந்த நாளில்

ஒரு குழந்தையின் உலகத்தை குடித்துக் கொண்டது. மக்கள் ஓடிக் கொண்டே இருந்தார்கள். யாருக்கும் நிற்க நேரமில்லை. ஒரு வயதான மனிதர் அருகே வந்து கேட்டார்.

“பெடியா....! நீ யாரோட வாறாய்?”

கயன் தலை தூக்கிப் பார்த்தான்.

அவன் மெதுவாக சொன்னான்.

“நான் போக மாட்டேன்....”

“ஏன்?”

அவன் கண்ணீர் வழிந்த முகத்தோடு சொன்னான். “அவன் எழுந்தால் தான்.... நான் இல்லேன்னா அவன் பயப்படுவான்....”

சிரிப்பும் பழைய கதைகளும் அவனைப் பின்தொடர்ந்து வலியை விதைத்தன. மாறாத நினைவுகளுக்கு நடுவே வவுனியாவில் தன் கல்வியைத் தொடர்ந்தான்.

பல ஆண்டுகள் கடந்தன.

மீள சூரிய ஒளியும் காற்றின் சப்தமும் அவன் தனிமையை வெளிப் படுத்தின. வடக்குக் கடலின் காற்று இன்னும் பளைக் கிராமத்தைத் தழுவுகிறது. வகுப்பறையின் வெளியே பனை, மரங்கள் இன்னும் இருந்தன.

ஆனால்....

அவை முன்புபோல் இல்லை. போர் அவற்றையும் விட்டுவைக்க வில்லை. பல பனைமரங்கள் ஆங்காங்கே “தலை இழந்து” காயம் தாங்கிய காவலர்களைப் போல நிசப்தமாக நின்றன.

கயன் அவற்றைப் பார்த்தான். அந்த காட்சியில் அவன் தன் நண்பனை மீண்டும் பார்த்தான். அவன் மெதுவாக மண்ணைத் தொட்டான். பழைய பள்ளிக்கூடத்தின் இடிபாடுகளுக்குள் ஒரு பழைய மரமேசை ஓரத்தே இன்னும் கிடக்கிறது. பிறகு அவன் மெதுவாகச் சொன்னான்:

“கனி...

நாம் இன்னும் அதே மேசையில்தான் இருக்கிறோம்.”

அந்த மேசையின் கீழே யாரோ குழந்தை எழுத்தால் கீறியிருக்கிறது:

“கனி... கயன்”

அந்த எழுத்தை ஒருநாள் ஒரு பெரிய மனிதன் பார்த்தான். அவன் கையை.. அந்த எழுத்தின் மீது வைத்தான். அவன் கண்களில் நீர் நிரம்பியது.

ஏனெனில், அந்த மனிதன் தான் கயன்... அவன் மெதுவாக அந்த மேசையைத் தடவினான். பின்னர் அவன் மெதுவாகச் சொன்னான்.

“நான் வந்துட்டேன்... கனி.”

காற்று பனை இலைகளை அசைத்தது. அந்த சப்தம் ஒரு பழைய நண்பன் தூரத்திலிருந்து சிரிப்பதுபோல இருந்தது. அந்த மாலை கயன் அந்தப் பள்ளிக்கூடத்திலிருந்து வெளியே நடந்தான். ஆனால், அவனுடைய சிறுவர் பருவம்... அந்த மேசையின் கீழே இன்னும் உட்கார்ந்து கொண்டே இருந்தது.

மௌனத்தின் குப்பி



இரவு மெதுவாக இறங்கியிருந்தது. காற்றுக்கூட அச்சத்துடன் நகர்ந்தது போல இருந்தது. மரங்களின் இலைகள் ஒன்றை ஒன்று தொடும் ஒலி கூடப் போரின் இரவுகளில் வேறொரு அர்த்தம் கூறியது.

அந்த இரவின் மையத்தில் ஒருவன் அமைதியாக நின்றான்.

அவன் பெயர் புரட்சி.

அவன் ஒரு மனிதன் மட்டுமல்ல.

ஒரு போராளி.

அவன் கழுத்தில் தொங்கியது ஒரு சிறிய கண்ணாடிக் குப்பி.

அது வெறும் குப்பி அல்ல.

அது ஒரு முடிவு.

ஒரு எல்லை.

ஒரு மௌன சத்தியம்.

“உயிரோடு பிடிபடமாட்டோம்.” போராளிகள் அந்தக் குப்பியைப் பெற்ற நாள் அவர்களின் வாழ்க்கையே மாறிவிடும்.

புரட்சிக்கு அந்த நாள் இன்னும் நினைவில் இருந்தது.

மழை நனைத்த மண்.

பயிற்சி முகாமின் நடுவில் வரிசையாக நின்ற இளைஞர்கள். ஒரு மூத்த போராளி அவர்களை நோக்கி மெதுவாகச் சொன்னார்:

“இந்தக் குப்பி மரணத்துக்காக அல்ல.

மரியாதைக்காக.” அந்த நாளிலிருந்து அந்தக் குப்பி அவனுடைய உயிரின் நிழல் போலவே இருந்தது.

போர்க்களத்தில் மனிதனை உயிரோடு வைத்திருப்பது ஆயுதங் களின் சக்தி அல்ல; அவனுடன் அருகில் நிற்கும் நண்பர்களின் துணிச்சலும் நம்பிக்கையும் தான்.

புரட்சியுடன் வேவுப் பணியில் இருந்தவர்கள் வேங்கை, மாறன், கதிர் ஒரு மாலை கதிர் சிரித்துக்கொண்டு கேட்டான்:

“நம்மில் யார் முதலில் குப்பி கடிப்போம்?” அவர்கள் எல்லோரும் சிரித்தார்கள். ஆனால் அந்தச் சிரிப்புக்குள் ஒரு பயம் இருந்தது. அந்தக் கேள்விக்கு யாரும் பதில் சொல்லவில்லை. ஏனெனில் அந்தப் பதிலை யாரும் கேட்க விரும்பவில்லை.

போர் கடுமையாகக் கொழுந்துவிட்டிருந்தது. ஆனந்தபுரத்தை நோக்கி விடுதலைப் புலிகளின் நகர்வுகள் பெரும் திட்டமிடலோடு முன்னேறிக் கொண்டிருந்தது. நிலத்தை மீட்டெடுக்க வேண்டுமென்ற தீர்மானத்துடன் அவர்கள் நகர்ந்த அந்த நாட்களில், ஒவ்வொருநாளும் வரலாற்றின் ஒரு புதிய பக்கமாக மாறிக்கொண்டிருந்தது.

ஆனந்தபுரம்.

அந்தப் பெயர் “ஆனந்தம்” என்று பொருள் கொண்டிருந்தாலும் அந்த நாளில் அந்த நிலம் போரின் நெருப்பில் மூழ்கியிருந்தது.

வானம் முழுவதும் துப்பாக்கிச் சத்தம். மண் முழுவதும் புகை. புரட்சி தனது துப்பாக்கியை இறுக்கமாக பிடித்தான்.

“நாம் உடையக்கூடாது.” போர் சில மணி நேரங்கள் நீண்டது. பின்னர் அவர்கள் உணர்ந்தார்கள்.

அது ஒரு சுற்றுவளைப்பு.

காயங்கள், கதிர் தரையில் விழுந்தான்.

அவன் காலில் இரத்தம் பெருகியது. அவன் கையில் இருந்த குப்பியை நெருங்கிப் பிடிக்க முயன்றான்.

புரட்சி அவன் கையைப் பிடித்தான்.

“இல்லை.”

“இன்னும் இல்லை.”

வேங்கையும் காயமடைந்தான்.

மாறனால் பேச முடியவில்லை. அவர்கள் அனைவரும் தங்கள் குப்பியை நோக்கி கையை நீட்டினர். ஆனால் புரட்சி அவர்களைத் தடுத்தான்.

“நாம் இன்னும் உயிரோடு இருக்கிறோம்.”

அது ஒரு கட்டளை அல்ல. ஒரு வேண்டு கோள்.

நான்கு முனைச் சமர் புரட்சியின் துப்பாக்கியில் இருந்த ரவைகள் ஒன்றன் பின் ஒன்றாக முடிந்தன.

ஒவ்வொரு ரவையும் ஒரு உயிரைக் காப்பாற்றும் முயற்சி. ஒரு சற்று நேரத்தில் அந்த துப்பாக்கி அமைதியாகி விட்டது.

ரவைகள் முடிந்துவிட்டன. சுற்றிலும் இராணுவம். புரட்சியுடன் இருந்த போராளிகள் ஒருவரை ஒருவர் பார்த்தனர். அந்தப் பார்வையில் ஒரே ஒரு எண்ணம்:

“உயிரோடு பிடிபடக்கூடாது.”

தப்பிக்க..., போரின் குழப்பத்தில் ஒரு சிறிய இடைவெளி தோன்றியது. அந்த இடைவெளியில் அவர்கள் ஓடினர். மண்ணும் புகையும் இரத்தமும் கலந்த பாதையில்.

புரட்சி தனது கழுத்தில் இருந்த குப்பியைத் தொட்டான். அது இன்னும் அங்கே இருந்தது.

ஒரு முடிவுக்காகக் காத்திருந்தது.

சில நேரம் கழித்து அவன் போர்க்களத்தின் வெளியே வந்தான். அவன் முன்னால் இருந்த காட்சி அவன் வாழ்நாளில் மறக்காத வொன்று.

அந்த மண் குப்பிகளால் நிரம்பியிருந்தது.

சிறிய கண்ணாடிக் குப்பிகள். அதில் சில உடைந்தவை.

சில இன்னும் முழுமையாக இருந்தவை.

அந்த மண்ணில் பல போராளிகள் உயிரை விட்டிருந்தனர்.

சிலர் காயங்களால்.

சிலர் தங்கள் குப்பியை கடித்து. அந்த நிலம்

ஒரு போர்க்களம் அல்ல.

ஒரு மௌன நினைவிடம்.

இறுதியில்....

புரட்சி மெதுவாக மண்ணில் மண்டியிட்டான். அவன் தனது கையில் இருந்த குப்பியை எடுத்தான். அதைக் கடிக்கவில்லை.

அதை அந்த மண்ணில் வைத்தான். பின்னர் அந்த மண்ணைக் கைப்பிடியில் எடுத்தான். அதை தனது நெற்றியில் தொட்டான். அவன் மெதுவாகச் சொன்னான்:

“இந்த மண் தோற்கவில்லை.”

அந்த மண் அமைதியாக இருந்தது. ஆனால் அந்த அமைதிக்குள் ஒரு முழக்கம் இருந்தது.

அது விழுந்த போராளிகளின் குரல்.

அது நினைவுகளின் குரல். அது வரலாற்றின் குரல்.

இன்று

சிலர் புரட்சியிடம் வந்து...

“நீ ஏன் குப்பி கடிக்கவில்லை?”

என்று கேட்கிறார்கள்.

அவன் கோபப்படுவதில்லை. ஏனெனில், அவர்கள் அந்த மண்ணில் நடந்தவர்கள் அல்ல. அவர்கள் ஒரு நண்பனின் மரணத்தை பார்த்தவர்கள் அல்ல. அவர்கள் ஒரு தாய் தன் மகனின் உடலைத் தேடி அழுத குரலைக் கேட்டவர்கள் அல்ல.

போர் என்பது ஒரு கதையல்ல;

போர் என்பது மண்ணில் விழும் உயிர்களின் சத்தம். அந்தச் சத்தம் இன்னும் அவன் காதுகளில் ஒலிக்கிறது. ஆண்டுகள் கடந்தும் அந்த சத்தம் குறையவில்லை.

சில நேரங்களில் இரவு மிகவும் அமைதியாக இருக்கும். அந்த அமைதிக்குள் கூட அவன் போரின் சத்தத்தைக் கேட்கிறான். அவன் மட்டும் கேட்கும் அந்த சத்தம் ஒரு விஷயத்தை நினைவூட்டுகிறது.

இந்த மண்ணில் ஒருகாலத்தில் உயிர்கள் விதையாக விழுந்தன. அதனால்தான் அவன் இன்னும் உயிருடன் இருக்கிறான். பயத்தால் அல்ல, சாட்சியாக.

ஏனெனில் மண்ணில் விழுந்தவர்களின் குரல் மண்ணுக்குள் புதையக் கூடாது. அது யாரோ ஒருவரின் நினைவில் உயிரோடு இருக்க வேண்டும். அவன்தான் அந்த மனிதன் . ஆனால் சில இரவுகளில் அவன் நினைக்கிறான்.

“நான் உயிரோடு இருக்கிறேன் என்று.

ஆனால், உண்மையில் நான்கூட அந்த மண்ணிலேயே விழுந் திருந்தால்?” அந்தக் கேள்விக்குப் பதில் அவனுக்கே தெரியவில்லை. ஏனெனில், அந்த இரவுகளின் மௌனத்தில் ஒரு மனிதன் மட்டும் அல்ல;

ஒரு முழுக் காலம் மண்ணுக்குள் இருந்து இன்னும் பேசிக் கொண்டே இருக்கிறது. ஏனெனில், மண்ணில் விழுந்தவர்களின் குரல் மண்ணுக்குள் புதையக்கூடாது. அது உயிரோடு இருக்க வேண்டும். அதற்காகத்தான் அவன் இன்னும் உயிருடன் இருக்கின்றான்.

குப்பி

கனிந்த இரவில்,
சுட்ட மின்னல் போல,
சைனட் குப்பி மண்ணில் மறைந்ததுஃ
தோழர்கள் விழுந்த உயிரின் நிழல்,
தரையில் சிதறி,
நெஞ்சில் வேதனையாக உலவும்.
அழுகை மறைந்த கதைகள்
பேசாமல் நின்றாலும்,
மௌனம் கூட நம் இதயத்தில்
தீயாய் தீபமாய் எரிகிறது.



ஆலமர நிழலில்

LDITலை மெதுவாக நிலத்தின் மீது இறங்கிக் கொண்டிருந்தது. மூல்லை நிலத்தின் காற்று அந்தப் பள்ளி வளாகத்தை மெதுவாகத் தொட்டுச் சென்றது. நாள் முழுவதும் வெயிலில் வெப்பம் ஏந்தி யிருந்த மண் இப்போது குளிர்ச்சியை ஏற்றுக்கொள்ளும்போல் இருந்தது. தூரத்தில் மாடுகளின் மணியொலி கேட்டது. இன்னும் தூரத்தில் கோயில் மணி மெதுவாக கேட்டுக் கொண்டிருந்தது.

பள்ளியின் நடுவே பரந்து நின்றிருந்த அந்தப் பெரிய ஆல மரம் அந்த மாலை வெளிச்சத்தில் ஒரு பழமையான காவலனைப் போலத் தோன்றியது. அது ஒரு மரம் மட்டும் அல்ல; ஒரு காலத்தின் நினைவு. ஒரு நிலத்தின் அமைதி. ஒரு மொழியின் நீண்ட மூச்சு.

அதன் கிளைகள் வானத்தை நோக்கி விரிந்திருந்தன. அதன் வேர்கள் மண்ணின் ஆழத்தில் இறங்கி அந்த நிலத்தின் கதைகளைப் பற்றிக் கொண்டிருந்தது.

அது பள்ளியின் அதிகாரபூர்வமான வகுப்பறை அல்ல; ஆனால், அந்த நிழலில் பேசப்பட்ட வார்த்தைகள் பல புத்தகங்களைவிட நீண்ட நாட்கள் வாழ்ந்தன.

அந்த மரத்தின் நிழல், ஒரு சிறிய உலகம்.

அந்த நிழலில்தான் ஒவ்வொரு மாலையும் சில மாணவர்கள் கூடுவார்கள். மங்கை தனது புத்தகத்தை மார்பில் அழுத்திக்கொண்டு வந்தாள். குயிலி எப்போதும்போல ஓடிக்கொண்டே வந்து ஆலமர வேரில் உட்கார்ந்தாள். மலர்விழி அமைதியாக ஒரு பக்கம் நின்றாள். இனியவன் தன் தோளில் பையை தூக்கிக்கொண்டு பின்னால் வந்தான். அவர்கள் எல்லோரும் ஒரே நேரத்தில் அந்த பாதையை நோக்கிப் பார்த்தார்கள். வெள்ளைச் சேலையில் மெதுவாக நடந்து வந்தார் அவர்களின் ஆசிரியர்.

அவரின் பெயர் தேவமணி.

ஆனால், பள்ளியில் யாரும் அந்தப் பெயரைச் சொல்லவில்லை. அவரை எல்லோரும் ஒரே பெயரில் அழைத்தார்கள்.

“தமிழ் அன்னை.”

அவர் தமிழ் இலக்கியம் கற்பிப்பார். தமிழ் வரலாறு பேசுவார். சில நேரங்களில் கிறிஸ்தவ வரலாறையும் சொல்லுவார். ஆனால், அவர் கற்றுக் கொடுத்த மிகப் பெரிய பாடம் பாடநூல்களில் இல்லை.

அது... மனிதன் பிறருக்குள் வாழ்வது எப்படி என்பது.

அந்த நாள் அவர் கையில் ஒரு பழைய புத்தகம் இருந்தது. அந்த புத்தகத்தின் பக்கங்கள் பழுப்பு நிறமாக மாறியிருந்தன. அவர் ஆல மரத்தின் கீழ் நின்றார்.

“இன்று நாம் ஒரு கவிதை பற்றிப் பேசலாம்...” என்று மெதுவாகச் சொன்னார். அவரது குரல் மாலை காற்றைப்போல மென்மையாக இருந்தது. மாணவர்கள் அமைதியாக உட்கார்ந்தார்கள். ஆனால், அந்த மாலை ஏதோ மாறுபட்டது.

ஆனால், அந்த நாளில் மலர்விழி பேசவில்லை. குயிலி கூட வழக்கம் போல் சிரிக்கவில்லை. மங்கை மட்டும் மெதுவாகக் கேட்டாள்:

“அம்மா...

ஒரு கேள்வி கேக்கலாமா?”

ஆசிரியர் சிரித்தார்.

“கேள் மங்கை.”

மங்கை தயக்கத்துடன் கேட்டாள்:

“அம்மா.... நீங்க தனியாகத்தான் வாழுறீங்களா!.. உங்களுக்குப் பயம் வராதா?” அந்தக் கேள்வி ஆலமர நிழலில் மெதுவாகத் தங்கியது. சில நொடிகள் யாரும் பேசவில்லை. ஆசிரியர் தரையைப் பார்த்தார். அந்த மாலையில் வானம் மெதுவாக இருட்டிக் கொண்டிருந்தது. அவர் மெதுவாகச் சொன்னார்:

“ஒரு காலத்தில்... எனக்கு ஒரு தம்பி இருந்தான்.” மாணவர்கள் அமைதியாகக் கேட்டார்கள்.

“அவன் எப்போதும் சிரிக்கும் பையன். என்னிடம் நிறைய கேள்விகள் கேட்பான்.” அவர் சிறிது நேரம் அமைதியாக இருந்தார்.

“ஒரு நாள்அவன் கொழும்புக்குப் போனான்.” அவர் அந்த வார்த்தையை மெதுவாகச் சொன்னார்.

“அவன் திரும்பி வரவில்லை.”

ஆலமர இலைகள் காற்றில் படபடத்தன. அவர் தொடர்ந்து சொன்னார்.

“என் குடும்பம் வடக்கில் இருந்தது.” அவரது குரல் மெதுவாக மாறியது.

“ஒரு நாள் ஒரு பெரிய குண்டு விழுந்தது.” அவர் அதற்கு மேல்

எதுவும் சொல்லவில்லை. ஆனால், அந்த வார்த்தையின் பின்னால் ஒரு காலத்தின் இருள் இருந்தது. மாணவர்கள் புரிந்துகொண்டார்கள்.

மலர்விழியின் கண்களில் கண்ணீர் தெரிந்தது. அவருக்கு இப்போது யாரும் இல்லை. அப்போது இனியவன் மெதுவாகக் கேட்டான்.



“அப்போ அம்மா... நீங்க எப்படி தனியா இருக்கிறீங்க?”

ஆசிரியர் அந்த மாணவர்களைப் பார்த்தார். ஒரு நிமிடம் அவர் எதுவும் பேசவில்லை. பிறகு மெதுவாகச் சிரித்தார். அவர் தனது கையை நீட்டி மங்கை, குயிலி, மலர்விழி, இனியவன்... அவர்களை ஒவ்வொருவராகப் பார்த்தார்.

“நான் தனியா இல்லை.” அவர் சொன்னார்.

“நீங்க எல்லாரும் இருக்கிறீங்களே.” அந்த மாலை ஆலமர நிழலில் ஒரு அமைதி குடி கொண்டது.

மாலை மணி அடித்தது. மாணவர்கள் மெதுவாக எழுந்தார்கள். பள்ளி காலியாகத் தொடங்கியது. அவர்கள் செல்லும்போது...

மலர்விழி திரும்பிப் பார்த்தாள். ஆசிரியர் இன்னும் ஆல மரத்தின் கீழ் நின்று கொண்டிருந்தார். அவர் அந்த மரத்தின் வேர்களைத் தொட்டபடி அமைதியாக நின்றார். அதுஒரு மரத்துடன் பேசும் மனிதரைப் போல இருந்தது.

மலர்விழி மெதுவாக மங்கையிடம் சொன்னாள்: “அவங்க உண்மையாவே தனிய இல்லை.” மங்கை கேட்டாள்: “ஏன்?” மலர்விழி ஆலமரத்தைப் பார்த்தாள்.

“ஒரு ஆசிரியர் தன் மாணவர்களுக்குள் வாழ்கின்றார்.” அந்த மாலை ஆல மரத்தின் நிழல் நீண்டது. அந்த நிழலுக்குள் ஒரு பெண் ஆசிரியரின் வாழ்க்கையும் அவரைச் சுற்றி வளர்ந்த குழந்தைகளின் எதிர்காலமும் ஒன்றாகக் கலந்து நின்றது.

ஆண்டுகள் பல கடந்தன.



அந்தப் பள்ளி மாறியது. புதிய கட்டிடங்கள் வந்தன. புதிய தலை முறைகள் வந்தன. ஆனால், அந்த ஆலமரம் இன்னும் நின்றது.

மக்கள் இன்னும் சொல்வார்கள் ஆலமரக் கதையை.

ஒரு நாள்அந்தப் பள்ளிக்கு ஒரு இளைஞன் தன் மகனுடன் வந்தான். அவன் அந்த ஆல மரத்தை நீண்ட நேரம் பார்த்தான். பிறகு அருகில் நின்றான் மகன் கேட்டான்,

“இந்த மரம் ஏன் இவ்வளவு முக்கியம்?”

அவன் சிரித்தார். “இந்த மரத்தின் கீழ் ஒரு ஆசிரியர் இருந்தார்.” “அவர் ஒரு தலைமுறையை வளர்த்தார்.”

மகன் கேட்டான். “அவரை என்ன என்று அழைத்தார்கள்?”

அவன் மெதுவாகச் சொன்னான்.

“தமிழ் அன்னை.” மகன் தமிழ் அன்னை பற்றி வினாவினான் வரலாற்றைச் சொல்ல முனைந்தான் அந்த இளைஞன்...

மாலை காற்று மீண்டும் ஆலமர இலைகளை அசைத்தது. அந்த நிழலுக்குள்ஒரு ஆசிரியரின் வாழ்க்கை, ஒரு தலைமுறையின் நினைவு மற்றும் ஒரு மொழியின் அமைதி இன்னும் வாழ்ந்து கொண்டிருந்தது. அவரை எல்லோரும் இன்னும் ஒரே பெயரில் நினைவு கூருகிறார்கள். “தமிழ் அன்னை.”



இரண்டு நிழல்களின் காத்திருப்பு

LDIலை நேரம் மெதுவாக பூமியின் மீது இறங்கிக் கொண டிருந்தது. சூரியன் தன் இளஞ்சிவப்பு ஒளியை வானத்தின் எல்லை யில் சிதற விட்டபடி மெதுவாக மறைந்து கொண்டிருந்தான். அந்த ஒளி கிளிநொச்சியின் ஓரத்தில் நின்ற ஒரு சிறிய மண் வீட்டின் சுவர்களில் படர்ந்து...,

மண் சுவர்களை ஒரு துக்கமான சிவப்பில் நிறமூட்டியது. அந்த வீட்டின் வாசலில் இரண்டு குழந்தைகள் அமர்ந்திருந்தனர்.

பதினொன்று வயதான கவிதா தரையில் குச்சியால் கோடு களை வரைந்து கொண்டிருந்தாள். அவள் வரையும் கோடுகள் நேராகச் செல்லவில்லை. சில கோடுகள் திடீரென முறிந்தன. சில

கோடுகள் வளைந்து வளைந்து எங்கோ சென்று முடிந்தன. அவள் வரையும் கோடுகளைப் பார்த்தால், அவளுடைய உள்ளத்தின் பாதைகள் போல தோன்றின.

அவளருகில் ஒன்பது வயதான கவின் அமர்ந்திருந்தான். அவன் தரையைப் பார்க்கவில்லை. வீட்டின் முன் நீண்டு செல்லும் அந்த மண் சாலையை நோக்கியபடி இருந்தான்.

ஏனெனில் அவன் இன்னும் நம்புகிறான் – ஒருநாள் அந்தச் சாலையின் வழியே அவர்களின் அப்பா நடந்து வந்து இந்த வீட்டின் கதவைத் தட்டுவார் என்று.

கிராமம் மெதுவாக இருளில் மூழ்கத் தொடங்கியது. தொலைவில் ஒரு மாட்டின் மணி ஒலி, ஒரு வீட்டின் அடுப்பிலிருந்து எழும் புகை, ஒரு குழந்தையின் சிரிப்பு. அனைத்தும் வழக்கம்போல நடந்துகொண்டிருந்தன. ஆனால், இந்த வீட்டில் மட்டும் ஒரு விஷயம் மட்டும் வழக்கம்போல இல்லை.

அப்பா இல்லை.

சில நிமிடங்கள் அமைதியாகக் கடந்தன. பின்னர் கவின் மெதுவாகக் கேட்டான்.

“அக்கா... அப்பா எப்போது வீட்டுக்கு வருவார்?” கவிதாவின் கைகள் நின்றுவிட்டன. அந்தக் கேள்வி அவளுக்குப் புதியதல்ல. ஆனால், ஒவ்வொரு முறையும் அது அவள் இதயத்தைப் புதிதாக கிழிக்கிறது. அவள் தலை குனிந்து சிறிது நேரம் அமைதியாக இருந்தாள். பின்னர் மெதுவாகச் சொன்னாள்.

“ஒருநாள் வருவார்....” அது ஒரு பதில் அல்ல. ஒரு பிரார்த்தனை.

அவர்களின் தந்தை அருள்.

ஒரு காலத்தில் அவர் இந்த கிராமத்தில் வாழ்ந்த ஒரு சாதாரண மனிதர். காலை எழுந்து வயலுக்குச் செல்வார். மாலை வீடு திரும்பும் போது குழந்தைகளுக்கு ஏதாவது கொண்டு வருவார்.

சில நேரம் பழம். சில நேரம் ஒரு சிறிய இனிப்பு. சில நேரம் வெறும் சிரிப்பு. அந்த சிரிப்பே அந்த வீட்டின் ஒளி. ஆனால், ஒரு நாள்... அந்த ஒளி திடீரென அணைந்தது. அருள் சந்தேகத்தில் கொழும்பில் வைத்து கைதுசெய்யப்பட்டார். அந்த நாளைக் கவிதா இன்னும் மறக்கவில்லை. நாட்கள் கடந்தன...

வீட்டின் முன் சிலர் நின்றிருந்தார்கள். அவர்களின் குரல் கடுமையாக இருந்தது. அந்த குரலில் மனிதத் தன்மை இல்லை... அதிகாரத்தின் ஆணவம் மட்டும் இருந்தது.

அவர்களின் தாய் மீனா கதவின் அருகில் நின்றுகொண்டிருந்தாள். அவளது கைகள் நடுங்கின. அவளது கண்களில் சொல்ல முடியாத அச்சம் இருந்தது. அருள் மட்டும் அமைதியாக இருந்தார். அவர் குழந்தை களை ஒரு முறை பார்த்தார். அந்த பார்வையில் சொல்லப்படாத பல வார்த்தைகள் இருந்தன.

ஒரு தந்தையின் அன்பு.
ஒரு மனிதனின் பயம்.
ஒரு பிரிவின் அமைதியான ஒப்புதல்.

பின்னர் அவர் அழைத்துச் செல்லப்பட்டார். அந்த இரவு முடிந்தபோது,

அப்பா மட்டும் வீட்டிற்குத் திரும்பவில்லை. அதன்பிறகு அவரைப் பற்றி எந்தச் செய்தியும் இல்லை. மாதங்கள் கடந்து சென்றன. பின்னர் ஒரு செய்தி வந்தது. அவர் விசாரணைக்காக தடுத்து வைக்கப் பட்டிருந்தார்.

ஆனால் அந்த விசாரணைகள்...

சாதாரண விசாரணைகள் அல்ல; என்று பலர் மெதுவாகச் சொன்னார் கள். சில கதைகள் இரவுகளில் கிசுகிசுக்கப்பட்டன. சித்திரவதைகளின் நடுவில் ஒரு காகிதம் எழுதப்பட்டதாக. அந்தக் காகிதம் பின்னர் நீதி மன்றத்தில்

“ஒப்புதல் வாக்குமூலம்” என்று அழைக்கப்பட்டது. அந்த ஒரு காகிதம் ஒரு மனிதனின் வாழ்க்கையை முடிவு செய்தது.

அருள் ஆயுள் தண்டனை கைதியாக மாற்றப்பட்டான்.

சிலர் அமைதியாகச் சொல்வார்கள் அந்தக் காலத்தில் சில மனிதர் களின் கதைகள் அவர்கள் செய்ததாகக் கூறப்பட்ட குற்றங்களைப் பற்றியவை அல்ல; அவர்கள் யார் என்பதைக் பற்றியவை.

அவர்களின் மொழி.
அவர்களின் அடையாளம்.
அவர்கள் தமிழர்கள் என்பதையே.

ஆனால், அந்த வீட்டில் அவர் இன்னும் ஒரு பெயரால் தான் அழைக்கப்படுகிறார்.

“அப்பா.”

அந்த வீட்டின் உயிர் அவர்களின் தாய் மீனா. அவள் பல வருடங்கள் காத்திருந்தாள். சிறைகளின் வாசல்களில் நின்றாள். அரசு அலுவலகங் களின் கதவுகளைத் தட்டினாள். மனுக்கள் எழுதினாள்.

“என் கணவரை ஒரு தடவை பார்க்க விடுங்கள்” என்று கேட்டாள்.

அந்தக் காத்திருப்பு அவளது உடலை மெதுவாக உடைத்தது. ஒரு நாள்... நோயால் பலவீனமடைந்த அவள் அமைதியாகக் கண்களை மூடினாள். அந்த நாளிலிருந்து அந்த வீட்டில் இரண்டு குழந்தைகள் மட்டும்.

தொலைவில் ஒரு சிறைச்சாலை இருக்கிறது. அது அவர்களின் கிராமத்திலிருந்து மிகவும் தூரம். சிங்களவர்கள் வாழும் ஒரு நகரத்தின் அருகில். அந்த உயர்ந்த சுவர்களுக்குள் ஒரு தந்தை வாழ்கிறார்.

அந்த சுவர்களின் வெளியே இந்த சிறிய வீட்டில் இரண்டு குழந்தைகள் வாழ்கிறார்கள். அவர்களுக்குள் இருக்கும் தூரம் ஒரு சாலையின் தூரமல்ல.

அது...!
காலத்தின் தூரம்.
நீதியின் தூரம்.
வாழ்க்கையின் தூரம்.

இரவு கிராமத்தின் மீது இறங்குகிறது. வானத்தில் நட்சத்திரங்கள் மெதுவாக தோன்றுகின்றன. கவிதாவும் கவினும் எழுந்து வீட்டுக்குள் செல்கிறார்கள். ஆனால், அந்த வீட்டின் வாசலில் இன்னும் ஏதோ ஒன்று தங்கி நிற்கிறது.

ஒரு காத்திருப்பு.
ஒரு நம்பிக்கை.

ஒருநாள் அந்த மண் சாலையில் இருந்து ஒரு மனிதன் நடந்து வந்து அந்த கதவைத் தட்டுவார். அந்த நாளில் இந்த வீட்டின் அமைதி உடையும். அந்த நாளில்,

“அப்பா” என்ற வார்த்தை ஒரு நினைவாக அல்ல; ஒரு உயிருள்ள உண்மையாகத் திரும்பி வரும். அந்த நாளை நோக்கி இன்று வரை அந்த வீட்டின் வாசலில் இரண்டு நிழல்கள் இன்னும் காத்திருக்கின்றன.

வாக்குமூலம்

முக்கியமான, குற்றமற்றவர்,
சுட்ட பொய்குற்றம் மண்ணின் இருட்டில் ஒளிந்தது.
சிதறிய ஒப்புதல் வாக்குமூலம்
சத்தியத்தின் சடலமாய் நெஞ்சில் நின்றது.

அரசியல் கைதிகள் ஆயுள் தண்டனையில்,
மௌனச் சப்தம் நெஞ்சில் உருகி சிதறியது.
நேரம் கடந்து விடுதலை கோரியும்,
மண்ணின் வாசலில் நம்பிக்கை தீயம் போல வலிந்து நின்றது.

விழிகள் திறந்தும், கண்கள் அழும்,
சோர்ந்த வீரத்தின் நினைவு பேசாமல் நின்றது.
அறிவின் வெளிச்சம் மறைந்த இடங்களில்,
மௌனம் கூட எதிர்பார்ப்பின் தீபமாக எரிகிறது,
போரின் குரல், சிந்தனையின் உற்சாகம்
எங்கும் மெல்லிசையாய் நின்றது.

முல்லைத்தீவின் அந்தக் கிராமத்தில் இறங்கிய முன் மாலை நேரம். மண்ணின் வாசனை இன்னும் காற்றில் இருந்தது. மழை பெய்து இரண்டு நாட்களே ஆகிவிட்டதால், வீட்டின் முன் இருந்த மண் பாதை இன்னும் ஈரமாகவே இருந்தது.

‘மங்களப் பாட்டியின் நிலாச் சோறு’



அந்தப் பாதையின் முடிவில் ஒரு பழைய மண்வீடு இருந்தது. வீட்டின் முன் ஒரு பெரிய மாமரம். அந்த மரம் இந்த வீட்டை விடப் பழமையானது என்று கிராமத்தில் சொல்வார்கள்.

மாமரம்...

இந்த வீட்டில் பிறந்த குழந்தைகளின் அழுகையைக் கேட்டிருக்கிறது. இந்த வீட்டில் நடந்த திருமணங்களின் சிரிப்பைக் கேட்டிருக்கிறது. இந்த வீட்டின் மீது விழுந்த குண்டுகளின் அதிர்ச்சியையும் கேட்டிருக்கிறது. அந்த வீட்டில் இப்போதும் ஒருவர் வாழ்கின்றார்.

மங்களம் பாட்டி.

அந்த வீடு அவளுடைய வாழ்நாளின் பெரும் பகுதியைத் தாங்கி நின்ற வீடு. அவள் கணவன் ஆறுமுகம் ஐயா உடன் வாழ்ந்த வீடு. அவர்களின் முதற் குழந்தை பிறந்த வீடு. அவர்களின் மகன், மகள் முதல் முறை

யாக நடக்கக் கற்றுக்கொண்ட வீடு. பேரப்பிள்ளைகள் மாமரத்தடியில் ஓடி விளையாடிய வீடு.

பிறகு காலம் மாறியது. புதிய வீடுகள் கட்டப்பட்டன. சிமெண்ட் சுவர்கள், கற்கள், பெரிய சாளரங்கள் என மாறின. வெளிநாடுகளில் வாழும் பிள்ளைகள் பணம் அனுப்பிக் கிராமத்தில் பெரிய வீடுகள் எழுப்பினார்கள். ஆனால் மங்களம் பாட்டி அந்த மண் வீட்டை விட்டுச் செல்லவில்லை.

"இந்த வீடு உயிரைக் காத்த வீடு," என்று அவள் எப்போதும் சொல்லுவாள். அந்த மாலை அவ்வீட்டின் முன் வழக்கத்தைவிட அதிகமான காலடிச் சத்தம் கேட்டது. பல வருடங்களுக்குப் பிறகு சில இளைஞர்கள் அந்தக் கிராமத்துக்கு வந்திருந்தனர்.

அவர்கள் சிறுவர்களாக இருந்தபோது போர் அவர்களை உலகம் முழுக்கச் சிதறடித்தது. இப்போது அவர்கள் மீண்டும் இந்த மண்ணைத் தேடி வந்திருந்தனர்.

அரவிந்த் – கனடாவில் வளர்ந்தவன்.
கௌஷிக் – பிரான்சில் வளர்ந்தவன்.
தர்ஷன் – ஆஸ்திரேலியாவில் வளர்ந்தவன்.

அவர்களோடு கிராமத்தில் பிறந்த சில சிறுவர்களும் வந்திருந்தனர்.
கீர்த்தன்.
சஞ்சய்.

அவர்கள் எல்லோரும் மாமரத்தடியில் நின்றனர்.

அரவிந்த் மெதுவாக அழைத்தான்.

"பாட்டி....."

மங்களம் பாட்டி கதவின் அருகில் வந்து பார்த்தாள்.

"யாரு...?"

“நான் அரவிந்த்...

சந்திரன் அண்ணாவின் மகன்.” ஒரு நொடிக்குள் அவள் கண்கள் கலங்கின.

பிறகு அவள் முகத்தில் மெதுவாக ஒரு ஒளி.

“அப்பா... நீங்களா?” அந்த மாலை மாமரத்தின் கீழே ஒரு சிறிய வட்டம் உருவானது.

மங்களம் பாட்டி ஒரு பெரிய பாத்திரத்தில் நிலாச்சோறு கொண்டு வந்தாள். அவள் கைகளால் சாதத்தைக் குழைத்து உருண்டை பிடித்து ஒவ்வொருவருக்கும் கொடுத்தாள். “கையில் சாப்பிடுங்கப்பா.” மண்ணின் வாசனையும் சாதத்தின் கூடும் அந்த இரவின் அமைதியும் ஒன்றாகக் கலந்தது.

சில மணிநேரம் யாரும் பேசவில்லை.

பிறகு கிராமத்தில் பிறந்த கீர்த்தனன் கேட்டான்.

“பாட்டி... ஏன் இன்னும் இந்த மண் வீட்டில்தான் இருக்கிறீங்க?” பாட்டி மெதுவாகச் சிரித்தாள்.

“இந்த வீடு எத்தனை பேரோட உயிரைக் காத்தது தெரியுமா?” அவர்கள் அமைதியாக அவளைப் பார்த்தனர்.

“போர் வந்தப்போ....” அவள் தொடர்ந்தாள்.... “முதல்ல குண்டு பள்ளிக்கூடத்தில விழுந்தது.” சஞ்சய் உடனே கேட்டான். “பள்ளிக் கூடத்திலா?”

“ஓம்.”

“அங்க குழந்தைகள் இருந்தாங்களா?” பாட்டி ஒரு நொடி பேசாமல் இருந்தாள்.

“நான் பார்த்தேன்.”

அந்த மாமரத்தின் கீழே அமைதி பரவியது. காற்று மட்டும் வீசியது. மங்களம் பாட்டி மெதுவாகப் பேசத் தொடங்கினாள். “ஒரு நாள் மக்கள் எல்லாரும் ஓடிக்கொண்டிருந்தாங்க.”

“வானிலிருந்து குண்டுகள் விழுந்தன.”
“நிலம் பல இடங்களில் கிழிந்து போனது.”
“மக்களும் கிழிந்தாங்க.”
அரவிந்த் கிசுகிசுப்பாய்க் கேட்டான்.
“பாட்டி... நாங்கள் வெளிநாட்டில் இந்தக் கதைகள் கேள்விப்பட்டோம்.”
“அது உண்மையா?”
மங்களம் பாட்டி அவனை நேராகப் பார்த்தாள்.
“நீங்கள் கேட்டது ஒரு கதை.”

“நாங்கள் வாழ்ந்தது வாழ்க்கை.” “சில குண்டுகள் விழுந்ததும் நூறு சிறிய குண்டுகளாக உடையும்.”

தர்ஷன் மெதுவாகச் சொன்னான்.
“கிளஸ்டர் குண்டு...” பாட்டி தலையை ஆட்டினாள்.
“அப்போ அந்த பெயரே தெரியாது.”
“சில பேர் தீப்பிடிச்ச மாதிரி ஓடினாங்க.”
“பின்னாடி தான் தெரிஞ்சது.”
“வெள்ளைப் பாஸ்பரஸ் என்று”

சஞ்சய் பயந்து கேட்டான். “அது மனிதர்களுக்கு மேல பயன் படுத்துவாங்களா?”

பாட்டி சொன்னாள். “நான் பார்த்தேன்.”
“உணவு இல்லை.”
“தண்ணீர் இல்லை.”
“மருந்து இல்லை.”
“காயமடைந்தவர்களுக்கு மருத்துவர் இருந்தாலும் மருந்து இல்லை.”

அரவிந்த் மெதுவாக கேட்டான்.
“பாட்டி... அப்போ மக்களை யார் காப்பாத்தினாங்க?”

மங்களம் பாட்டி உடனே சொன்னாள்.

“போர் மறவர்கள்.” “அவர்கள் தங்கள் உயிரை மறந்தவர்கள்.”

“ஒரு நாள்...”

அவள் மெதுவாகச் சொன்னாள்.

“ஒரு இளைஞன் காயமடைந்த குழந்தையைக் கையில் தூக்கிக் கொண்டு ஓடினான்.”

“அவன் பின்னாடி குண்டு விழுந்தது.” “ஆனா குழந்தையைக் கீழே வைக்கவில்லை.”

“அவன் விழுந்த பிறகும் குழந்தை உயிரோட இருந்தது.”

மாமரத்தின் கீழே பேய் அமைதி. நிலா மெல்ல மெல்ல மேலே ஏறிக் கொண்டிருந்தது.

அரவிந்த் மெதுவாகக் கேட்டான்.

“பாட்டி.... உலகத்துக்கு இந்தக் கதைகள் தெரியுமா?”

மங்களம் பாட்டி சிரித்தாள்.

“அந்த போர்

சாட்சிகளற்ற போர்.”

“ஊடகங்களை உள்ளே விடவில்லை.”

கீர்த்தன் கேட்டான். “அப்போ இந்த கதைகளை யார் சொல்லப் போறாங்க?”

மங்களம் பாட்டி மெதுவாக எல்லோரையும் பார்த்தாள்.

வெளிநாட்டில் வளர்ந்த இளைஞர்களும். இந்த மண்ணில் பிறந்த குழந்தைகளுமாக....

பிறகு இரகசியமற்றுச் சொன்னாள்.

“நீங்கள்தான்.” சில நிமிடங்கள் அமைதி.

பிறகு அரவிந்த் சொன்னான்.

“பாட்டி.... நாங்கள் வெளிநாட்டில் இந்த கதைகளைக் கேட்டோம்.”

“ஆனா இங்க பிறந்த இந்த பிள்ளைகளுக்கு தெரியவே இல்லை.”

மங்களம் பாட்டி கூர்ந்து பார்த்தாள். பிறகு மெதுவாக சொன்னாள்:

“வரலாறு எழுதப்படுவதற்கு முன் யாராவது அதை நினைவில் வைத்திருக்கணும்.” அவள் குரல் மெதுவாகத் தளர்ந்தது. பிறகு அவள் கடைசி வார்த்தையையும் சொன்னாள்.

“நான் இன்னும் உயிரோட இருக்கிறேன்.... அதற்காகத்தான்.”

மண்ணின் சாட்சியங்கள்

சிதைந்த ஊர்களில் சுவாசிக்கும் மக்கள்,
இனத்தின் நினைவுகள் நெஞ்சில் ஒளிந்தது.
தோழர் சடலங்களின் நிழலும்
மௌன குரலில் துணிந்து நின்றது.

தலைமுறை கடந்து உயிர்கள் பேசும் போது,
வாழ்வின் சாட்சி மறைந்து காத்திருக்கும்.
போரின் பயங்கரம் எழுத்து போல உலவும்,
மண்ணின் கதைகள் இன்னும் காற்றில் உயிரோடு ஒலிக்கும்.

அழுகை மறைந்த கண்கள், மறைந்த வாக்குமூலங்கள்,
நம்பிக்கையின் தீபம் கரைசல் போல, நெஞ்சில் எரிகிறது.
வெள்ளை நிழல்களும், சந்தேகத்தின்
கண்ணோட்டத்தில் பேசுகின்றன,
மக்கள் உயிர் கொண்டிருக்கின்றனர்,
ஆனால் சாட்சி... தலைமுறை கடந்து வாழுமா?